Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ திருமண மண்டபம்
❖ திருமண மண்டப அலங்காரம்
❖ மணப்பெண் அலங்காரம்
❖ திருமண கார் சேவை
❖ Honey moon room
(C/2278)
E.Mail - info@cityhoteljaffna.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969

முரசு - 03 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | தை 09 செவ்வாய்க்கிழமை (22.01.2013) | பக்கங்கள் 20 | ஓசை - 114
















# உள்நாட்டு விடயத்தில் தேவையற்ற தலையீடு

## நவிப்பிள்ளைக்கு அரசு கண்டனம்

(கொழும்பு)

இலங்கை உள்நாட்டு விடயம் தொடர்பாக தேவையில்லாத விமர்சனத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மேற்கொண்டுள்ளதாக அரசாங்கம் தனது கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளிவிவகார அமைச்சின் பதில் செயலாளர் செனவிரத்னபுள்ளே மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் பதவி விலக்கல் மற்றும் மொஹான பீரிஸ் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டமை தொடர்பாக வெளியிட்ட அறிக்கை கண்டனத்திற்குரியது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கிச்சூட்டில் பெண் சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம், அச்செழு இராணுவ முகாமில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இராணுவ வீராங்கனை ஒருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சக வீராங்கனையின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததை அடுத்தே இந்த மேற்படி வீராங்கனை காயமடைந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

அச்செழு பிரதேசத்திலுள்ள 511 ஆவது படைப்பிரிவு முகாமில் நேற்று பிற்பகல் 2.00

(19) ஆம் பக்கம் பார்க்க

## குண்டுவெடிப்பில் இராணுவ வீரர் காயம்

பலாலி இராணுவ முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இராணுவ முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணியில் இராணுவத்தின் பொறியியல் பிரிவு படையினர் ஈடுபட்டிருந்த நிலையிலேயே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## கைதான பல்கலை மாணவரில் இருவர் இன்று விடுதலை?

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வெலிக்கந்தவில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரில் இருவர் இன்று விடுதலை செய்யப்படவுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் பவானந்தன் மற்றும் விஞ்ஞான பீடத்தின் மூன்றாம் ஆண்டு மாணவனான சொலமன் ஆகிய இருவருமே இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட மேற்படி மாணவர்கள் வவுனியா குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் அங்கிருந்து வெலிக்கந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை குறித்த கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் இந்தியா

## கேட்கிறார் சுரேஷ் எம்.பி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம், தமிழர்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றாதிருப்பதை ஊக்குவிக்கும் வகையில் இலங்கை தொடர்பான இந்திய அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கை அமைந்துவிட்டதாக தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்தியா, இலங்கை குறித்த தனது கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இல்லாத நிலையில் இலங்கை தொடர்பான தனது கொள்கையை புதிய நிலைமைக்கேற்ப இந்தியா மாற்றியமைத்துக்கொள்ள வேண்டுமென அவர கூறியுள்ளார்.

இது தொடர்பில் சுரேஷ் எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது இந்தியா இரகசியமாகவும் வெளிப்படையாகவும் இலங்கைக்கு ஆதரவளித்தது. யுத்தம் முடிந்த பின், தமிழ் சமுதாயத்தின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை மீறியுள்ளது.

சீனாவின் ஆதரவு கிடைப்பதனால் ஜனநாயக நாடுகளுக்கு எதிராக நிற்கும் துணிவை இலங்கை பெற்றுள்ளது. இலங்கை அரசாங்கம் அமெரிக்காவையோ ஐரோப்பாவையோ கணக்கில் எடுப்பதில்லை. தம்மால் இந்தியாவையும் சமாளிக்க முடியுமென அவர்கள் கூறுகின்றனர்.

சீனா தம்மோடு நிற்பதனால் ஐ.நா.வையும் சமாளிக்க முடியுமென அவர்கள் நினைக்கின்றனர். உட்கட்டமைப்பு விருத்தி பற்றி அவர்கள் பெரிதாக கூறுகின்றனர். ஆனால், வீதிகள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆயுர்வேத மருத்துவர் கழுத்து நெரித்து கொலை

### கொக்குவிலில் கொடூரம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி வீதியில் வசித்துவந்த ஆயுர்வேத மருத்துவர் ஒருவர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

வீட்டில் அவர் தனியாக இருந்தபோது நேற்று மதியம் அவரின் வீட்டுக்குள் புகுந்த சிலர் மின்சாரக் கேபிளினால் அவரின் கழுத்தை நெரித்து கொலை செய்ததாக சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவரைக் கொலைசெய்த பின்னர் வீட்டிலிருந்த சில தங்க நகைகளையும் திருடிச்சென்றுள்ளனர்.

இவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைப்பதற்கு கோப்பாய் பொலிஸார் ஏற்பாடு செய்தனர். (137,25)

## பொன். காந்தன் கைது உறுதிப்படுத்த முடியாதாம்

### கூறுகிறார் சிறிதரன் எம்.பி.

(கிளிநொச்சி)

தனது பிரத்தியேக செயலாளர் பொன்னம்பலம் லட்சுமிகாந்தன் (பொன். காந்தன்) கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக உறுதிப்படுத்த முடியாது. கடந்த 13 ஆம் திகதியிலிருந்து அவருடன் தொடர்பு இருக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேலும் தெரிவித்ததாவது,

பொன்காந்தன் வவுனியாவில்

(19) ஆம் பக்கம் பார்க்க



## 48 மணிநேர தடுப்புச் சட்டம் எதிர்த்து துண்டுப் பிரசுரங்கள்

(கொழும்பு)

சந்தேக நபர் ஒருவரை நீதிமன்றத்தின் உத்தரவின்றி பொலிஸார் 48 மணிநேரம் தடுத்துவைக்கும் வகையிலான புதிய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று துண்டுப்

(19) ஆம் பக்கம் பார்க்க

இன்றைய 5ஆம் பக்கத்தில்...

## விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

19


■ வே. அர்ச்சுணன்



இறைவனிடம் (நவபால
பொறுப்பாளர்கள் சென்
எல்லாவற்றிற்கும் ஒப்
ஆனால் நடைமுறையில்
செய்துகொண்டிருப்பார்.
தமிழ்ச்செல்வனாலு
முடியாது. ஏனெனில் இ
நிறுவனத்தின் முக்கிய
பெயரளவில்
இருந்தபோதிலும்
எனப்படுகின்ற

# கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம்; வட்டுக்கோட்டையில் பெருவெற்றி

## ஏனைய கிராமங்களுக்கும் விஸ்தரிக்க திட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியன் வங்கிக்கிளையின் இரண்டாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வட்டு வடக்குக் கிராமத்தில் மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நேற்று முற்பகல் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இந்தியன் வங்கிக் காரியாலயத்தில் 77 பயனாளிகளுக்கு 4.23 மில்லியன் ரூபா வாழ்வாதாரக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ். இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட்டுக்கோட்டை வடக்குக் கிராமம் இந்தியன் வங்கியின் மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தத்தெடுக்கப்பட்டு முதற் கட்டமாக 77 பயனாளிகளுக்கு 4.23 மில்லியன் ரூபா செலவில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கடன் திட்டத்தினை யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆரம்பித்துவைத்தார். ஏற்கனவே இந்தியன் வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டி வட்டு மேற்குக் கிராமம் கடந்த ஆண்டு இந்தக் காலப் பகுதியில் இந்தியன் வங்கியின் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தத்தெடுக்கப்பட்டு இந்த மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டம் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

இதன்கீழ் இந்தக் கிராமத்தினை முன்னேற்றிட 426 பயனாளிகளுக்கு 41 மில்லியன் ரூபா கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன்படி கடன்களைப் பெற்ற பயனாளிகளில் 99.5 வீதமான பயனாளிகள் கடன்களைத் திருப்பிச் செலுத்தியிருப்பது இத்திட்டத்தின் வெற்றியாகக் கருதப்பகிறது.

இதன்கீழ் 2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் முதலில் 77 பயனாளிகளுக்கும் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில் 282 பயனாளிகளுக்கு 24.61 மில்லியன் ரூபா கடன்கள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல் இத்திட்டம் வெற்றியளித்து வருவதை அடுத்து யாழ். மாவட்டத்தின் கிராமங்களும் இவ்வாறு இந்தியன் வங்கியினால் தத்தெடுக்கப்பட்டு அபிவிருத்தியடைய உதவித்திட்டமிட்டிருப்பதாக யாழ். இந்தியன் வங்கிக்கிளையின் முகாமையாளர் சந்திரசேகர் தெரிவித்தார்.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, கடல்தொழில், சிறுகைத் தொழில், குடிசைக் கைத்தொழில், வியாபாரம் உள்ளிட்ட திட்டங்களின் மூலமாகவே இந்தக்கிராம அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சுமார் 106 வருடங்கள் இந்தியாவில் கிராமிய அபிவிருத்தித் திட்டத்தில் அனுபவம் வாய்ந்த இந்தியன் வங்கி வடக்கிலும் இத்தகைய கிராமிய அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், யாழ். அரச அதிபர் சுந்தரம். அருமைநாயகம், சங்கானை பிரதேச செயலர் சோதிநாதன் ஆகியோர் பயனாளிகளுக்கு கடன் தொகைகளை வழங்கிவைத்தனர். இந்நிகழ்வில் வட்டு வடக்குக் கிராமமக்கள், கிராம அலுவலர்கள், இந்தியன் வங்கியின் அதிகாரிகள் ஊழியர்கள் கலந்து கொண்டனர். (02,25,பா)

## கால்கோள் விழா

(நயினாதீவு)

நயினாதீவு கனிஷ்ட மகாவித்தியாலயத்தின் தரம் - 01 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த வெள்ளிக் கிழமை காலை அம்பலவாணர் நூலக மண்டபத்தில் நடைபெற்றது. அதிபர் ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புலம்பெயர் வாழ் கனடாவைச் சேர்ந்த த.சிவானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (175)

# கல்வி நிர்வாக சேவைக்கு உத்தியோகத்தர்கள் நியமனம்

வடமாகாண கல்வி அமைச்சிற்கு இலங்கைக் கல்வி நிர்வாக சேவை தரத்தில் தகுதி நிலைபெற்ற 17 உத்தியோகத்தர்கள் நியமனம் பெற்றுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதம் நேற்று வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியினால் வழங்கப்பட்டது. புதிதாக நியமனம்பெற்றோரின் விபரங்கள் பின்வருமாறு,

1.சிவபாதசுந்தரம் தர்மசீலன் - மாகாணக் கல்வி அமைச்சு, 2. தில்லைநாதன் தர்மலிங்கம் - மாகாணக் கல்வி அமைச்சு, 3. கிருஷ்ணபிள்ளை பிரதீபா - துணுக்காய் வலயம், 4. நர்மதா பரமேஸ்வரன் - துணுக்காய் வலயம், 5. தெய்வேந்திரம் தேவதாஸ் - முல்லைததீவு வலயம், 6. நடராசா காண்டீபன் - முல்லைத்தீவு வலயம் 7. ஜெனால்ட் அன்ரனி - மடு வலயம், 8. அழகேந்திரராஜா சுபாகரன் - மடு வலயம், 9. நாகப்பர் கந்ததாசன் - மடு வலயம், 10. தர்மலிங்கம் மயூரன் - துணுக்காய் வலயம், 11. சுப்பிரமணியம் சிறிகுமரன் - கிளிநொச்சி வலயம், 12. சிவபாதரட்ணம் சிவசிவ - வவுனியா வடக்கு வலயம், 13. சுதர்ஷினி சிறிகாந்தன் - மாகாணக் கல்வி அமைச்சு, 14. சுகந்தினி ஜைகீசன் - வவுனியா வடக்கு வலயம், 15. வாசுகி சுதாகர் - மடு வலயம், 16. சின்னத்துரை தேவகுமாரன் - கிளிநொச்சி வலயம், 17. உதயகுமாரி விவேகானந்தராஜா - வவுனியா வடக்கு வலயம்.

# வீதி விபத்தில் மூவர் காயம் புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

தனியார் பேருந்துடன் இராணுவத்தினரின் தனியார் பேருந்து மோதியதில் மூவர் படுகாயம அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழிலிருந்து புன்னாலைக் கட்டுவன் நோக்கி பயணிகளை ஏற்றிச்சென்ற தனியார் பேருந்துடன் நேற்று மதியம் 3.30 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் பயணிகள் தரிப்பிடத்தில் இறக்கிவிடும் போது. பலாலியில் இருந்து இராணுவத்தினரை ஏற்றிவந்த பேருந்து நேருக்குநேர் மோதியதில் இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில், குரும்பசிட்டி கிழக்கு பகுதியைச் சேர்ந்த செலவரத்தினம் பத்மராணி (வயது 38) ஊரெழு சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த குணரத்னம் ரசிராஜ் (வயது-29) ,மற்றும் பேருந்து நடத்துனரான ஜெய்கணேஷ் (வயது-37) ஆகிய மூவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (25)

# வடக்கில் கைதானவர்கள் "பூஸா" சிறைக்கு மாற்றம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் வைத்து கைதுசெய்யப்பட்ட 44 பேரும் காலி பூஸா சிறைச்சாலைக்கு மாறறப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் பி.பி.சி.யின் சிங்கள சேவையான "சந்தேஷிய" தெரிவித்துள்ளதாவது,

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை விடுதலை செய்வதற்கு முன்வருமாறு கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தங்களிடம் கேட்டுக்கொண்டுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி தங்கவேல் கனகராஜ் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டவர்கள் தங்களுடைய பொறுப்பின் கீழ் இல்லை என்று புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராட்சி தெரிவித்துள்ளார். இவர்கள் தொடர்பிலான விசாரணைகள் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் கீழ் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முல்லையில் தொடரும் இந்திய மீனவர் அத்துமீறல்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவும் இந்திய மீனவர்கள் றோலர் படகுகளின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் இப்பகுதி மீனவர்களின் தொழில்வளம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

3 வருடகாலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்வதால் தாம் வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கும் இப்பகுதி மீனவர்கள் தமது கஷ்டத்தில் யார் பங்கெடுப்பது என ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் 25 ரோலர் படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் இரவோடு இரவாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் விடியும் பொழுதில் தப்பிச் சென்றுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இக்கடற்பரப்பில் இறால் சீசன் அதிகரித்துள்ளதால் மீனவர்கள் இதன் மூலம் பயன்பெற்றுவரும் நிலையில் இந்திய மீனவர்களின் இச்செயற்பாட்டால் தாம் இத்தகைய பயனை அடைய முடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். (04)

# மீன்பிடி வலை உற்பத்திக்கு இந்திய அரசு நிதியுதவி

குருநகர் பகுதியில் அமைந்துள்ள வடகடல் நிறுவனத்திற்கு இந்திய அரசாங்கத்தின் 140 மில்லியன் ரூபா செலவில் வலை உற்பத்தி இயந்திர உபகரணங்கள் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இந்தியத் துணைத்தூதர் வி.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இந்தியன் வங்கிக் கிளையின் இரண்டாம் ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெற்ற மாதிரி கிராம அபிவிருத்தித்திட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த இயந்திர உபகரணங்கள் பொருத்தும் வேலைகள் நிறைவு பெற்றதும் பெப்ரவரி மாதத்தில் இருந்து இந்த நிறுவனம் புனரமைக்கப்பட்டு மீளவும் தனது முழுமையான செயற்பாட்டை ஆரம்பிக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்தி வேலையும் இந்திய அரசின் நிதியுதவியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்ததுடன் வடபகுதியில் இந்திய அரசாங்கம் யுத்தம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து 80 ஆயிரம் விவசாயக் கருவிகளையும் 500 உழவு இயந்திரங்களையும் 175 படகுகளையும் (மன்னாருக்கு) இந்திய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் வழங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னதாக வடக்கில் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் 11 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து முடிக்கும் என்றும் இந்திய துணைத்தூதர் மேலும் தெரிவித்தார். (பா)

# திண்மக்கழிவு முகாமைத்துவம் கல்லுண்டாய் வெளியில் துரிதம்



கல்லுண்டாய் வெளியில் கழிவுகள் கொட்டப்பட்டு மேடாகக் காணப்பட்ட இடத்தை யாழ். மாநகர சபை இயந்திரங்கள் மூலம் தட்டிப் பரவியுள்ளது. இப்பகுதியில் இனிவரும் காலங்களில் சுகாதாரப் பாதிப்புக்கள் ஏற்படாமல் பாதுகாப்பதற்குத் துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் கொட்டப்படும் திண்மக் கழிவுகள் உடனுக்குடன் பரவப்பட்டு கிருமிநாசினி தெளிக்கப்பட்டு அதற்குமேல் மணல் போட்டு மூடப்பட்டுவருகிறது. அத்துடன் தொழிலாளர்களைக் கொண்டு காற்றினால் பரவப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள் சேகரிக்கப்படுகிறது. கழிவுகள் எரிப்பது நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 24 மணிநேரமும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள காவலாளிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# பாடசாலையில் ஆலய தரிசனம் மாணவர்களுக்கு வரப்பிரசாதம்

## - பேராசிரியர் மா.வேதநாதன் -

(யாழ்.நிருபர்)

இந்தியாவில் சிதம்பர நடராஜப் பெருமானைத் தரிசிப்பது போன்ற உணர்வினை வைத்தீஸ்வராக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த நடராஜர் ஆலயதரிசனம் தருகிறது. இக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தினமும் இத்தரிசனம் ஒரு வரப்பிரசாதமாக, அருட்கடாட்சமாக அமைந்துள்ளது என யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தெரிவித்தார்.

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் புதிதாக கட்டப்பட்ட வைத்தீஸ்வரன் ஆலய குடமுழுக்கு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் மகேந்திரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் மா.வேதநாதன் தொடர்ந்து பேசுகையில்,

இன்றைய மாணவர் சமூகத்தில் ஆன்மீக நாட்டம் அருகி வருகிறது. ஆலய வழிபாட்டில் ஈடுபாடு காட்டும் இளைய தலைமுறையினர் மிகவும் குறைந்தளவினராகவே காணப்படுகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் மாணவர் மத்தியில் ஆன்மீக ஈடுபாட்டையும், இறைபக்தியையும் வளர்க்கும் நோக்குடன் மிக அற்புதமான முறையில் பாடசாலை முகப்பில் இவ் ஆலயம் அமைந்துள்ளது.

நாயன்மார் நால்வரும் வரவேற்க நடராஜப்பெருமான் சிதம்பரத்தில் காட்சியளிப்பதைப் போன்று இக்கல்லூரியிலும் வைத்தீஸ்வரப் பெருமானை நான்கு நாயன்மார்களும் முகப்பு வாயிலில் வரவேற்கும் காட்சி அழகாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மகுட வாசகமான 'மெய்ப்பொருள் காண்பதறிவு' என்பதனையே இக்கல்லூரியும் தனது மகுட வாசகமாகக் கொண்டு நூறு வருடங்களைக் கடந்து வரலாற்றுப் பெருமை மிக்க கல்லூரியாக விளங்குகிறது எனக் குறிப்பிட்டார்.

அகில இலங்கை திருமுறை மன்றத்தலைவர் என்.பேரின்பநாயகம், வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நா.வன்னியசிங்கம், யாழ். மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ்.தவபாலன் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (10)

# கலாசார சீரழிவைத் தடுக்க சமூகசேவைகள் அமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் இடம்பெறும் கலாசார சீரழிவுகளை தடுக்க சமூக சேவை அமைப்புக்கள் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி யாழ். மாநகரசபை அலுவலகத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் சமூக சேவை பிரதிநிதிகளும், பொலிஸ் உயரதிகாரிகளும், குருநகரைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மாநகரசபை உறுப்பினர்களுடன் கலாசார சீரழிவு தொடர்பான சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பில் ஆலய திருவிழாக்காலங்களில் வீதிகளின் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறான முறையில் அனுமதிஇன்றி ஒலிபெருக்கி பாவிப்பது, மது போதையில் இளைஞர்களுடன் இளைய சமூகத்தினரும் முறையற்ற செயல்களில் ஈடுபடுவது மற்றும் இரவு நேரங்களில் குடியிருப்புள்ள ஒரு சில மறைவிடங்களிலும் ஆலயங்களின் அருகேயும் மது அருந்திவிட்டு கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்கும், அயலவர்களுக்கும் இடையூறு விளைவிப்பது போன்ற செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு மேற்குறிப்பிட்ட செயல்கள் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கும் முகமாக சமூக சேவை பிரதிநிதிகளால் கருத்து முன் வைக்கப்பட்டது.

இதனைப் பற்றிய விரிவான கலந்துரையாடலின்பின் முதலில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மூலம் இச்செயல்களில் ஈடுபடும் அனைவருக்கும், பொது மக்களுக்கும் தெளிவு படுத்திய பின்பு ஏற்ற நடவடிக்கை எடுப்பதாக மாநகர சபை முதல்வர் தெரிவித்துள்ளார். இதேபோல் ஏனையவர்களும் கலாசார சீரழிவுகளைக் காக்க முனைவது அவசியமாகும் என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (27)



வடமராட்சி கல்வி வலய நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் வடமராட்சி வலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் ஓய்வு பெற்ற பருத்தித்துறை கோட்டக்கல்விப்பணிப்பாளர் பா.ரகுநாதனுக்கு மாலை அணிவித்து கௌரவிப்பதனைக் காணலாம். (109)

# சாரண மாணவர்களுக்கான வருடாந்த செயற்பாடுகள்

(பருத்தித்துறை)

இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறை மாவட்டத்தினால் பாடசாலை மாணவர்களிடையே பேடன் பவல் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் போட்டிகள் மற்றும் வருடாந்த செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பேடன்பவல் தினத்திற்கான போட்டிகள் பிரதேச செயலக ரீதியாக எதிர் வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி பருத்தித்துறை பிரிவுக்கு வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும், கரவெட்டி பிரிவுக்கு கம்பர்மலை வித்தியாலயத்திலும், கோப்பாய் பிரிவுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், மருதங்கேணி பிரிவுக்கு செம்பியன்பற்று அ.த.க பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

இப்போட்டியின் முதல் இரு இடங்களைப் பெறுவோர் மாவட்ட போட்டியில் பங்குபற்ற முடியும். மாவட்டப் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 10 ஆம திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் புதிதாக சாரண தலைவர் பயிற்சிபெற விரும்புவோர் தமது சுய விபரத்தை மாவட்ட தலைமையகத்திற்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் கலைக்கூறு II (Phase II) எதிர்வரும் முதலாம் திகதி முதல் 4 ஆம் திக்தி வரை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதால் இப்பயிற்சி பெற விரும்புவோர் தமது விண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விளையாட்டுப் போட்டி மாவட்ட மட்டத்தில் நடத்தப்படவுள்ளது துடன் விண்ணப்பங்களை எதிர் வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாவட்ட சாரணர் ஆணையாளர் அறிவித்துள்ளார். (109)

# போக்குவரத்திற்கு உதவாத வீதி

(வவுனியா)

வவுனியா மதகு வைத்த குளப்பகுதியிலிருந்து நாக இலுப்பைக்குளம் வரை செல்லும் வீதி போக்குவரத்திற்கு உதவாத நிலையில் மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடாக பயணம் செய்வோர் பல்வேறு, சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர். நீண்ட காலமாக புனரமைக்கப்படாத இவ்வீதி கிரவல் வீதியாகவே காணப்படுவதுடன், குண்டும் குழியுமாக இருப்பதால் மழை காலங்களில் வெள்ளநீர் தேங்கி நிற்கின்றது.

குறிப்பாக இவ்வீதியால் அரச பேருந்துகள் செல்வதால் அவை விரைவில் பழுதடைவதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர். இப்பிரதேச மக்களின் போக்குவரத்து தேவையைக் கருத்திற் கொண்டு குறித்த வீதியை செப்பனிட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (175)

## கால்கோள் விழா

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் தரம் 6 மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

கல்லூரியின் அதிபர் இரத்தினகுமார் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தரம் 6 மாணவர்கள் 7 ஆம் தர மாணவர்களால் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

கல்லூரியின் பகுதித் தலைவர் (தரம் 6, 7) சி.ஜெயரூபன், தரம் 6, 7 இல் கல்வி கற்பிக்கும் வகுப்பாசிரியர் முதலியோர் மாணவர்களை வரவேற்று உரையாற்றினர்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இந்நிகழ்வில் இடம் பெற்றிருந்தன. (17)



கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போது பிரதேச செயலாளர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு அன்பளிப்பை வழங்குவதையும், கலந்து கொண்ட உத்தியோகத்தர்களையும் காணலாம். (90)

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே. அது உன்னை கொன்றுவிடும். கண்ணை திறந்து பார், நீ அதை வென்று விடலாம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வெறும் வசனங்களுக்கு மயங்கியது போதும்!

மிகவிரைவில் கூட்டமைப்பு தீர்க்கமான முடிவொன்றை எடுக்கவுள்ளது. இதற்கு சர்வதேசமும் உறுதுணையாக இருக்கும் என்று திடீரென முழக்கமொன்றை வெளியிட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள். தமிழர்களின் போராட்டத்தில் புது வியூகம் அமைக்கப்படவிருப்பதாகவும் களுவாஞ்சிக்குடி கூட்டத்தில் பேசும்போது அவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் வைத்திருந்த பழைய வியூகம் என்ன? அது ஏன் சரிவராமற் போயிற்று? இந்தத் தீர்க்கமான புதுவியூகம் என்ன? இதை எப்படிச் சாத்தியப்படுத்தப் போகிறார்கள்? அந்தத் திட்டம் என்ன? என்ற கேள்விகளுக்கு வழக்கம்போல அவரது முழக்கத்திலிருந்து எந்த பதிலையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இவர்கள் திட்டத்தையே வெளியே சொல்லாமல் மர்மமாக வைத்திருந்தால் சர்வதேசம் எதற்கென்றுதான் உறுதுணையாக வருவது? "தலைவர் திட்டம் வைத்திருக்கிறார்" என்ற மாயையையே இன்னமும் மக்களிடம் விளாசிக் கொண்டிருக்கலாம் என தமிழரசுக் கட்சியும், தமிழரசுக் கட்சிப் பத்திரிகையும் எப்படி நம்புகின்றன?

இனித்தான் இவர்களது தீர்க்கமான வியூகத்திற்கு சர்வதேசம் உறுதுணையாக வரப்போகிறது என்றால், கிழக்குத் தேர்தல் முடிந்தவுடன் வந்திறங்கப் போவதாகச் சொன்ன சர்வதேசம் எங்கே போய்விட்டது? அந்த வியூகம்தான் என்ன அவ்வளவு ராணுவ ரகசியமா? அதையெல்லாம் பாவப்பட்ட இந்த மக்கள் தெரிந்துகொள்ளக் கூடாதா? ஆபிரிக்கா போய்விட்டு வரும்போது சர்வதேசத்தையும் கூட்டிவந்துவிடப் போகிறார்களா என்ன?

இங்கு தீர்வைக் கொண்டுவருவதற்கு என்ன திட்டம் என்றால், சர்வதேசத்தைக் கொண்டுவருவதுதான் அந்தத் திட்டம் என்கிறார்கள். சரி, சர்வதேசத்தைக் கொண்டுவர உங்கள் திட்டம் என்ன என்றால், தமிழர்களின் போராட்டம் விரிவடைந்து வருகிறது அதைப் பார்த்து சர்வதேசம் வந்துவிடும் என்கிறார்கள். என்ன போராட்டம் விரிவடைந்து வருகிறது? 37 பேர் ஒரு பகல்பொழுதில் உண்ணா விரதமிருந்துவிட்டு எழும்பிப் போனதா?

அல்லது ஆபாசப் படங்களும் சீடிக்களும் வைத்திருந்ததாகக் கைதாகி சிறைக்குச் சென்றுகொண்டிருக்கிறார்களே அந்தப் போராட்டத்தைச் சொல்கிறார்களா? அல்லது பல்கலைக்கழக மாணவர்களின் படிப்பைப் பாழாக்கிவிட்டு, வீரவசனங்களோடு அவர்களது எதிர்காலத்துக்கு இருள்வழி காட்டிக் கொண்டிருக்கிறார்களே அந்தப் போராட்டத்தைச் சொல்கிறார்களா?

இவர்களெல்லாம், தனிநாடு சாத்தியமில்லை என்பதை எப்போதோ உணர்ந்துகொண்டுவிட்ட பிறகும், இத்தனை உயிரிழப்புகளும் பாழடைவும் பேரவலமும் நோக்கிச் சமூகம் செல்வதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருந்தவர்கள்! அல்லது பொய்யான நம்பிக்கைகளைச் சொல்லி மக்களை மேலும் மரணப்பாதையில் முன் தள்ளி விட்டவர்கள்.

அழிவுகள் அவலங்களைப் பாதியிலேயே தவிர்த்துக்கொள்ளக் கூடிய, தீர்வை எடுத்திருக்க வேண்டிய சந்தர்ப்பங்களொன்றையும் பயன்படுத்த எண்ணாத வீம்பிலும் சமூகத்தை அவலப்பட வைத்திருப்பவர்கள் இவர்கள்தான். இப்போதும், போராட்டம் விரிவடைந்து வருகிறது என்ற புளுகையே கூச்சமெதுவுமில்லாமல் அவிழ்த்து விடுகிறார்கள்.

மக்களைக் காக்கும் எந்த ராஜதந்திர வழிமுறைகளும் இல்லாதவர்களிடம் அல்லது தெரியாதவர்களிடம் தங்களை ஒப்புக்கொடுத்துவிட்டு, தடுமாறிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தை மேலும் மேலும் பொய்களாலும், ஏமாற்றுப் பேச்சுக்களாலும் இலவுகாக்கும் கிளிகளாகவே வைத்திருக்கிறார்கள்.

நம் சமூகம் முதலில் தன்னை – தனது பிழைகளை உணர்ந்து கொள்வதற்கான உரையாடல்களைத் திறக்க வேண்டும். அதிலிருந்து, எமது சமூகத்தின் மீட்சிக்கான யதார்த்த அணுகுமுறைகளுக்குச் செல்ல வேண்டும். உள்ளீடு எதுவுமற்ற இவர்களது வெற்று ஜம்பப் பேச்சுக்களிலிருந்து நமது மக்கள் விடுபட வேண்டும். அல்லாமல் நமக்கு மீட்சி இல்லை. - ஆசிரியர்

# பிறக்குமிட சிறப்புச் சுட்டியில் மோசமான நிலையில் இலங்கை

## கருத்துக் கணிப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

2013ஆம் ஆண்டுக்கான பிறக்குமிட சிறப்புச் சுட்டியில் மிக மோசமான நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பிடித்துள்ளது. நான்கு வருடங்களில் இலங்கையின் பொருளாதாரம் இரண்டு மடங்காகிவிடும் எனும் பேச்சுக்களுக்கு மத்தியில் இலங்கை அந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

இந்தக் கணிப்பை 'தி எக்கனமிஸ்ட்' என்ற சஞ்சிகை நடத்தியுள்ளது. 2030ஆம் ஆண்டு வரையான பொருளாதார எதிர்வு கூறல்களின் அடிப்படையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. 2013இல் பிறந்த பிள்ளைகள் முழு மனிதர்களாகும் போது எதிர்கொள்ளவுள்ள சமூக, பொருளாதார நிலைமைகளை இந்த ஆய்வு ஊகித்துள்ளது.

ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் அங்கு வாழும் மக்களின் மகிழ்ச்சிக்கும் தொடர்பு பெரிதாக இல்லையென இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

உதாரணமாக அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய நாடுகள் உலகின் பொருளாதார சக்திகளாக உள்ள போதும் 16ஆம் இடத்தைப் பகிர்ந்துள்ளன. பிரித்தானியா 27ஆம் இடத்தையும் பிரான்ஸ் 26ஆம் இடத்தையும் பிடித்துள்ளது.

சிறிய பொருளாதாரங்கள் முதல் 10 இடங்களைப் பெற்றுள்ளன. சுவிட்ஸர்லாந்து முதலாமிடத்தைப் பெற்றுள்ள நிலையில் இதைத் தொடர்ந்து அவுஸ்ரேலியா, நோர்வே, சுவீடன், டென்மார்க், சிங்கப்பூர், நெதர்லாந்து ஆகிய நாடுகள் தொடர்கின்றன.

சிங்கப்பூர் ஒரேயொரு ஆசிய நாடாகவும் நெதர்லாந்து ஒரேயொரு ஐரோப்பிய நாடாகவும் முதல் 10 நாடுகளுள் அடங்குகின்றன.

வேகமாக வளரும் பொருளாதாரங்களாக பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா போன்ற நாடுகள் முதல் 10 நாடுகளுக்குள் அடங்கவில்லை.

இந்தியா 66 ஆவது இடத்தையும் ரஷ்யா 72 ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

80 நாடுகளை உள்ளடக்கிய இந்த ஆய்வில் நைஜீரியா கடைசி இடத்தை தக்கவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெல்லியடி வர்த்தகருக்கு வரணியில் நிகழ்ந்த விபரீதம்

(நெல்லியடி)

நெல்லியடி வர்த்தகர் ஒருவரை கச்சான் கொள்வனவு செய்ய வருமாறு வரணிக்கு அழைத்தவர்கள் வழங்கிய பானத்தைக் குடித்தவர் தற்போது யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட வர்த்தகர் தெரிவிக்கையில், கடந்த வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அந்த அழைப்பில் கச்சான் கொள்வனவு செய்யலாம் உடன் வரணிக்கு வரவும் என அறிவிக்கப்பட்டது.

உடன் அங்கு மோட்டார் சைக்கிளில் சென்றேன். அவர்களைச் சந்தித்ததும் இரவு 7.00 மணியாகியும் கச்சான் வரும் வருமென எதிர்பார்த்தும் வரவில்லை. சிறிது நேரத்தில் சாராயம் குடிக்க வருமாறு அழைத்தார்கள். சாராயம் நான் குடிப்பதில்லை என்று சொன்னதும் சோடாவை குடிப்பதற்கு தந்தார்கள்.

சோடாவை குடித்ததும் தங்களுடைய நினைத்த வேலை .சரியெனக் கூறிக்கொண்டு சென்று விட்டார்கள் என்றார்.

வர்த்தகர் பின்னர் தில்லையம்பலம் கோவில் வழியாக வரும்போது மயக்கமுற்ற நிலையில் பாதையில் விழுந்து கிடந்து சற்று தெளிவற்ற நிலையில் வீடு வந்து சேர்ந்து தற்போது மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(18)

# வேற்றுக்கிரக உயிரின தடயம் இலங்கையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

உலகில் முதல் தடவையாக வேற்றுக்கிரக உயிர்கள் பற்றிய உறுதியான தடயம் ஒன்றை விஞ்ஞானிகள் இலங்கையில் இருந்து கண்டுபிடித்துள்ளார்கள்.

அரலகன்வில பிரதேசத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட எரிகல் துண்டுகளில் இருந்து விசேட அல்கா வகையொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக பிரித்தானிய - இலங்கை ஒன்றிணைந்த ஆராய்ச்சிக்குழு தெரிவித்துள்ளது.

பக்கிங்காம் பல்கலைக்கழகத்தின் வானசாஸ்திரவியல் பேராசிரியர் சந்திரா விக்கரமசிங்க உள்ளிட்ட குழுவினர் இதனைக் கண்டுபிடித்திருக்கின்றனர். பிரபல ரஷ்யா ருடே இணையத்தளத்தில் பிரசுரமாகியுள்ள கட்டுரை ஒன்றில் இது தொடர்பான தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

வேற்றுக்கிரக உயிரின் இருப்பு தொடர்பான கோட்பாட்டை உறுதி செய்வதற்குரிய தடயம் இலங்கையில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாக ஜேர்னல் ஒவ் கொஸ்மொ லொஜி என்ற சஞ்சிகையானது ஆராய்ச்சியாளர்களை மேற்கோள்காட்டி தெரிவித்திருக்கின்றது.

நாம் வாழும் பிரபஞ்சத்தில் உயிர்கள் உருவாவதற்கு வேற்றுக்கிரக மற்றும் எரிகல் தொகுதிகளே அடிப்படையாக அமைந்துள்ளன என்று அந்த ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதிய கண்டுபிடிப்புகளுக்கமைய பிரபஞ்சத்தில் ஏனைய கிரகங்களில் உள்ள உயிர் பூமிக்கு வந்திருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## ஒளி.தெறிக் கருவிகள் சைக்கிள்களுக்கு அவசியம்

(கொழும்பு)

ஒளி தெறிக் கருவிகள் இல்லாத சைக்கிள்களைச் செலுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒளி தெறிக்கும் கருவிகள் பொருத்தப்படாத சைக்கிள்களைச் செலுத்திச் செல்லுபவர்களுக்கு எதிராக பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளனர். சைக்கிளோட்டிகள் பலர் விபத்துக்களில் உயிரிழந்ததைத் தொடர்ந்து இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

1957ஆம் ஆண்டு மற்றும் 1987ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் ஒளி தெறிப்புக் கருவிகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பஸ்தரை காணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் குடும்பஸ்தர் ஒருவர் காணாமற்போயுள்ளதாக மட்டு. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊறணி, செல்வநாயகம் வீதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே கடந்த சனிக்கிழஙம முதல் காணாமற்போயுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த நபர் சிகரெட் கொம்பனி ஒன்றில் வேலை செய்பவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் கடந்த சனிக்கிழமை காலை வழமைபோல் சிகரெட் விநியோகத்திற்காகச் சென்றுள்ளார். எனினும் குறித்த நபர் இதுவரை வீடு திரும்பவில்லை என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், அவரது முச்சக்கர வண்டியை அன்றைய தினமே காத்தான்குடி நகரில் வைத்து பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இதேவேளை, சிகரெட் கொம்பனியின் உரிமையாளர், 4 இலட்சத்து 95 ஆயிரம் ரூபா பணத்துடன் குறித்த நபர் தலைமறைவாகியுள்ளதாக தெரிவித்து, பொலிஸில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



**இறைவனிடம் (தவபாலன்) தளபதிகள், துறை சார் பொறுப்பாளர்கள் சென்று கதைத்தால் இறைவன் எல்லாவற்றிற்கும் ஓம் என்று தலையாட்டுவார். ஆனால் நடைமுறையில் தான் நினைத்ததை மட்டும் செய்துகொண்டிருப்பார். இறைவனை கட்டுப்படுத்த தமிழ்ச்செல்வனாலும் முடியாது ஜவானாலும் முடியாது. ஏனெனில் இறைவனே புலிகளின் குரல் நிறுவனத்தின் முக்கிய தூணாக விளங்கினார். பெயரளவில் ஜவான் பொறுப்பாளராக இருந்தபோதிலும் நடைமுறையில் இறைவன் எனப்படுகின்ற தவபாலனே இதன் முக்கிய பொறுப்பாளராக விளங்கினார்.**

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 19

**வே. அர்ச்சுணன்**

இந்தியாவின் தமிழ்நாடு வரையும் விடுதலைப் புலிகளின் புலிகளின் குரல் வானொலிச் சேவை விஸ்தரிப்புப் பெற்றிருந்த போதிலும் இந்த விஸ்தரிப்பானது நீண்டநாட்களுக்கு நிலைத்திருக்கவில்லை. விடுதலைப் புலிகளால் நோர்வே அனுசரணையுடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நவீன வானொலிக் கருவியானது மீண்டும் விடுதலைப் புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையில் போர் மூண்டதைத் தொடர்ந்துபயன்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டது. தங்கள் வானொலிச் சேவையை விடுதலைப் புலிகள் மட்டுப்படுத்த வேண்டியிருந்தது.

இதற்கு பிரதான காரணமாக இரண்டு விடயங்கள் அமைந்திருந்தன. ஒன்று நீண்ட தூரத்திற்கு அதாவது தமிழ்நாடு வரைக்கும் ஒலிபரப்பை விஸ்தரிக்கக் கூடியதாக இருந்த நவீன கருவியில் பொருத்தப்பட்டிருந்த ஒரு சொவ்ற்வெயார் (மென்பொருள்) பழுதடைந்து விட்டது. இந்த மென்பொருளை யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த பொழுது விடுதலைப் புலிகள் தங்களது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டுவந்து சேர்ப்பது பெரும் சிரமமாக இருந்தது. தமிழ்ச்செல்வன் நோர்வேயுடன் தொடர்பை ஏற்படுத்தி வடக்குக்கு வருகின்ற ஐ.நா.நிறுவனம் ஒன்றின் ஊடாக இதனை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டுவருவது தொடர்பில் இரகசியப் பேச்சுவார்த்தை ஒன்றை எரிக்சொல்ஹெய்முடன் தொலைபேசியில் மேற்கொண்டிருந்தார். இதற்குச் சொல்ஹெம் உடனடியாகவே மறுப்புத் தெரிவித்துவிட்டார். நாங்கள் அனுசரணையாளர்களாக மட்டுமே செயற்பட்டு வருகிறோம். அதுவும் தற்போது பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் உங்களுக்கு வானொலிக் கருவிக்குரிய உபகரணத்தை அரசாங்கத்திற்குத் தெரியாமல் நாங்கள் எப்படி உங்களுக்குத் தர முடியும்? நாங்கள் உங்களைப் போன்று செயற்படமுடியாது. இறைமையுள்ள இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் மட்டுமே இதனைக் கொண்டுவர முடியும். நீங்கள் விரும்பினால் உங்கள் கோரிக்கையாக இதை நாங்கள் அரசாங்கத்திடம் முன்வைக்கலாம். அரசாங்கம் சிலவேளைகளில் தனது அரசியல் பரப்புரைகளுக்காக உடன்படலாம். அல்லது யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் ஏதாவது நிபந்தனைகளை முன்வைக்கலாம். இதற்கு உங்களால் உடன்படமுடியுமாக இருந்தால் நாங்கள் அரசாங்கத்துடன் இது தொடர்பில் பேசிப் பார்க்கலாம் எனக் கூறியபோது தமிழ்ச்செல்வன் எங்களுக்கு வானொலிக்கருவி தேவையில்லை. அரசிடம் நீங்கள் இத்தகைய கோரிக்கையை விடவும் வேண்டாம். நாங்கள் அரசாங்கத்திடம் மண்டியிடமாட்டோம். உங்களிடம் மட்டுமே உதவி கேட்டோம். உங்களால் முடியாவிட்டால் இவ்விடயத்தை கைவிடுவோம் நன்றி வணக்கம் எனக்கூறி சொல்ஹெய்முடனான உரையாடலை நிறுத்திவிட்டார்.

இதைவிட விடுதலைப் புலிகள் தமது புலிகளின் குரல் சேவையை பெரிய அளவில் விஸ்தரிக்க முடியாமல் போனதிற்கான இரண்டாவது காரணம். புலிகளின் குரல் சேவை கிளிநொச்சியில் நடத்தப்பட்டு அது அரசாங்கத்தின் விமானத் தாக்குதலிற்கு இலக்காகியதைத் தொடர்ந்து விசுவமடுப் பகுதிக்கு மாற்றப்பட்டது. அங்கு அது மறைமுகமாகவே இயங்கிவந்தது. வெளிப்படையாக இதனை இயக்குவதாக இருந்தால் நவீனகருவிகளைப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக நோர்வே ஊடாக ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட நவீனகருவியைப் பயன்படுத்தி இச் சேவையை நடத்தியிருந்தால் அது அரசாங்கத்தின் ராடர் திரையில் இலகுவில் தென்பட்டுவிடும். இதனால் தங்களது ஒலிபரப்பு நிலையம் இருக்கும் இடத்திற்கு மீண்டும் ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தில் புலிகள் இச்சேவையை மட்டுப்படுத்திக் கொண்டனர்.

புலிகளின் குரல் வானொலிச் சேவை தமிழ்நாட்டிற்கு விஸ்தரிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் கடும் மகிழ்ச்சியிலும் ஆனந்தத்திலும் கூத்தாடிய தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் சிலர் இச்சேவை மட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கடும் கவலை அடைந்தனர். உடனடியாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த நடேசனுடன் தொடர்புகொண்டு இச்சேவையை தமிழ்நாடு வரையும் விஸ்தரியுங்கள் இச்சேவையை நீங்கள் நிறுத்தியுள்ளமையால் நாங்கள் இங்கு அரசியல் செய்யமுடியாத சூழல் உருவாகப் போகிறது என சீமான்,வை.கோபாலசாமி, திருமாவளவன் போன்றவர்கள் நடேசனிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதற்குப் பதில் அளித்த நடேசன் நாங்கள் தற்போது நடத்துகின்ற சேவைகூட நிரந்தரமானதல்ல ஏனென்றால் நாங்கள் கடுமையான நெருக்கடிகளுக்குள் இருக்கிறோம். அடுத்தகட்டம் தொடர்பில் முடிவெடுக்க முடியாத அளவிற்கு நாங்கள் கடும் நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். உங்களது நிலைமைகள் எங்களிற்கு விளங்குகிறது. ஆனால் எங்களால் எதுவும் செய்யமுடியாது நீங்கள்தான்மக்களை விழிப்படைய வைத்து எங்களுக்கு ஆதரவாக போராட்டங்களில் தமிழ்நாட்டு மக்களை ஈடுபட வைக்கவேண்டும் என நடேசன் அவர்களுக்குச் சொன்னார்.


புலிகளை வைத்துக்கொண்டு தமிழ்நாட்டில் அரசியல் நடத்தும் சீமான், வை.கோபாலசாமி, திருமாவளவன் போன்றவர்களுக்கு புலிகளின் குரல் சேவை நிறுத்தப்பட்டமை பாதிப்பை ஏற்படுத்திய போதிலும் தொடர்ந்தும் தமிழ்நாட்டு மக்களை உசுப்பேற்றுவதை அவர்கள் விடவில்லை. தொடர்ந்தும், மக்களை உசுப்பேற்றும் செயற்பாட்டில் தீவிரமாகவே செயற்பட்டு வந்தனர். இவர்களின் சுயலாப அரசியல் நோக்கத்தை ஓரளவிற்கு தெரிந்து கொண்ட தமிழ்நாட்டுமக்கள் இவர்களது செயற்பாடுகளுக்கு இறுதி நாட்களில் ஒத்துழைப்பு வழங்க மறுத்தனர். ஆனால் முள்ளிவாய்க்கால் முடிவுகளின் பின்னர் கூட தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றும் செயற்பாட்டில் இருந்து இவர்கள் பின்வாங்கவே இல்லை.

தமிழ்நாட்டு அரசியலின் நிலவரங்களைப் பார்ப்பதை நிறுத்திக் கொண்டு, விடுதலைப் புலிகளை அழித்த தமிழ் ஊடகங்களின் வரிசையில் புலிகளின் குரல் நிறுவனத்தின் செயற்பாடுகளை நாம் பார்க்கலாம். புலிகளின் குரல் நிறுவனமானது குறிப்பாக அரசியல்துறை செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுத்துவந்தது. அதையடுத்து யுத்தமுனை செய்திகளுக்கும் முக்கியத்துவம்கொடுத்து வந்தது. ஆனால் விடுதலைப் புலிகளின் ஏனைய துறைகளின் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காததால் ஏனைய துறைகளின் தளபதிகள் மற்றும்துறைசார் பொறுப்பாளர்கள் புலிகளின் குரல் நிறுவனத்தின் மீது கடுப்புடனேயே இருந்தனர். இவ்வாறு புலிகளின் குரல் நிறுவனம்தொடர்பில் தளபதிகள் யாராவது பிரபாகரனிடம்முறையிட்டால் பிரபாகரன் இவ்விடயம் தொடர்பில் தமிழ்ச்செல்வனிடம் முறையிடுங்கள் என பந்தை தமிழ்ச்செல்வன் பக்கம் அடித்துவிடுவார். தமிழ்ச்செல்வனிடம் தளபதிகள் யாராவது இவ்விடயம் தொடர்பில் முறையிட்டால் தமிழ்ச்செல்வன் இவ்விடயம் தொடர்பில் தமிழன்பனிடம் (ஜவான்) சொல்லுங்கள், உங்களது செய்திகளுக்கு அவர்கள் முக்கியத்துவம் தருவார்கள் எனக் குறிப்பிடுவார்.

இச்சூழ்நிலையில் தமது துறைகள் சார்ந்த அல்லது பொறுப்புகள் சார்ந்த செயற்பாடுகள் மக்களிற்கு தெரியவேண்டும் குறிப்பாக புலிகளின் குரல் ஊடகத்தில் வந்தால் தலைவர் தமது செயற்பாடுகளை பாராட்டுவார் என்ற ஆசையில் ஜவானிடம் சென்று தளபதிகள், பொறுப்பாளர்கள் முறையிடுவார்கள். (17ஆம் பக்கம் பார்க்க)



# அரசாங்கத்தை அபகீர்த்திக்கு உள்ளாக்க சிலர் முயற்சி



(கொழும்பு)

நாட்டையும் அரசாங்கத்தையும் அபகீர்த்திக்கு உள்ளாக்கும் நோக்கில் சிலர் செயற்பட்டு வருகின்றனர். முஸ்லிம் மக்களுக்கு எதிரான குரோத செயற்பாடுகள் கண்டிக்கப்பட வேண்டுமென நீதி அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிராக மஹரகமவில் நடைபெற்ற போராட்டத்தை தடுத்து நிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியமை வருத்தமளிக்கின்றது.

நாட்டின் பல பகுதிகளில் முஸ்லிம் விரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. மஹரகம பிரதேசத்தில் தனியார் ஆடை விற்பனை நிலையமொன்றிற்கு எதிராக பௌத்த பிக்குகள் மேற்கொண்ட குரோதப் போராட்டத்தை கட்டுப் படுத்த சட்டம் ஒழுங்கைச் சார்ந்தோர் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர்.

முஸ்லிம் மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் எதிரான குரோத செயற்பாடுகள் கண்டிக்கப்பட வேண்டியவை நாட்டின் அனைத்து சமூகத்தினரையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அரங்கில் இலங்கையை தனிமைப்படுத்தும் நோக்கில் சிலர் செயற்பட்டு வருகின்றனர். மதங்களுக்கு இடையில் குரோத உணர்வைத் தூண்டும் நடவடிக்கைகளுக்கு சட்டம் ஒழுங்கை மதிக்கும் நாட்டின் பிரஜைகள் துணை போகக் கூடாது என்றார்.

# சகஜயோக குழுவினர் இலங்கைக்கு வருகை



மலேஷியாவைச் சேர்ந்த சகஜயோக குழுவினர் மீண்டும் இலங்கைக்கு வருகை தந்து எளிய சகஜயோக தியான முறைமையை முற்றிலும் இலவசமாக பயிற்றுவிக்கவுள்ளனர். மாதாஜி நிர்மலாதேவியினால் அறிமுகப்படுத்தப்பட்ட முதுகுத்தண்டு வடத்தின் அடியில் உறக்க நிலையில் உள்ள குண்டலினி சக்தியை விழிப்பு நிலை அடையச் செய்து எங்கும் நிறைந்துள்ள தெய்வ சக்தியுடன் இணைக்கும் முயற்சியே சகஜயோகமாகும்.

சகஜயோகினி கஜலக்ஷ்மியின் தலைமையிலான மலேஷிய குழுவினரால் வழங்கப்படும் முதலாவது நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் மாலை 4 மணி முதல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நுவரேலியா, ஹற்றன், கண்டி ஆகிய இடங்களிலும் இந்த இலவச பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹற்றனில் 26ஆம் திகதி இடம்பெறும் இந்த பயிற்சி நிகழ்வுகள் பட்டக்கண்ணு அறக்கட்டளையின் அனுசரணையில் மலையக அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் இலக்கம் 53 நேசிங் ஹோம் வீதியில் உள்ள கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 051 2225733 இலக்க தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது பெயரினை பதிவு செய்து கொள்ளும்படி பட்டக்கண்ணு அறக்கட்டளையின் ஸ்தாபகர் எஸ். தியாகராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பிரதம நீதியரசர் மொஹான் தலதா மாளிகையில் வழிபாடு




(கண்டி)

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். தலதா மாளிகைக்கு சென்ற பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை தியவத நிலமே பிரதீப் திலங்க வரவேற்றார். விசேட அதிதிகளுக்கான ஞாபகார்த்த புத்தகத்தில் பிரதம நீதியரசர் கையெழுத்திட்டார்.

இந்த நிகழ்வில் கண்டி மாவட்ட நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட பலர் பிரசன்னமாகியிருந்தனர். வழிபாடுகளின் பின்னர் பிரதம நீதியரசர் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிபெற்றுள்ளார்.

# மொரட்டுவ பல்கலைக்கழக விடுதிகளை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை

மொரட்டுவ பல்கலைக்கழக வளாகத்திற்குள் உள்ள விடுதிகளை அங்கிருந்து அப்புறப் படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன் தெரிவித்துள்ளார். மோதல் சம்பவம் இடம்பெற்றமைக்கு விடுதியும் காரணமாக அமைந்துள்ளதாகவும் கடந்த பல வருடங்களாக NDT மற்றும் பொறியியல் பீட மாணவர்களுக்கிடையே பிரச்சினைகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்திற்குள் உள்ள விடுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறான மோதல்கள் இடம்பெற்றுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் மொரட்டுவ பல்கலைக்கழக வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்த சிலர் மாணவர்கள் மீது தாக்கு தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்து தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொறியியல் பீட மாணவன் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றார். இந்த பிரச்சினைக்கு தீர்வொன்றை எட்டும் நோக்கில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பேராசிரியர்களின் பரிந்துரைகளுக்கு அமைய அமைச்சரவையின் தீர்மானத்தை பெற்று தேசிய தொழில்நுட்ப நிறுவனம் (NDT) ஸ்தாபிக்கப்பட்டதாக அவர் கூறினார். இந்த தேசிய தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகம் ஆகியன ஒரே வளாகத்திற்குள் காணப்படுகின்றமையே இந்தப் பிரச்சினைகளுக்கு காரணம் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை மொரட்டுவ பல்கலைக்கழக தாக்குதல் சம்பவம் தொடர்பில் அடையாளம் காணப்பட்டுள்ள 10 மாணவர்களை கைது செய்வதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரிஷாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட சந்தேகநபர்கள் தமது வீடுகளுக்கு சென்றுள்ளமையினால் அவர்கள் பற்றிய தகவல்கள் உரிய பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அவுஸ்ரேலியாவிற்கு செல்லும் அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

அவுஸ்ரேலியாவிற்கு செல்லும் அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்கு செல்லும் அகதிகளின் எண்ணிக்கை இந்த ஆண்டு குறைவடைந்துள்ளது.

அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் புதிய குடிவரவு கொள்கை மற்றும் கடற்படையினரின் கண்காணிப்பு நடவடிக்கை காரணமாக அகதிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சட்டவிரோதமான முறையில் ஆபத்தான வழிகளில் படகு மூலம் அவுஸ்ரேலியாவிற்கு செல்ல முயற்சிக்கும் அகதிகளை தடுக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் சுமார் 3000 இற்கும் மேற்பட்ட சட்டவிரோத குடியேறிகள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பூசாவுக்கு மாற்றம்

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்ட 44 பேரும் காலி பூசா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பிபிசியின் சிங்கள சேவையான சந்தேஷிய தெரிவித்துள்ளதாவது,

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை விடுதலை செய்வதற்கு முன்வருமாறு கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தங்களிடம் கேட்டுக்கொண்டுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி தங்கவேல் கனகராஜ் தெரிவித்துள்ளார்.

# இலங்கை மீது அமெரிக்கா அழுத்தங்களை பிரயோகிக்கின்றது

— குணதாச அமரசேகர

அமெரிக்கா தனது மூவரடங்கிய "திரிசூலக் குழுவை" இலங்கைக்கு அனுப்புகிறது. இதனை ஜெனிவா இராஜதந்திரச் சமருக்கு அமெரிக்கா விடுக்கும் அறை கூவலாகவே எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்தார். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகள் மூவரடங்கிய இராஜதந்திரக் குழுவின் இலங்கைப் பயணம் குறித்து கருத்து வெளியிடும் போதே குணதாச அமரசேகர இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

அமெரிக்கா தற்போது நாளாந்தம் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. அனைத்துவித உள்விவகாரங்களிலும் அந்த நாடு மூக்கை நுழைக்கின்றது. உலக வல்லரசு என்ற நினைப்பில் ஆடும் அமெரிக்காவுக்கு நாம் ஒருபோதும் அடிபணியக்கூடாது. அமெரிக்கா இல்லாவிட்டால் என்ன, இலங்கைக்குப் பக்கபலமாகத் தற்போது சீனா இருக்கின்றது. எனவே, அரசு சீனாவுடனான தனது உறவுகளைப் பலப்படுத்த வேண்டும். சீனாவின் பக்கம் முழுமையாக சாய்வதை விட தற்போது வேறு வழியில்லை என்றார்.

# கட்சிகளின் உறுப்புரிமை வர்த்தமானியில் வெளியிடப்படும்



அரசியல் கட்சிகளின் பதிவுகளை வருடாந்தம் நீடிக்கும் நடவடிக்கை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 31ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டமூலத்திற்கு அமைய சொத்து, பொறுப்பு விபரங்கள் மற்றும் வருடாந்த அறிக்கையை வழங்கிய கட்சிகளின் பெயர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி வெளியிடப்படவுள்ள வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தேர்தல் சட்டத்திற்கு இணங்க அரசியல் கட்சிகள் தமது பதிவுகளை வருடாந்தம் நீடித்துக்கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரால் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய அறிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும், 20 கட்சிகள் மாத்திரம் தமது அறிக்கைகளை கையளிப்பதற்கு இந்த மாதயிறுதி வரை அவகாசம் கோரியுள்ளன.

பெரும்பாலும் ஒன்று அல்லது இரண்டு கட்சிகள் புதிய வர்த்தமானி அறிவித்தலில் இருந்து நீக்கப்படும் என்றும் தேர்தல்கள் செயலக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். தற்போது, தேர்தல் செயலகத்தில் 64 அரசியல் கட்சிகள் பதிவாகியுள்ளன.

# 50 மாணவர்களுக்கு குறைவாக மேல்மாகாணத்தில் 92 பாடசாலைகள்

மேல் மாகாணத்தில் ஐம்பதிற்கும் குறைவான மாணவர்கள் கல்வி பயிலும் 92 பாடசாலைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக மகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள இந்தப் பாடசாலைகளை மீளக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேல் மகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜயந்த விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இந்தப் பாடசாலைகளை ஆரம்பப் பாடசாலைகளாக மாற்றவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஜனாதிபதி செயலகத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் இந்த பாடசாலைகளுக்குத் தேவையான பௌதிக மற்றும் ஆளணி வளங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். தற்போது பிரபல பாடசாலைகள் சிலவற்றிற்கு காணப்படும் கேள்வியை இதனூடாக குறைத்துக்கொள்ள முடியுமென மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார்.

# வீதி நடைமுறைகளைப் பின்பற்றினால் விபத்துக்கள் இடம்பெறுவதை தவிர்க்கலாம்

## நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி



(கரணவாய்)

நெல்லியடி பிரதேசத்தில் உள்ள பொதுமக்களுக்கு போக்குவரத்து, விதிமுறை, டெங்கு ஒழிப்பு, குற்றச்செயல்கள், துஷ்பிரயோகங்கள் போன்ற செயற்பாடுகள் தொடர்பாக விழிப்புணர்வை வழங்கும் வகையில் நெல்லியடி பொலிஸாரினால் நடாத்தப்படும் நடமாடும் சேவை மக்களுக்கு ஒரு சிறந்த பயனாக உள்ளது என நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கங்கார தெரிவித்தார்.

நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் பொலிஸாரின் நடமாடும் சேவை அண்மையில் நெல்லியடி மெதடிஸ்த த.க. பாடசாலையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு மக்க ளுக்கு விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொது மக்கள் போக்குவரத்து விதி முறைகளை கட்டாயம் பின்பற்றவேண்டும். அதிலும் மோட்டார் சைக்கிளில் செல்வோர் மோட்டார் வாகன சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும். அந்த வகையில் மோட்டார் வாகன சட்டத்தில் மோட்டார் சைக்கிளின் பக்கச் சில்லு வண்டி பொருத்தப்படாத மோட்டார் சைக்கிள் சாரதியாக இருந்து அதனைப் பிரதான வீதியில் செலுத்தும் போது ஒருவருக்கு மேற்பட்டவரை ஏற்றிச் செல்லக் கூடாது.

மேலும் சாரதியின் இருக்கைக்கு பின் அதற்கு சமமாக பொருத்தப்பட்டிருக்கும் இருக்கையில் மோட்டார் வண்டியின் இருபுறமும் கால்களை இட்டு உட்கார்ந்து செல்வதைத் தவிர வேறு எந்த முறையிலும் ஏற்றிச் செல்லக்கூடாது. 158 (1)

அடுத்து மோட்டார் சைக்கிளை செலுத்துபவரும், மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லும் அனைவரும் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வர்க்கத்திற்கு இணைந்த பாதுகாப்புத்தலைக்கவசம் முறையாக தனது தலையில் அணிந்திருக்க வேண்டும். 158 (2)

அத்துடன் மோட்டார் சைக்கிளை செலுத்தும் நபர் இரண்டாம் பிரிவின் கீழ் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வர்க்கத்திற்கு இணங்க பாதுகாப்புத் தலைக்கவசம் அணியாமல் மற்றைய நபரை ஏறிச் செல்லுமிடத்து மோட்டார் சைக்கிளை செலுத்துபவரும், ஏறிச் செல்லும் இருவரும் இந்த சட்டக்கோவையின் கீழ் குற்றத்திற்கு குற்றவாளி ஆகுவார். 158 (3) ஆகிய விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நடை முறைகள் யாவும் மக்கள் சரியாகப் பின்பற்றுவதன் மூலம் விபத்துக்கள் இடம்பெறுவதைத் தவிர்க்க முடியும். அத்துடன் டெங்கு நோய் தொடர்பாக பொதுமக்கள் சுற்றுச்சூழலை துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.

மேலும் இப்பிரதேசத்தில் குற்றச்செயல்கள் இடம்பெறாதிருக்க அவை தொடர்பாக பொது மக்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்துவதன் மூலம் அவற்றை முற்றாக தடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இந்நடமாடும் சேவையில் வதிரி அம்மன் ஆலய பிரதம குரு, ப்பாடசாலை அதிபர் என். தேவராஜா, சுகாதார உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் வழங்கல், மருத்துவப் பரிசோதனை என்பனவும் இடம்பெற்றன. (18)

# போட்டிப் பரீட்சை

(அரியாலை)

அரச முகாமைத்துவ உதவியாளர்களுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த விண்ணப்பத்தாரிகளுக்குரிய அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் இரு வேறு பாடப்பரப்பில் தகுதிகாண் சோதனை மூலம் பரீட்சிக்கப்படுவதுடன் காலை முதல் பாடமாக மொழித்திறன் பாடமும், அதனைத் தொடர்ந்து பொது உளச்சார்பு பரீட்சையும் நடைபெறும்.

விண்ணப்பதாரிகள் உரிய முறையில் தகுதியானவர்களிடம் தமது கையெழுத்தை அனுமதி அட்டையில் குறித்தவாறு உறுதிப்படுத்தி பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்க வேண்டும் அத்துடன் ஆள் அடையாளயாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

# கற்றலை இலகுவாக்க விசேட செயற்றிட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய கணித வள நிலைய கற்றல் உபகரணங்களை கணித பாடமாணவர்கள் பயன்படுத்துமாறு கேக்கப்பட்டுள்ளது.

கணித வள நிலையத்திலுள்ள கற்றல் உபகரணங்கள், செயலட்டைகள், கணித விளையாட்டுக்கள் மூலம் கற்றல் செயற்பாட்டை இலகுவாக மேற்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் கற்கவிரும்பும் மாணவர்கள் கணிதவள நிலையக் கோட்டக கல்வி அதிகாரியூடாக அல்லது கணிதபாட உதவிக்கல்விப் பணிப்பாளரூடாக தொடர்பு கொள்ளுமாறு கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் அமைந்துள்ள கணித மூல வள நிலையப் பொறுப்பாசிரியர் சி.சிவநேசன் சகல பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளார். (109)

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்ற போது புதுமுக மாணவர்கள் கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.




# முல்லைத்தீவு பொலிஸாரினால் இலவச நடமாடும் சேவை

முல்லைத்தீவின் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் மக்களுக்கான இலவச நடமாடும் சேவை கடந்த சனிக்கிழமை காலை 9 மணி முதல் 3 மணி வரை சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக 50 பேருக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டதுடன் 86 பேருக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதை விட வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 75 குடும்பங்களுக்கு தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டதுடன் 121 பேருக்கு கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. அத்துடன் சமாதான நீதவான் கடிதங்கள் தேவையான 25 பேருக்கு அக்கடிதங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. பொது மக்களின் முறைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

இதேவேளை முல்லைத்தீவு பொது வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு 17 பொலிஸ் உத்தியோத்தர்களும், 4 பொது மக்களும் இரத்ததானம் செய்தனர். (04)

# ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் தை மாத மலர் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பேரவையில் நடைபெறவுள்ளது. இதில் நூல் வெளியீட்டுரையை கலாநிதி ஆறு.திருமுருகன், மதிப்பீட்டுரையை ஆ.சிவநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# முரசின் இன்றைய பலன்

(22.01.2013 – செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 09 ஆம் திகதி. நட்சத்திரம் ரோகிணி முழுவதும். திதி ஏகாதசி பின்னிரவு 3.52 வரை. அமிர்தம். இராகுகாலம் 3.36 - 05.06 வரை. சுபநேரம் 11.06 - 12.36 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நியாய, தர்மம் பின்பற்றுவதால் நன்மை. தொழில் சீராக இருக்கும். அளவான பணவரவு. சிக்கனம் நல்லது. இசை இரசிப்பு. |
| ரிஷபம் | ஆசையால் தேவையற்ற அலைச்சல். கணவன்–மனைவி பிரச்சினை வந்து நீங்கும். தொழிலில் தடங்கல் வரும். தேவையற்ற செலவுகள். |
| மிதுனம் | குடும்பத்தில் சந்தோஷம். விரும்பிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர். சொந்த–பந்தங்கள் தேடி வருவர். நட்பு மிகும். வாகன திருத்தம். |
| கடகம் | அன்பு நிறைந்த நாள். பணிகளில் வெற்றி. தொழில் வளர்ச்சி. உப்ரி வருமானம். குடும்ப உறுப்பினர்கள் மகிழ்வு. சுப நிகழ்ச்சி திட்டமிடல். |
| சிம்மம் | ஆதாயம். எதிர்பாராத சன்மானம் கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி. பொருளாதாரம் செழிப்பு. உற்சாக நாள். தீயவரை இனம் காண்பீர்கள். |
| கன்னி | அனுபவ அறிவுக்குப் பலன். உடன்பிறந்தோர் உதவி. தொழில் சிறக்கும். பொறுமைக்கு லாபம். பிள்ளைகளில் நல்ல மாற்றம். சேமிப்பு மிகும். |
| துலாம் | பொறுப்பும், சுமையும் அதிகரிக்கும். சகிப்புடன் உழைகக பலன். தொழிலில் புதிய முயற்சி. விருந்தினர் வரவேற்பு. வீடு, வாகன பிரச்சினைகள் வந்து, தீரும். |
| விருச்சிகம் | பிள்ளைகளால் நன்மை. கோயில் வழிபாடு. வீடு, வாகன திருத்தம். தொழில் செழிக்கும். வெளியூர் நற்செய்தி. சமூகத்தில் மதிப்பும் பாராட்டும். |
| தனுசு | பிறருக்கு உதவுவீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை. கூடுதல் பணவரவில் குடும்பத் தேவை நிறைவேறும். பூர்வ சொத்தால் வரவு அதிகரிக்கும். |
| மகரம் | கருணையும் உதவியும். தாராள பணவரவு. துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி. கூட்டு முயற்சிகளில் வெற்றி. |
| கும்பம் | எதிர்கால சிந்தனை. பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவர். பழைய நண்பர் சந்திப்பு. மூத்தோர் அறிவுரை கிடைக்கும். |
| மீனம் | அனுசரணையும் உதவியும் கிடைக்கும். திட்டமிட்டவை நிறைவேறும். தொழிலில் கூடுதல் முயற்சி. கூடுதல் லாபம். குடும்பத்தில் மங்கல நிகழ்வு. |

# காலிறுதியில் ஜோகோவிச், அசரங்கா



(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு ஜோகோவிச் மற்றும் அசரன்கா ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர். மெல்போர்ன் நகரில் நடந்து வரும் அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி விறுவிறுப்பான கட்டத்தை அடைந்துள்ளது.

ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த பெரும்பாலான மோதல்கள் ஒரு தரப்பாக அமைந்த நிலையில், முதல் நிலை வீரர் சேர்பியாவின் ஜோகோவிச்சின் ஆட்டம் மட்டும் 5 மணி நேரத்திற்கு மேலாக அனல் பறந்தது.

நடப்பு சம்பியனான ஜோகோவிச், உலக தரவரிசையில் 17ஆவது இடத்தில் உள்ள சுவிட்சர்லாந்தின் வாவ்ரிங்காவுடன் மோதினார். இதில் முதல் 4 செட்டுகளை இருவரும் தலா 2 வீதம் தனதாக்கிய நிலையில், கடைசி செட் மேலும் பரபரப்பானது. நீயா, நானா என்று இழுத்துக் கொண்ட போனதால் ஆட்டம் அவுஸ்ரேலிய நேரப்படி நள்ளிரவு 1.30 மணியையும் தாண்டியது. கடைசியில் 22ஆவது கேமில் வாவ்ரிங்காவின் சர்வீசை முறியடித்து ஜேர்கோவிச் ஒரு வழியாக இந்த யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். வாவ்ரிங்காவின் அசாத்திய சவாலை முடிவுக்கு கொண்டு வர அவர் 5 மணி 2 நிமிடங்கள் போராட வேண்டி இருந்தது.முடிவில் ஜோகோவிச் 1-6, 7-5, 6-4, 6-7 (5-7), 12-10 என்ற செட் கணக்கில் திரில் வெற்றியை சுவைத்து காலிறுதிக்குள் நுழைந்தார். இதில் கடைசி செட் மட்டும் 1 மணி 44 நிமிடங்கள் நீடித்தது. இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவின் நான்காவது சுற்று ஆட்டத்தில் பெலாரஸ் நாட்டின் விக்டோரியா அசரங்கா, ரஷ்யாவின் எலினா வெஸ்னினாவை எதிர்கொண்டார். இந்த போட்டியில் வெஸ்னினா, அசரங்காவிற்கு நெருக்கடி கொடுப்பார் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால் அசரங்கா ஆரம்பம் முதலே அபாரமாக விளையாடி வெஸ்னினாவை தோற்கடித்தார். அசரங்கா 6-1, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெஸ்னினாவை வீழ்த்தி காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

# இந்திய அணி முதலிடம்



(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) ஒருநாள் போட்டிக்கான தூரப்படுத்தலில் இந்திய அணி மீண்டும் முதல் இடம் பிடித்தது.

ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தர-வரிசை பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) டுபாயில் வெளியிட்டது. இதில் இந்திய அணி 119 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியது. இங்கிலாந்துக்கு எதிரான 2, 3ஆவது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்றதே இம்முன்னேற்றத்துக்கு காரணம். இதன்மூலம் நான்கு ஆண்டுகளுக்கு பின், இந்திய அணி மீண்டும் முதல் இடம் பிடித்துள்ளது. முன்னதாக 2009ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட தர-வரிசையில், இந்திய அணி முதலிடம் பிடித்தது.

தவிர, கடந்த 18 மாதங்களாக முதல் இடத்தில் இருந்த இங்கிலாந்து அணி, 118 புள்ளிகளுடன் 2ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டது. நியூசிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் தோல்வி கண்ட தென்னாபிரிக்க அணி 116 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளது. தலா 111 புள்ளிகளுடன் இலங்கை, அவுஸ்ரேலியா அணிகள் 4ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளன. பாகிஸ்தான் அணி 107 புள்ளிகளுடன் 6ஆவது இடத்தில் உள்ளது.

இதேவேளை, இந்திய அணி, முதலிடத்தை தக்கவைத்துக் கொள்ள, எதிர்வரும் 23ஆம் திகதி மொகாலியில் நடக்கவுள்ள 4ஆவது ஒருநாள் போட்டியில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும். இல்லையென்றால் இங்கிலாந்து அணி, மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறும்.

தரவரிசையில் முதல் 10 இடத்தில் உள்ள அணிகள் விபரம் வருமாறு:

இந்தியா - 119 புள்ளிகள், இங்கிலாந்து - 118 புள்ளிகள், தென்னாபிரிக்கா - 116 புள்ளிகள் இலங்கை - 111 புள்ளிகள், அவுஸ்ரேலியா - 111 புள்ளிகள், பாகிஸ்தான் - 107 புள்ளிகள், மேற்கிந்தியத்தீவுகள் - 88 புள்ளிகள், பங்களாதேஷ் - 78 புள்ளிகள், நியூசிலாந்து - 76 புள்ளிகள், சிம்பாப்வே - 50 புள்ளிகள்.

# தாமதத்தால் தடை



(பார்ல்)

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், தாமதமாக பந்துவீசிய காரணத்தினால், தென்னாபிரிக்க அணிக் கப்டன் டிவிலியர்சுக்கு இரண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து அணியுடனான முதலாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி, குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்துவீச தவறியது. ஐ.சி.சி., 2.5.2 விதி முறைப்படி, தாமதமாக பந்துவீசுவது குற்றம். சுமார் 6 ஓவர்கள் வரை தாமதமாக பந்துவீசியதால், டிவிலியர்சுக்கு, இரண்டு போட்டிகளில் விளையாட தடைவிதிக்கப்பட்டது. இதனால் இவர், நியூசிலாந்துக்கு எதிராக அடுத்த இரண்டு போட்டியில் விளையாட முடியாது. மற்றும் தென்னாபிரிக்க வீரர்களுக்கு போட்டி சம்பளத்தில் இருந்து 100 சத வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. அடுத்த 12 மாதங்களுக்குள் மீண்டும் ஒரு முறை, தாமதமாக பந்துவீசும் பட்சத்தில், கப்டன் என்ற முறையில் டிவிலியர்சுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படும். டிவிலியர்சுக்கு பதிலாக டேவிட் மில்லர் களமிறக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மஹேல அதிருப்தி



(சிட்னி)

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் சர்வதேசப் போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டமை குறித்து இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

சிட்னியில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. பதிலளித்தாடிய இலங்கை அணி 3.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது.

தொடர்ச்சியான மழை காரணமாகப் போட்டி நீண்ட நேரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்ததோடு, இறுதியில் போட்டியை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய தயார்நிலையில் மைதானம் காணப்படவில்லை எனத் தெரிவித்துப் போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன, கடந்த நவம்பரில் பல்லேகலேவில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியின் போதும் மழை குறுக்கிட்டது. மிக மோசமான நிலையில் தொடர்ந்து விளையாடினோம். அப்போது போட்டி நடுவராக இருந்த ஆன்டி பைகிராப்ட், விளையாடுவதற்கு ஆபத்தான சூழ்நிலை இருந்தால் மட்டுமே போட்டி நிறுத்தப்படும் என்றார். ஆனால், சிட்னி போட்டிக்கு போட்டி நடுவராக இருந்த ஸ்ரீநாத், விளையாடுவதற்கு உகந்த சூழ்நிலை இல்லாததால் ஆட்டம் நிறுத்தப்படுகிறது என்றார். இரு இடங்களிலும் வெவ்வேறான விளக்கம் அளிக்கப்பட்டது. அனைத்து தொடருக்கும் ஒரே மாதிரியான நிலையை கையாள வேண்டும். இது குறித்து ஐ.சி.சி. போட்டி நடுவர் ஸ்ரீநாத்திடம் விளக்கம் கேட்டு முறைப்படி கடிதம் அனுப்பப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அவுஸ்ரேலிய கப்டன் மைக்கேல் கிளார்க் கூறுகையில், சிட்னி மைதானத்தில் தண்ணீரை வெளியேற்ற சிறப்பான வசதி உள்ளது. அப்படியிருந்தும், போட்டி கைவிடப்பபட்டது வியப்பு அளித்தது. நாங்களும் விளையாட விரும்பினோம். தற்போது தொடரை வெல்லும் வாய்ப்பு பறிபோய் விட்டது. அடுத்த போட்டியில் வென்று, தொடரை சமன் செய்ய முயற்சிப்போம் என்றார்.

# ஹசி ஓய்வு ரிக்கி அதிர்ச்சி



(சிட்னி)

ஹசியின் ஓய்வு முடிவு எனக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

ஹசியின் துடுப்பாட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது. அவர் ஏன் ஓய்வு முடிவை எடுத்தார் என்று தெரியவில்லை. அவரது நண்பர் என்ற முறையில் எனக்கே அவரது திட்டம் தெரியாது. அவரது இந்த முடிவு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஆஷஸ் தொடருக்குப் பின்னர் கிளார்க் ஓய்வு பெறுவார் என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் அவர் நன்றாக ஆடி வருகிறார். ஹியூஸ், உஸ்மான், குவாஜா, வட்சன், வோர்னர் ஆகியோர் வெற்றிடத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய இளம் வீரர்கள் பலர் திறமையுடன் ஆடி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. அவர்களுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மும்பை மரதன்; உகண்டா வீரர் சாதனை



(மும்பை)

மும்பை மரதன் ஓட்டத்தில், உகண்டா வீரர் ஜாக்சன் கிப்ராப், புதிய சாதனையுடன் முதலிடம் பிடித்து சம்பியன் பட்டம் வென்றார்.

மும்பையில், 10ஆவது மரதன் ஓட்டம் நடந்தது. இதில் பந்தய தூரத்தை இரண்டு மணி நேரம், 9 நிமிடம்,32 வினாடிகளில் கடந்த உகண்டா வீரர் ஜாக்சன் கிப்ராப், முதலிடம் பிடித்தார். தவிர இவர், குறைந்த நேரத்தில் பந்தய தூரத்தை அடைந்த வீரர் என்ற புதிய சாதனை படைத்தார். முன்னதாக 2011இல் எத்தியோப்பியாவின் கிர்மா ஆசிபா, 2 மணி நேரம், 9 நிமிடம், 54 வினாடிகளில் கடந்தார். அடுத்த இரண்டு இடங்களை எத்தியோப்பியாவின் ஜேக்கப் சேஷாரி (2 மணி நேரம், 9 நிமிடம், 43 வினாடி), கென்யாவின் எலிஜா கெம்பாய் (2 மணி நேரம், 10 நிமிடம், 3 வினாடி) ஆகியோர் பிடித்தனர்.

பெண்கள் பிரிவில், கென்யாவின் வாலன்டைன் கிப்கிடர், பந்தய தூரத்தை 2 மணி நேரம், 24 நிமிடம், 33 வினாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார். தவிர இவர், குறைந்த நேரத்தில் பந்தய தூரத்தை அடைந்த வீராங்கனை என்ற புதிய வரலாறு படைத்தார். முன்னதாக கடந்த ஆண்டு எத்தியோபியா வீராங்கனை நெட்சானட் அச்ஹமோ, 2 மணி நேரம், 26 நிமிடம், 12 வினாடிகளில் கடந்தார். அடுத்த இரண்டு இடங்களை எத்தியோப்பியாவின் டின்கேஷ் மேகாஷ் (2 மணி நேரம், 28 நிமிடம், 46 வினாடி), அபெரு மேகுரியா (2 மணி நேரம், 29 நிமிடம், 3 வினாடி) ஆகியோர் பிடித்தனர்.

# மான்செஸ்டர் சிட்டி வெற்றி

(மான்செஸ்டர்)

புல்ஹாம் அணிக்கு எதிரான பிறிமியர் லீக் கால்பந்து தொடரின் லீக் போட்டியில் மான்செஸ்டர் சிட்டி அணி வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில் பிறிமியர் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் மான்செஸ்டர் சிட்டி, புல்ஹாம் அணிகள் மோதின. தொடக்கம் முதல் அசத்திய மான்செஸ்டர் அணிக்கு டேவிட் சில்வா (2ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு புல்ஹாம் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

பின் இரண்டாவது பாதியில் மான்செஸ்டர் அணிக்கு, டேவிட் சில்வா (69) மீண்டும் ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். புல்ஹாம் அணி வீரர்களின் கோல் முயற்சி எதுவும் பலிக்கவில்லை. முடிவில், மான்செஸ்டர் சிட்டி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது

விளையாட்டு செய்திகள்

# வென்றது கிளிநொச்சி லீக் அணி





(கிளிநொச்சி)

இலங்கை கால்பந்தாட்ட லீக் அணிகளுக்கிடையிலான போட்டி ஒன்றில் கிளிநொச்சி மாவட்ட லீக் அணி அபாரமான வெற்றிபெற்றது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் லீக் அணிகளுக்கிடையிலான சம்பியன் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்ட லீக் அணிக்கும், கிளிநொச்சி மாவட்ட லீக் அணிக்குமிடையிலான போட்டி ஒன்று நேற்று முன் தினம் மாலை 4.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கு ஒன்று சளைத்தவை அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் சிறப்பான முறையில் ஆடினர். ஆட்டம் ஆரம்பமானதிலிருந்து இரு அணிகளும் தமது திறனை வெளிப்படுத்தினர். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்ட லீக் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றது. அடுத்து பருத்தித்துறை லீக் அணிக்கும், யாழ். லீக் அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் வெற்றிபெறும் அணி கிளிநொச்சி லீக் அணியுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேற்படி போட்டி நிகழ்வில் இரு அணிகளிலும் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய இரு வீரர்கள் கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட லீக்கினால் கௌரவிக்கப்பட்டது. இந்நினைவுப் பரிசினை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் வழங்கிக் கௌரவித்தார். (29)

# ஊர் சுற்றும் ஓட்டம் வெற்றியீட்டியோர் விபரம்

(மானிப்பாய்)

விளையாட்டு அமைச்சினால் மாவட்ட செயலகத்தின் அனுசரனையுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களின் விளையாட்டு வீர,வீராங்கனைகளுக்கு இடையில் 12 கிலோ மீற்றர் ஊர் சுற்றும் ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்து கல்லூரிக்கு முன்னால் ஆரம்பமாகியது.

இப்போட்டியில் பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களையும் முறையே சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை சேர்ந்த வே.மங்கையக்கரசி, ம.தாரணி, நா.சுமதி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

ஆண்கள் பிரிவில் முதலிடத்தை மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவினை சேர்ந்த றஜிகரனும், இரண்டாம் இடத்தினை நெடுந்தீவு பிரதேச செயலகத்தை சேர்ந்த சி.ஞானேஸ்வரனும் மூன்றாமிடத்தினை ஊர் காவற்றுறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ச.ஜெயந்திரனும் பெற்றுக்கொண்டனர்.

# தெல்லிப்பளை, நல்லூர் செயலக அணிகள் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பெண்கள் பிரிவில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் ஆண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணியும் முதலாமிடங்களைப் பெற்றுக்கொண்டன.

விளையாட்டு அமைச்சின் மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால், யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம்ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதேச செயலகங்களைச்சேர்ந்த பல அணிகள் பங்கு கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும், இரண்டாமிடத்தை யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும் பெற்றுக்கொண்டன. ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தைத் நல்லூர் பிரதேச செயலக அணியும், இரண்டாமிடத்தை யாழ்ப்பாண பிரதேச செயலக அணியும் பெற்றுக்கொண்டன. இப்போட்டி நிகழ்வில் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்கள், துறைசார்ந்த அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



வேலணைப் பிரதேச விளையாட்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட நயினாதீவு அண்ணா அணியினர் விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம். இப்போட்டியில் வேலணை மகேஸ்வரி அணி முதலிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)

## பவிதரன், சிலோஜன் சிறப்பான பந்துவீச்சு

# கொக்குவில் இந்து வெற்றி

(தெல்லிப்பளை)

பவிதரன், சிலோஜன் ஆகியோரின் சிறப்பான பந்துவீச்சின் மூலம் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிக்கெதிரான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. இச்சுற்றுப் போட்டியின் லீக் ஆட்டமொன்று கடந்த 12,13ஆம் திகதிகளில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய மகாஜனாக் கல்லூரி அணி பவிதரனின் பந்துவீச்சிற்கு ஈடு கொடுக்க முடியாது மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் மகாஜனாக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரமேஸ்குமார் 16, சாரங்கன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பவிதரன் ஆறு, சிலோஜன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பங்குஜன் 20, பார்த்தீபன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கஜந்தன் நான்கு, ஜனந்தன் மூன்று, ரமேஸ்குமார் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

34 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய மகாஜனாக் கல்லூரி அணி ஜனந்தன், திலக்ஷன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தினால் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 117 ஓட்டங்களைப்பெற்றது. இதில் ஜனந்தன் 36,திலக்ஷன் 22,ரிசோத் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பவிதரன் ஏழு, சிலோஜன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.பதிலுக்கு 87 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பிரதாபன் 22, ஆதித்தன் 20, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கஜந்தன் நான்கு, ரமேஸ்குமார், ஜனந்தன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (93)

# பரபரப்பை ஏற்படுத்தியுள்ள பயிற்சியாளர் இணைவு

பார்சிலோனா கால்பந்தாட்ட அணியை நீண்டகாலமாக வெற்றிப்பாதையில் வழிநடத்தி வந்த அவ் அணியின் பயிற்றுவிப்பாளர் பெப் குவர்தியோலா, ஜேர்மனியின் பேயர்ன் மூனிச்சுடன் புதிதாக இணைந்து கொண்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மூன்று வருட புதிய ஒப்பந்தத்தின் கீழ் மூனிச் கால்பந்தாட்டக் குழுவுக்கு பயிற்சியாளராக இணைந்துள்ளார். ஆர்ஜன்டீனா அணியின் கால்பந்தாட்ட வீரரான பெப் குவர்தியோலா, விளையாடுவதிலிருந்து ஓய்வு பெற்றதும், சில வருடங்கள் கழித்து அந்த அணிக்கு பயிற்றுவிப்பாளராக பொறுப்பேற்றார். அவருடைய வழிகாட்டலின் கீழ், பார்சிலோனா அணி நான்கு தொடர்களில் 14 பட்டங்களை வென்றது.

இதேவேளை, 2009ஆம் ஆண்டு மன்செஸ்டர் அணியை தோற்கடித்து சம்பியன் லீக் பட்டத்தை வென்றதும் குறிப்பிடத்தக்கது. இவ்வெற்றிகளுக்கு பெப் குவர்தியோலாவே காரணமாகத் திகழ்ந்தார். உலகின் மிகச்சிறந்த பயிற்றுவிப்பாளர்களில் ஒருவராகவும் இனங்காணப்பட்டார்.

இந்நிலையில் கடந்த நான்கு வருடங்களாக பார்சிலோனா அணியின் பயிற்றுனராக திகழ்ந்த பெப் குவர்தியோலா முதன் முறையாக ஸ்பெயினை தவிர்ந்த வேறொரு நாட்டு கழகமொன்றுக்கு பயிற்றுனராக பொறுப்பேற்கிறார். ஜேர்மனியின் மூனிச் கழகத்தின் தற்போதைய பயிற்றுனர் ஹெய்ன்க்ஸ் ஓய்வு பெறுவதையடுத்து இப் பதவியை பெப் குவர்தியோலா ஏற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சிறுவர்போராளிகள் எதிர்நோக்கும் சமூக உளவியல் பிரச்சினைகள் 4

– ருவான் எம் ஜயதுங்க –

பிள்ளைகள் அவர்களின் பெற்றோர்களிடமிருந்து கட்டாயமாக பிரிக்கப்படும்போதும் மற்றும் போர் அதிர்ச்சி போன்ற நீண்டகால அழுத்தம் மிக்க நிகழ்வுகளுக்கு இலக்காகும் போதும், நீண்டகால பின்விளைவுகளை எதிர்கொள்கிறார்கள். இந்த அறி குறிகளைப் படையிலிருந்து விலகிய சிறுவர்போராளிகளிடம் காணக்கூடியதாக உள்ளது. அளவுக்கு மீறிய உளவியல் பேரதிர்ச்சியை தொடர்ந்து அநேக முன்னாள் சிறுவர்போராளிகள் தங்கள் பெற்றோர்களுடன் ஈடுபாடு அற்றவர்களாகவும் மற்றும் மிகவும் குறைவான இணைப்பைக் கொண்டவர்களாகவும் உள்ளார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளை நாடகீயமான வகையில் மாறியிருப்பதாகவும் மற்றும் அவனால் தனது அன்பையும், அரவணைப்பையும் திருப்பி வெளிக்காட்ட முடியாமல் இருக்கிறதே என்று அடிக்கடி உணர்வார்கள். பெற்றோர்களுக்கும் மற்றும் பிள்ளைகளுக்கும் இடையில் ஒரு கண்ணுக்குத் தெரியாத சுவர் இருப்பதாக சிலர் வெளிப்படுத்துவார்கள். பிள்ளையானது பெரியவர்கள்மீது நம்பிக்கையற்றதாகவும் மற்றும் சமூகத்தில் ஒரு மதிப்புமிக்க அங்கத்தவராக இருப்பதற்கான அடையாளத்தை, தான் தொலைத்து விட்டதாகவும் உணரும். பிள்ளையானது எதிர்ப்பு, இணக்கமற்ற தன்மை, மற்றும் கிளர்ச்சி போன்ற குண முடையதாக மாறுவதுடன், பெற்றோர்கள், பிள்ளையானது பெரியவர்கள் அவர்களின் உலகத்தில் இல்லாதது போல நடந்து கொள்வதாகவும் மற்றும் சாதகமான உள்விளைவுகளுக்கு பெரியவர்களை எதிர்பார்க்காமலும் இருக்கிறதே, என்று பிள்ளைகளைப் பற்றி உணர்வார்கள். சில பிள்ளைகள் தங்களை கடத்தியவர்களுடன் இருக்கும் காலங்களில் அவர்களுடன் பிணைப்புகளை உருவாக்கியபடியால், தாங்கள் பெற்றோர்களுடன் இருப் பதைக் காட்டிலும் போராளிகளுடன் இருந்தபோது நல்ல நேரத்தை அனுபவித்ததாக உணர்வார்கள்.

சிறுவர்கள் தங்கள் பொதுவான சிந்தனை ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளும்போது, அவர்கள் சமூகம் கட்டளையிடும் ஒழுக்க விதிகளுடன் இணங்கிச் செல்ல ஆரம்பிப்பாகள் என எதிர்பார்க்கப்படுகிறது. பல பகுதிகளிலும் நடந்த ஆராய்ச்சிகள் தெரிவிப்பது, போர் அதிர்ச்சி பிள்ளைகளின் ஒழுக்க வளர்ச்சியினை பாதிக்ககூடும் என்று. கொலம்பியாவில் நடந்த உள்நாட்டு யுத்தத்தினால் இடப்பெயர்வுக்கு ஆளான சிறுவர்கள் மற்றும் வளர்ந்தவர்கள், தாங்கள் மற்றவர்களிடம் இருந்து திருடி மற்றும் மக்களுக்கு காயம் ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். சமூக நெறிமுறைகளின்படி அப்படிச் செய்வது தவறு என்று ஏற்றுக் கொண்டபோதும், அவர்களில் பலர், விசேடமாக பிராயமடைந்தவர்கள், சில குழுக்களுக்கு எதிராக பழி வாங்குவது நியாயமானது என தீர்ப்பெழுதினார்கள் (போசாடா மற்றும் வாயின்ரிப் 2008).




இலங்கையின் சிறுவர் போரா- ளிகள் முறைப்படி போதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு மற்றும் வெறுப்பு மற்றும் மிருகத்தனம் போன்ற நஞ்சினை ஊட்டி ஒழுக்க நெறிமுறை களை எதிர்கொள்ளும் சங்கடமான நிலைக்கு தள்ளப்பட்டார்கள். பாரம்பரியமிக்க தமிழ் கலாசாரம் வன்முறையை ஒப்புக் கொள்ளாததோடு, சகிப்புத்தன்மை, பெரியவர்களுக்கு மரியாதை வழங்குதல், நோயுற்று மடியும் நிலை யில் உள்ளவர்களை கவனித்தல் போன்ற சமூக நற்பண்புகளுடன் பின்னிப் பிணைந்துள்ளது. ஆனால் இந்தச் சிறுவர்களுக்கு அவர்களின் இராணுவ பயிற்சிகளின்போது வித்தியாசமான போதனைகள் வழங்கப்பட்டன. யாராவது உங்கள் எண்ணங்களை ஏற்றுக் கொள்ளாமல் உங்களுடன் முரண்படுவாரானால் அவர் உங்கள் எதிரி அல்லது துரோகி ஆவார். உங்களின் மிகவும் உயர்வான கடமை அவரைக் கொல்வது அல்லது அவரை சித்திரவதை செய்வதே ஆகும் என்று அவர்களுக்கு போதிக்கப்பட்டது. மற்றொரு மனிதனை வெட்டி அல்லது சுட்டுக் கொல்வதற்கு அவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. இலங்கையிலுள்ள தமிழ்ச் சிறுவர்கள் இந்த நிகழ்வுகளால் காயம்பட்டு அவர்களது பிள்ளைப்பராயத்தின் முக்கியமான அம்சங்களை அடைய முடியாமல் பல்வேறு வித்தியாசமான வழிகளில் தடுக்கப்பட்டார்கள். (ஹுல் 2003).

(தொடரும்)

# ஆபிரிக்காவை அழிக்கும் போலி மருந்துகள்!

ஆபிரிக்காவில் எய்ட்ஸ், ஆபிரிக்காவில் கடும் வறட்சி, ஆபிரிக்கா வில் பெரும் பஞ்சம், ஆபிரிக்காவில் உள்நாட்டுப் போர் - என்று பெருமைப்படமுடியாத விஷயங்களின் பட்டியலில் முதன்மையாக இருக்கும் ஆபிரிக்காவில் போலி மருந்துகளின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் பெருகிவிட்டது. மலேரியா போன்ற தொற்று நோய்களுக்கான மருந்துகளில் கணிசமான எண்ணிக்கையில் சீன, இந்திய போலி மருந்துகள் பெருகிவிட்டன. சீனர்கள் இந்த விஷயத்தில் பணத்தைத் தவிர வேறெது வும் கவலைப்படுவதாக இல்லை. ஆபிரிக்காவின் எல்லைகள் கண்காணிக்க முடியாத சல்லடைகளாக இருக்கின்றன. ஆபிரிக்க சுகாதார அமைப்பு ஒழுங்குபடுத்தப்படாததாக இருப்பதால் போலி மருந்துகளின் எண்ணிக்கையும்



அதற்கு ஒவ்வொரு ஆண்டும் பலியாகும் துயரர்களின் எண்ணிக்கையும் துல்லியமாகக் கிட்டவில்லை. இருந்தாலும்கூட, உகண்டா, தான்சானியா முதலான தேசங்களில் கிடைக்கும் மலேரியா மருந்துகளில் மூன்றுக்கு ஒன்று போலியானவை, தரக்குறைவானவை. இந்தியா மற்றும் சீனாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் இம்மருந்துகள் ஆபிரிக்க உயிர்களைக் கொல்கின்றன என்பது மட்டுமில்லை கவலை, இம்மருந்துகளை எதிர்க்கக்கூடிய ஆற்றல் மிகுந்த கிருமிகள் உருவாகவும் வீரியமற்ற இந்த போலிகள் காரண- மாகிவிடக் கூடும் என்பது இன்னுமே பெரிய கவலை தருவதாகும். இது உலகெங்கும் உள்ள மனிதர்களையே அச்சுறுத்தும் பிரச்சினையாக பேருருப் பெறும் ஆபத்துள்ள ஒன்று என்கிறது "கார்டியன்" செய்தித்தாள்.

# தெரியுமா?

★ கிறில் என்பது ஒரு வகை மீன். இதற்கு சூரிய ஒளியைக் காணப் பிடிக்காது. பகலில் கடலுக்கு அடியில் பதுங்கிக் கொள்ளும். இரவில் நடமாடும்.

★ பறவைகள் எவ்வளவு வேகமாகப் பறந்தாலும் அவற்றுக்கு வியர்க்காது. காரணம் அவற்றின் உடம்பில் வியர்வைச் சுரப்பிகள் கிடையாது.

★ கோழிமுட்டையின் ஓட்டில் சுவாசிப்பதற்கு எட்டாயிரம் நுண்துளைகள் உள்ளன.

★ உப்பை விரும்பிச் சாப்பிடும் விலங்கு முள்ளம்பன்றி.

★ மார்ஷ் வார்ப்னர் என்னும் பறவை, மற்ற பறவை- களைப் போல குரலை மாற்றி ஒலி எழுப்பும் திறன் கொண்டது.

★ காளான்கள் வெண்மை நிறத்தில் இருப்பதற்குக் காரணம் அதில் க்ளோரோ:பில் எனப்படும் பச்சையம் இல்லாமையே!

★ மரக்கட்டையில் வளரும் காளான்களும் தொட்டால் உடையக்கூடிய, தண்டுகள் இல்லாத காளான்களும் விஷத் தன்மை கொண்டவை.

★ மிகச் சிறிய மழைத்துளியின் விட்டத்தின் அளவு 1.03 மில்லி மீற்றர்.

★ உலகின் முதல் புத்தகம் கெலடிக் இன மக்களின் மொழியான கெலிக் மொழியில் 1567 ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்டு வெளியானது. இந்நூலில் இறைவணக்கப் பாடல்களே இடம் பெற்றிருந்தன.

★ கிரேக்க அறிஞரான பிளேட்டோ எழுதிய "குடியரசு" என்னும் நூல் 15 அடி நீளமுள்ள மரச்சுருளில் எழுதப்பட்டது.

★ பைபிளுக்கு அடுத்தபடியாக அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் பஞ்சதந்திரம்.

# சினிமா சினிமா

டில்லி மாணவியின் பாலியல் பலாத்கார சம்பவம் திரைப்படமாகிறது. மாணவியின் வேடத்தில் நடிக்க முன்னணி நடிகைகளில் பலர் விருப்பம் தெரிவித்த நிலையில், ரேவதி என்கிற ரே முடிவாகியிருக்கிறார். தமிழ், ஹிந்தி, தெலுங்கு என மூன்று மொழிகளில் தயாராகிறது. படத்துக்கு ".:.ப்ரீடம் என பெயர் வைக்கப்பட்டுள்ளது. பின்னணி இசை அனிருத். மாணவியின் மரணத்தையொட்டி நடிகர் அமிதாப்பச்சன் எழுதிய கவிதைகளை இப்படத்துக்காக பாடலாக்க இருக்கிறார்கள்.



மணிரத்னத்தின் உதவியாளர் பிஜோய் நம்பியார் இயக்கும் படம் "டேவிட்". இதில் வாய் பேசாத, காது கேளாத மாற்றுத்திறனாளி வேடம் ஏற்றிருக்கிறார் ஹிந்தி நடிகையும் நடனக் கலைஞருமான இஷா ஷெர்வானி. "இஷாவைப் போல் குணாதிசயம் உள்ள நடிகையை நான் பார்த்ததில்லை. படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பே படப்பிடிப்பு தளத்துக்கு வந்து விடும் இஷா அந்த கேரக்டராகவே வாழ ஆரம்பித்து விடுவார், பேச்சுக் கொடுத்தால், எதுவும் பேச மாட்டார்" என்கிறார் நடிகர் விக்ரம்.

சகுனி தோல்வியை அலெக்ஸ் பாண்டியன் ஈடுகட்டும் என்று நினைத்திருந்தார் கார்த்தி. ஆனால் இது முந்தைய படத்தை விட படுதோல்வியடைந்து விட்டது. அவரிடம் ஒரே மாதிரியான நடிப்பு வெளிப்படுகிறது. அவர் தன்னை கதைக்கேற்ப படத்துக்குப் படம் மாற்றிக்கொண்டேயிருக்க வேண்டும் என்று இப்போது பலரும் சொல்வதைக் கேட்டு நொந்து போயுள்ளார்.

உலகத்திலேயே சுவையான தண்ணீரில் 2ஆவது இடம் "சிறுவாணி" ஆற்றுத் தண்ணீருக்காம். அந்த ஆற்றில் குளிக்கப் போகும் கல்லூரி மாணவர்கள் வாழ்வில் நடக்கும் திகில் சம்பவங்களை வைத்து உருவாகும் படம் சிறுவாணி. மென்மையான காதல் கதையில் திகில் சம்பவங்களை கலந்திருக்கிறார்களாம். பேய் கதைகளுக்கு பெயர் பெற்ற ராஜேஷ்குமார் கதையை எழுதி உள்ளார். இயக்குநர் ரகுநாத்.

விஜய், "டிவி" யில் வெளியாகும், சரவணன் - மீனாட்சி தொடரில் நடித்து வரும் செந்தில் - ஸ்ரீஜா இருவரும் சினிமாவில் நுழைகின்றனர். ஸ்ரீஜாவுக்கு இதுதான் முதல் படம் என்ற போதும், செந்தில், செங்காத்து பூமியிலே படத்தில் ஏற்கனவே நாயகனாக நடித்தவர். இப்போது, கண் பேசும் வார்த்தைகள் என்ற படத்திலும், நடிகை இனியாவுடன் நடித்து வருகிறார்.



2012 எனக்கு மிகச்சிறப்பான ஆண்டு. 14 படங்களுக்கு மொத்தம், 35 பாடல்களை எழுதியுள்ளேன். அதில், 15 பாடல்கள் சூப்பர் ஹிட்டானவை என்று சொல்லும் மதன் கார்க்கி, மணிரத்னத்தின், கடல் படத்துக்காக மட்டும் மூன்று பாடல்கள் எழுதியிருப்பதை, தனக்கு கிடைத்த பெருமை என்கிறார்.



பூபதி பாண்டியன் இயக்கும் "பட்டத்து யானை" படத்தில் விஷாலுக்கு ஜோடியாக அறிமுக மாகிறார் அர்ஜுன் மகள் ஐஸ்வர்யா. தன் நெருங்கிய நண்பர் விஷால் கேட்டதால் சினிமாவுக்கு வந்ததாக சொல்கிறார். கோலி-வுட் படம் ஷூட்டிங் ஆரம்பிப்பதற்குள், பாலிவுட்டிலும் வாய்ப்பு வந்து சேர்ந்திருக்கிறது. அதுவும் ஷாரூக்கான் படம்.

கடல் படத்தில் கார்த்திக் மகனுடனும், வசந்த் இயக்கும் "மூன்று பேர் மூன்று காதல்" படத்தில் சேரன் மற்றும் விமலுடன் இணைந்து நடித்திருக்கும் அர்ஜுன், இனி மல்டி ஸ்டார் படங்களை தவிர்க்க முடியாது என கூறுகிறார். இரண்டு, மூன்று ஹீரோக்களுடன் இணைந்து நடிப்பது ஹிந்தியில்தான் பிரபலமாக இருந்தது. இப்போது தமிழிலும் அது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது. கதைகளுக்குத்தான் முக்கியத்துவம், இப்போது யாரும் "ஈகோ" பார்ப்பதில்லை" என்கிறார் அர்ஜுன்.

# சீன ஆதிக்கம் மற்றும் மீனவர்கள் பிரச்சினை குறித்து இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ்!

"விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக்கு உதவி செய்து, தற்போது இந்தியாவுக்குத் தெற்கேயும் சீனா வலுவாகக் காலூன்றி இருப்பது நமக்குப் பெரிய ஆபத்தாயிற்றே?"

"இந்தியாவைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் பாதுகாப்புத் துறையும் வெளியுறவு அமைச்சகமும் 24 மணி நேரமும் உன்னிப்பாகக் கவனிக்கின்றன. இலங்கையின் வட பகுதிகளான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு முதன்முதலாகச் சென்று வந்த வெளியுறவுச் செயலர் என்ற வகையில் சொல்கிறேன். அங்கே சீனாவின் ஆதிக்கம் இல்லை. சாலை போடுவதில் தொடங்கி வீடு கட்டித் தருவது வரை 500 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்றம் ஆகியவற்றை இந்தியாவே செய்து கொண்டிருக்கிறது."

"வெளியுறவுத்துறைச் செயலராக இலங்கை சென்று தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது பற்றி பேச்சுவார்த்தை நடத்தினீர்கள். ஆனால், இன்னமும் மீனவர்கள் மீதான தாக்குதலை இலங்கைக் கடற்படை நிறுத்தவில்லையே?"

"தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவது துரதிர்ஷ்டவசமானது. 2009 - 10 காலகட்டத்தில் இலங்கை அதிபர் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், வெளியுறவுச் செயலர் சி.ஆர்.ஜெயசிங்க உள்ளிட்டோருடன் பல கட்டப் பேச்சுவார்த்தை நடத்தினோம். "இந்தியக் கடல் எல்லையில் இருந்து சர்வதேசக் கடல் எல்லை மிகவும் அருகில் 18 நாட்டிக்கல் மைல் தொலைவில் அமைந்திருப்பதே தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதற்குக் காரண-மாக இருக்கிறது. அதற்காகச் சட்டப்படி வழக்குகளைப் பதியலாம். எக்காரணம் கொண்டும் தாக்கக் கூடாது" என்று இந்திய அரசின் சார்பாகவும், "இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் இரட்டை மடிப்பு வலை, விசைப்படகுகள் ஆகியவை இலங்கையின் வட பகுதியில் நாட்டுப் படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் பெரும்பாலான தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கிறது என்பதோடு இலங்கையின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகவும் இருக்கிறது" என்ற இலங்கை அரசின் வாதத்தை முன்வைத்தும் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

ஆனால், ஒரு முடிவுக்கு வரா-மலேயே அந்தப் பேச்சுவார்த்தை பாதியில் நின்றுவிட்டது. தமிழக மீனவர்களின் சிக்கல்களையும் இலங்கை மீனவர்களின் சிக்கல்களையும் தெளி-வாகப் புரிந்துகொண்டு, இருநாட்டு அரசாங்கங்களும் மீனவ அமைப்புகளுடன் பேசி, ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வடிவமைத்துக் கையெழுத்திட்டால்தான் தீர்வு காண முடியும். இப்போது போர் முடிந்து இலங்கையில் அமைதி நிலவுவதால், அதற்கான சாத்தியங்கள் அதிகம்

(இந்தியாவின் மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரும், அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவராகத் தற்போது பணியாற்றி வருபவருமான திருமதி நிருபமா ராவ் அண்மையில், "ஆனந்தவிகடன்" வார இதழுக்கு வழங்கிய பேட்டியொன்றின் சில பகுதிகளே மேலே தரப்பட்டுள்ளன.)






# ரீடர்ஸ் டைஜஸ்ட்!

இன்று, உலகிலேயே மிக அதிக மொழிகளில் வெளியாகி, எல்லா நாட்டு மக்களையும் கவர்ந்துள்ள, "ரீடர்ஸ் டைஜஸ்ட்" பத்திரிகையை, இந்த விதத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று, டேவிட் வேலஸ் என்பவருக்கு, முதன் முதலில் தோன்றியது 1922இல். எப்படிப்பட்ட விஷயங்களைக் கொடுத்தால், வாசகர்கள் ஆவலோடு படிப்பர் என்பது, அவருக்குத் தெரிந்திருந்தது.

இந்த பத்திரிகை தொடங்கியதிலிருந்து, 35 ஆண்டுகள் வரைக்கும், விலையில் கூட மாறுதல் செய்யவில்லை. இதனால், வாசகர்களிடம் நன்மதிப்பையும், அபிமானத்தையும் பெற முடிந்தது. அவரவர்க்கு விருப்பமான பகுதி, இன்ன இன்ன பக்கத்தில் இருக்கும் என்ற நிச்சயமும், வாசகர்களை வெகுவாக கவர்ந்தது. அதன் வாசகர்களிடம் இந்தப் பழக்கம், இன்னமும் மாறவில்லை.

இந்த நவீன அவசர உலகில், எதையும் சாவகாசமாக, விரிவாகப் படித்துக் கொண்டிருக்க, பெரும்பாலான வாசகர்களுக்கு, நேரம் கிடைக்காது என்பதை உணர்ந்த டேவிட் வேலசின் வெற்றிக்கு வித்து, எவ்வளவு விரிவான கட்டுரையையும், சுருக்கி, சுவை குன்றாது, காரம் குறையாது கொடுக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியது. அதே கலைத்திறன் தான் இன்றும், "டைஜஸ்ட்"இற்கு உறுதுணை.

இந்த கலையில், தம் உதவியாளர்கள் நன்றாகத் தேர்ச்சி பெறும் வரைக்கும், டேவிட் வேலஸ், தாமும் உடனிருந்து, சுருக்கி, செப்பம் செய்யும் கடினமான பணியைச் செய்து வந்தார். பல அரிய கட்டுரைகளை செப்பம் செய்வதால், முழு அளவை விட, அதிக சுவாரஸ்யமாகவே அமைந்திருக்கின்றன.

கடந்த 1934 முதல், ஒவ்வொரு இதழிலும், புத்தகச் சுருக்கப் பகுதியை வெளியிடத் துவங்கினார் டேவிட் வேலஸ். இது, வாசகர்களுக்கு மிகவும் பிடித்த பகுதியா-னது. இந்த பகுதியில், உலகப் புகழ் பெற்ற நூல்களெல்லாம் சுருக்கமாக வெளிவரலாயின.

வேறொரு புதிய யோசனையும், வேலசுக்குத் தோன்றியது. சிறந்த கட்டுரைகளை நேரடியாக, தாமே முதலில் வெளியிடாமல், "டைஜஸ்ட்" சார்பில் பிற பத்திரிகைகளுக்கு அனுப்பி, வெளியிட வைத்தார். பின், அவற்றை தமக்கே உரிய திறத்தில், சுருக்கிச் செப்பனிட்டு, "டைஜஸ்ட்"டில் வெளியிடலானார். இன்று, "ரீடர்ஸ் டைஜஸ்ட்"டில் வெளியாகும் கட்டுரைகளில் பெரும்பகுதி, இப்படித்தான் பிரசுரமாகின்றன.

50 ஆண்டுகளுக்கு முன்பே, "டைஜஸ்ட்"டில் வெளிவரும் ஒரு துணுக்கிற்கு, நூறு டொலர் சன்மானம் அளித்தனர். பெரிய கட்டுரைகளுக்கு, 7,500 டொலர் வரைக்கும் சன்மானம் கொடுத்தனர்.

வாசகர்களுக்கு, வாழ்க்கையில் பிடிமானமும், நம்பிக்கையும், துணிவும் முன்னேறத் துடிப்பும் ஏற்படத் தூண்டுகிற கட்டுரைகளைத் தான், "டைஜஸ்ட்"டில் வெளியிடுவது என்று, உறுதி கொண்டிருக்கின்றனர். இதுவே, இதன் வெற்றிக்கு காரணம்.

# வறுமையற்ற இலங்கையை உருவாக்க அர்ப்பணிப்பு சேவை அவசியம்



(யாழ்ப்பாணம்)

அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் தமது கடமையில் மட்டும் நின்றுவிடாது அர்ப்பணிப்புடன் செயற்படுவதனூடாகவே வறுமையற்றதோர் இலங்கையை உருவாக்க முடியும் என ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேசசெயலர் பிரிவில் வறுமையற்றதோர் இலங்கை எனும் செயலமர்வு நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில்; எமது பிரதேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் 'மக்கள் துன்பப்பட்டு பலவிதமான இழப்புக்களை சந்தித்து நிர்க்கதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் துன்பங்களை போக்குவது என்பது முறையானதொரு திட்டமிடல் ஊடாக நடைமுறைக்கு கொண்டுவரமுடியும். பிரதேசங்களுக்கு ஏற்றவகையிலான தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கி ஊக்குவிப்பதனூடகவும் வறிய குடும்பங்களையும் இனங்கண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை படிப்படியாக உயர்த்துவதற்கு முயற்சி எடுப்பதனூடாகவும் வறிய குடும்பங்களின பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்யமுடியும்.

2013ஆம் ஆண்டில் வறுமையினை ஒழிப்பதற்காக அரச உத்தியோகத்தர்கள் உட்பட அனைவரும் செயற்படவேண்டும். தடைகள் ஏதும் ஏற்படும் பட்சத்தில் எமக்கு அறியத்தருவதனூடாக உரிய இடங்களில் தெரிவிப்பதனூடாக தடைகளை விலக்கி வறுமையினை ஒழிக்கும் குறிக்கோளினை அடைய முடியும். சமூகங்களில் உள்ள இன, மத, அரசியல் வேறுபாடுகளினை விடுத்து எம் அனைவரினதும் சிந்தனையாக எமது பிரதேசங்களில் வறுமையினை ஒழிக்கவேண்டும் என்பதே காணப்படவேண்டும். எங்கே வறுமை உள்ளதோ அங்கே நாம் அனைவரும் ஒண்றிணைந்து செயற்படுவதே இலக்காக இருக்க வேண்டும். 2014ஆம் ஆண்டு இந்தப்பிரதேசத்தில் ஓர் வறுமையற்ற பிரதேசமாக மாற்றமடைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நெடுந்தீவு கலாசார மண்டபத்தில் நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறீ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு பிரதேச இணைப்பாளரும் நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளருமான தானியேல் றெக்சியன் (ரஜீவ்), துறைசார் அதிகாரிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வெள்ள அனர்த்தம் காரணமாக உழுந்துப் பயிர்ச்செய்கை பாதிப்பு

(வவுனியா)

வெள்ள அனர்த்தம் பாதித்த வவுனியா மாவட்டத்தில் உழுந்துப் பயிர்ச்செய்கை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக உழுந்துப் பயிர்ச்செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். தாம் உழுந்துப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு சில நாட்களிலேயே மழை தொடர்ச் சியாக பெய்ததினால் சிறுபயி ராக இருந்த நிலையிலேயே பயிர்கள் வெள்ளத்தால் பாதிப் படைந்துள்ளது.

எனினும், அந்த பயிரை தாம் தொடர்ச்சியாக பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்ததனால் சில பிரதேசத்தில் பயிர் வளர்ந்த போதிலும் அது பூத்து காய்க்கும் நிலையில் மீண்டும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது. இதனால் பூக்கள் கொட்டி விட்டன. பயிர்கள் வளர்ந்துள்ள போதிலும் அவற்றில் காய்களை காணமுடியவில்லை எனவும் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் விளைச்சல் சிறப்பாக இருந்த போதிலும் இவ்வருடம் இவ்வாறான நிலை ஏற்பட்டமையினால் தமது ஜீவனோபாயம் பாதிப் படைந்தள்ளதாகவும் தெரிவிக்கும் அவர்கள், இது தொடர்பில் விவசாய திணைக்களம் கவனமெடுத்து தமக்கானநட்ட ஈடுகளை வழங்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் தாம் உழுந்து பயிர்ச்செய்கையில் ஈடுபட உந்துதலாக இருக்கும் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை, இவ்வருடம் பல ஏக்கர் உழுந்த பயிர்ச்செய்கை பாதிப்படைந்துள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளதுடன், இவற்றில் 50 வீதமானவை பகுதியளவிலும் ஏனையவை முற்றாகவும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# அழகியல் கோலங்களில் ஆடல்வடிவங்கள் சிறப்புள்ளவை

## கலைஞர் வேல்ஆனந்தன்

(யாழ்.நிருபர்)

எமது இனத்தின் அடையாளங்களை வெளிப்படுத்தும் ஆடல் அளிக்கைகளை துல்லியப்படுத்தும் வரலாற்றுத் தேவைமிகு அரும்பணியில் ஈடுபட நடன ஆசிரியைகள் முன்வரவேண்டும்.

இவ்வாறு செல்வி எறின் பிறின்சி பீற்றர்தாஸ் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றத்தின் போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய வடக்கு கிழக்கு மாகாணக் கல்விகலாசார அமைச்சின் ஒய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் நாட்டியவேள் கலைஞர் வேல்ஆனந்தன் குறிப்பிட்டார்.

திருமறைக் கலாமன்ற இயக்குனர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலைஞர் வேல் ஆனந்தன் தொடர்ந்து பேசுகையில்,

ஓர் இனத்தினுடைய பண்பாட்டு விழுமியங்களைக் காலாதிகாலமாக ஒட்டிவரும் 'சுயங்களை' அந்த அடையாளங்களின் வெளிப்பாடுகளை தனித்துவமாகத் துல்லியப்படுத்துபவவை அந்த இனக்குழுமத்தின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்துள்ள கலை வடிவங்களேயாகும். அவற்றின் மானுட ஆன்மாவின் மூலவிசை உந்துதலால் முகிழ்ந்தெழுந்து உடலுறுப்புக்கள் ஊடாக உருவெடுக்கும் அழகியல் கோலங்களில் ஆடல் வடிவங்கள் சிறப்பானவை.

ஆடலியல் என்ற பெரும் சமுத்திரத்தில் இருந்து வடிகால்களாக உற்பத்தியானவைகளே 'ஆடல்வகைகள்' என்பதுதான் வரலாறு.

இன்று நம்மிடையே பயில்நிலையில் உள்ள நிருத்திய வடிவமான பரதநாட்டிய ஆடல் வகையில் அரங்காற்றுகைத் திறன் பெற்ற ஆற்றுகை நிகழ்தகவுள்ள செல்வி எறின் பிறின்சி பீற்றர்தாஸ் தனது அளிக்கையைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். அவரது 'அரங்கேற்றம்' என்பதன் எண்ணக்கரு ஆரம்பம் என்பதுதான். இன்று முதல் அவர் தனது ஆடற்கலை ஆற்றலை அகலப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

ஆடல் கலைவடிவங்கள் வெறும் பொழுதுபோக்குச் சாதனமல்ல. மானுடத்துக்கானமாண்புறு செய்திகளை அழகியல் அந்தஸ்தை வெளிப்படுத்தும் ஓர் உன்னதமான ஊடகம் என்பது மறுக்கப்படமுடியாதது. இந்த நிதர்சனத்தின் பெறுபேறுகளை எட்டுவதற்கு இதுசார்ந்த தேடல்களைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

இவரது குரு திருமதி சுதர்சினி கரன்சன் அவர்கள் ஆடல் வடிவத்தின் அசலான அறிமுறை செயல்முறை அம்சங்களின் எண்ணக்கருவை தன்னுள் உள்வாங்கிச் செயற்படும் ஆற்றல்மிக்க ஆடல் ஆசிரியை. அவர் இன்னும் பலரை ஆடல் கலைஞர்களாக உருவாக்க வேண்டும்.

அவர் தனது மாணவிகளை புதிய பரிமாணத்துக்குரிய தேடல்களை நோக்கி நெட்டித்தள்ளும் ஆளுமையை தன்னுள் வளர்த்து கொள்வதுடன் இனத்துவ அடையாளத்துடன் கூடிய ஆடல் துணுக்குகளை துல்லியப்படுத்தும் வரலாற்றுத் தேவைமிகு பணியிலும் ஈடுபட வேண்டுமென்வும் குறிப்பிட்டார்.

யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகத்துறைத் தலைவர் அருட்கலாநிதி ஞானமுத்து பிலேந்திரன் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (10)

# திருநெல்வேலியில் இன்று மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)


திருநெல்வேலியில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் பொதுமக்களுக்கு தொற்றாநோய்களுக்கான மருத்துவ பரிசோதனை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலைச் சுடர் சனச மூகநிலையம், பிள்ளையார் வீதி, திருநெல்வேலி என்ற இடத்தில் இன்று காலை 8.30 - 12.30 வரை இந்த மருத்துவ முகாம் இடம் பெறும். போசாக்கு நிலைமதிப்பீடு, உயர்குருதி அமுக்கம், சலரோகம், பொதுவான பரிசோதனைகள் என்பன இடம்பெறும்.

35 வயதுக்கு மேற்பட்ட இருபாலரும் கலந்து பயன்பெறலாம். முதல் நாள் இரவு உணவை 10 மணிக்குமுன்பாக அருந்திய பின் பரிசோதனை வரை உணவோ, பானமோ அருந்தாது வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய நிலக்கீழ் எண்ணெய்த்திட்டம்

40 வருடங்கள் பழமையான நிலக்கீழ் எண்ணெய்த் திட்டத்தை கைவிட அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. கொழும்பிலிருந்து கொலன்னாவை எரிபொருள் களஞ்சியசாலை வரை செல்லும் புதிய நிலக்கீழ் எண்ணெய்க் குழாய் திட்டம் விரைவில் செயற்படுத்தப்படவுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது காணப்படும் நிலக்கீழ் எண்ணெயக் குழாய் திட்டம் 40 வருடங்கள் பழமையானது என அவ் அமைச்சு குறிப் பிட்டுள்ளது. புதிய நிலக்கீழ் எண்ணெய்க் குழாய் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.



காரைநகர் மணிவாசகர் சபை நடத்திய மணிவாசகர் விழா அண்மையில் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்றபோது சைவசமய பாடப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு நல்லை ஆதீன முதல்வர் மற்றும் யாழ்.போதாவைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ந.ஜெயக்குமாரன் ஆகியோர் பரிசில் வழங்குவதையும், தங்கப்பதக்கம் பெற்ற காரைநகர் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களையும் படங்களில் காணலாம். (10)

# 2015 இற்குள் வறுமையைப்போக்க 'வாழ்வின் எழுச்சித்திட்டம்' வழிவகுக்கும்

## யாழ். அரச அதிபர்




(தெல்லிப்பளை)

இந்த நாட்டின் ஜனாதிபதியின் மகிந்த சிந்தனை தூரநோக்கின் அடிப்படையில் எங்களுடைய நாட்டில் இருக்கின்ற மக்களுடைய வறுமையை 2015 இற்கு முதல் போக்க வேண்டும் என்ற நோக்கிலும், நல்ல வாழ்க்கைத் தரத்தோடும் வாழ வேண்டும் என்ற நோக்கிலும் இந்த திவிநெகும என்ற வாழ்வின் எழுச்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தெல்லிப்பளை பிரதேசசெயலகத்தில் நடைபெற்ற வாழ்வின் எழுச்சி சம்பந்தமான கூட்டத்தில் தலைமையுரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் வாழ்கின்ற மக்களில் 1.5 வீதமானவர்கள் வறியவர்கள். ஆனாலும் யாழ் மாவட்டத்தில் இந்த வீதம் சற்று அதிகமானதாகும்.

இந்தத் திட்டத்தை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கௌரவ அமைச்சர் பசில்ராஜபக்ஷ அவர்களின் பொருளாதார அமைச்சின் ஊடாக வாழ்வாதாரதிட்டம், வாழ்வின் எழுச்சித்திட்டம், கிராம எழுச்சித்திட்டம், சமுர்த்தி அபிவிருத்தித் திட்டம் போன்ற பல திட்டங்களை ஒன்றிணைத்து மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்த மாவட்டத்திலும் இதனை மேற்கொள்ள வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் ஆர்வமாக உள்ளார்கள். அதற்கேற்றவகையில் நிறுவனத் தலைவர்களும் விவசாயம், கமநலசேவைகள், மீன்பிடி போன்ற ஒவ்வொரு துறையைச் சார்ந்த உயரதிகாரிகளும், வங்கிகளின் முகாமையாளர்களும், கிராமஅலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள் ஆகிய எல்லோரும் சேர்ந்து இந்த திட்டத்தை இப்பிரதேச மக்களுடைய வறுமையைப் போக்கும் நோக்கில் உழைக்க வேண்டும் எனஅவர் கூறினார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கருத்துரையாற்றும் போது,

எதிர்வரும் 2016ஆம் ஆண்டிற்கு முன்னராக வாழ்வின் எழுச்சித் திட்டத்தினால் வறுமையை ஒழிக்க வேண்டும் என்ற அதிமேதகு ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த திவிநெகும என்ற வாழ்வின் எழுச்சி திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

மேலும் 2013 ஆம் ஆண்டிலே இந்த திட்டத்திற்காக 1500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பளை பிரதேசசெயலகத்தில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக மீள்குடியேற்றத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கி இருப்பதுடன், பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் முக்கியமானது சுத்தமான குடிநீர் பெற்றுக் கொடுப்பதுடன் இந்திய வீட்டுத் திட்டத்தின் மூலம் 1200 பயனாளிகளுக்கு வீட்டுவசதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் தெல்லிப்பளை வைத்தியசாலை பழைய இடத்தில் ஆரம்பித்து நடைபெற்றுவரும் நிலையில் இப்பிரதேசத்தில் புதிய சிறுவர் வைத்தியசாலை அமைக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (39)

# வீதியில் பெருகும் வெள்ளம்; தீர்வுகாண மக்கள் கோரிக்கை

(ஆனைக்கோட்டை)

நவாலி பிரசாத் சந்தையின் முன்பாக நேற்றுமுன்தினம் பெய்த மழையினால் பெரும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

அண்மையில் பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளம் சந்தையின் உள்ளே புகுந்ததால் வியாபாரிகளும், பொது மக்களும் பெரும் அவலத்துக்குள்ளானார்கள். இவற்றுக்கு முன்பாகவுள்ள வீதிக்கு கற்கள் பதித்து தாரிடும் போதே சந்தையின் முன்பக்கம் மிகவும் பதிவாக உள்ளமையால் சகல வெள்ள நீரும் இப்பள்ளத்திலே தேங்கி நிற்கின்றது.

இதனால் வாகனங்கள் செல்லும் போது வெள்ளம் சிதறடித்து சந்தையின் உட்பகுதிக்குச் செல்கிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள் பல தடவைகள் எடுத்துக் கூறிய போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் சம்பந்தப்பட்டவர்களும் இப்பகுதி பிரதேச சபை உறுப்பினர்களும் மழை பெய்யும் போது நேரில் வந்து பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (104)

# வடக்கில் வாழ்வின் எழுச்சி இலக்கு நோக்கிய பயணம்

### இதுவரை கடந்து சென்றவை

உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நாடுமுழுவதும் 25 இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை விருத்தி செய்யும் நோக்குடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் 43,500 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அதாவது ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் தலா 100 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு மரக்கறி விதைகள், பழமரங்கள், தென்னம் பிள்ளைகள், கோழிக்குஞ்சுகள் மற்றும் கடற்றொழில் மீன்பிடி உபகரணங்கள் என்பன கட்டம் கட்டமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் இதனைத் தவிர அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலைகள் என்பவற்றிற்கும் மரக்கறி விதைகள், பழமரங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் பொது இடம் தெரிவு செய்யப்பட்டு அவ்விடத்தில் வீட்டுத்தோட்டச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை 4 கட்டங்களாக விவசாய உற்பத்திதிட்டம் தொடர்பாக மரக்கறி விதைகள், பழமரங்கள் என்பன விநியோகிக்கப்பட்டுள்ளன. முதலாவது கட்டம் 2011 ஆம் ஆண்டு செப்ரெம்டர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ் முதலாவது கட்டத்தில் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த 100 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 43,500 குடும்பங்களுக்கு பல்வேறு வகையான மரக்கறி விதைகள் வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக மார்ச் மாதம் 43500 குடும்பங்களுக்கு மரக்கறி விதைகள் வழங்கப்பட்டன. மேலும் இதே காலப்பகுதியில் மூன்றாம் கட்டமாக கல்வித்துறை, சுகாதாரத்துறையைச் சேர்ந்த 1200 அரச அலுவலர்களுக்கு விதைப்பைக்கறகள் வழங்கப்பட்டுள்ளன.

(தொடரும்....)

# பதிவிறக்கப் பெட்டகம்

சில பத்தாண்டுகளுக்கு முன் டி.வி.யின் கண்டுபிடிப்பும் பரவலாக்கமும் திரைப்படங்களுக்கு ஒரு சவாலாக ஆனது. மேற்கத்திய உலகம், குறிப்பாக, ஹொலிவுட் அந்த சவாலை மிகவும் நேர்மையாக நெஞ்சை நிமிர்த்தி எதிர்கொண்டது. கதைக்குப் பொருத்தமான பிரமாண்ட கிராபிக்ஸ் [அல்லது பிரமாண்டத்துக்கு ஏற்ற கதைகள்], நுட்பமான ஒலி, அதி துல்லியமான கமெராக்கள் போன்றவற்றின் மூலம் திரைப்படங்களைத் திரையரங்குகளில் மட்டுமே பார்க்கவேண்டும் என்ற அளவுக்குத் தங்களைப் பலப்படுத்திக்கொண்டது. எந்தவொரு ஹொலிவுட் படத்தையும் டி.வி.டியில் பார்ப்பதைவிட திரையரங்கில் பார்க்கும் அனுபவத்தையே பார்வையாளர்கள் அனைவரும் விரும்பும் அளவுக்கு ஆக்கிவிட்டனர். அப்படியாக, டி.வி. மூலம் வந்த நெருக்கடியை மேற்கத்தியர்கள் வெகு எளிதாகத் தாண்டினர். தமிழ் சமூகமோ இந்தத் தொழில்நுட்பப் போட்டியை படு நோஞ்சானாக எதிர்கொண்டது. இமயங்களும் சிகரங்களும் வாலை ஒடுக்கிக்கொண்டு டி.வி.யில் தஞ்சம் புகுந்தனர். அதுதான் அவர்களுடைய இயல்பான இடம் என்பது வேறு விஷயம். இதன் இன்னொரு பக்கத்தில் உலக அழகியை எலும்புக்கூடாகக் காட்டுவது, கயிறு கட்டி பறந்து பறந்து அடிப்பது போன்ற கிராபிக்ஸ் கலக்கல்கள் திரையை நிரப்பின. அப்படியாக, தொழில்நுட்ப சவாலை எப்படி எதிர்கொள்வது என்பதற்கு மேற்குலகம் ஒரு வழியைக் காட்டியிருக்கிறது. எப்படி எதிர்கொள்ளக் கூடாது என்ற வழியை நம் தமிழ்கூறும் நல்லுலகம் காட்டியிருக்கிறது.

– **பி.ஆர்.மகாதேவன்**

ஒரு படத்தை எடுக்கும்போது, முதலில் அதன் 'மைய நோக்கம்' (Theme) என்ன என்பதை, ஒன்று இரண்டு சொற்களுக்குள் வருமாறு கண்டுகொள்ள முடியுமாவென முயற்சிசெய்ய வேண்டும். ஒவ்வொருமுறை நான் படமெடுக்கும்போதும், அதன் 'தீம்' என்ன என்று நான் நினைக்கிறேனோ, அதன் மையப் புள்ளியை, ஒரு சொல்லில் அடக்கி வைத்துக்கொள்வேன். "தி கோட்ஃபாதர்" படத்தில் அது 'வாரிசுமுறை' (Succession), "தி கொன்வெர்சேஷன்" படத்தில் அது 'அந்தரங்கம்' (Privacy), "அபொகாலிப்ஸ் நவ்"–யில் அது 'ஒழுக்கம்'.

அதற்கு என்ன அவசியம் என்றால், ஒரு இயக்குனர் எந்த நேரமும் செய்துகொண்டிருக்கும் செயல் 'முடிவெடுப்பது' தான். முழுநாளும் அவர் எதைத் தேர்ந்தெடுப்பது என்பதை முடிவுசெய்து கொண்டே இருக்கிறார், 'நீளமான முடியாக வேண்டுமா குட்டையாகவா?' 'பகட்டான ஆடையா அல்லது சாதாரண உடையா?' 'தாடி வைத்துக்கொள்ளலாமா வேண்டாமா?'.. உங்களுக்குப் பலசமயங்களில் அதற்கான பதில் தெரியாமல் போகலாம். அப்போதெல்லாம் அந்தப் படத்தின் 'தீம்' என்ன என்று அறிந்துவைத்திருப்பது உங்களுக்கு உதவும்.

– Francis Ford Coppola

"லோர்ட் ஒப் த ரிங்ஸ்" படத்தின் "கொலும்" அனிமேஷன் கதாபாத்திரத்தை அன்டி செர்கிஸ் என்ற நடிகரே செய்தார். அவரின் உடல் மற்றும் முக அசைவுகள் 'மோஷன் கப்சரிங்' முறையில் பிரதி எடுக்கப்பட்டு அனிமேஷன் பாத்திரத்துக்குக் கொடுக்கப்பட்டன. நோஞ்சானான அந்தப் பாத்திரத்தில் நடித்த அதே நடிகர்தான் ராட்சஸ உருவம்கொண்ட கிங் கொங் பாத்திரத்திற்கான மோஷன் கப்சரிங்–குக்கும் நடித்திருக்கிறார். கொரில்லாக் குரங்கின் உடல்மொழியை நம்பகத்தன்மையோடும் அதேசமயம் கதைக்குத் தேவையான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையிலும் அற்புதமாக செய்திருக்கிறார் அவர். இந்த வகையான தொழில்நுட்ப உத்தியின் முன்னேறிய வடிவமே "அவதார்" படத்திலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

– **சார்லஸ்**

உருது மொழியில் கவிஞர்களாக இருக்கும், குல்ஸார், ஜாவேத் அக்தர் போன்ற ஆட்கள் பாடல் வரிகளை எழுதும் பொழுது...அதன் தரம் எங்கோ சென்றுவிடுகிறது. ஆனால், நமது தொன்மையான தமிழ் மொழியின் திரைப்படப் பாடல்களின் தரம்? ஏன் பிரமிள் போன்றவர்களது நவீன கவிதைகளை யாரும் பாடலாக்க முன்வருவதில்லை என்று தெரியவில்லை. பெரும்பாலும் மிக அரதப்பழசான பாடல் வரிகளை வைத்தே ஜல்லியடித்துக் கொண்டிருக்கிறோம். [வைரமுத்து – இளையராஜா கூட்டணி உடைந்தது மிகப் பெரிய இழப்பு என்பதில் சந்தேகமே இல்லை]. வைரமுத்துவின் மீது எனக்கு பல விமர்சனங்கள் இருந்தாலும், போகிறபோக்கில் அவரது பாடல்களில் தெறிக்கும் வரிகளுக்கு ஈடாக இன்றிருக்கும் யாராலும் எழுத முடியவில்லை என்பதுதான் உண்மை.

– **மாஸ்டர் சிஃபு**

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

சென்றவாரத் தொடர்ச்சி...

3) காரங்களை அமோனியம் உப்புக்களுடன் வெப்பமேற்றினால் அமோனியா வாயு வெளியேற்றப்படும்.

$NH_4Cl + NaOH \rightarrow NaCl + NH_3 \uparrow + H_2O$

4) காரங்கள் பல உலோகங்களுடனும் அலோகங்களுடனும் தாக்கமுறக்கூடியவை.

உதாரணமாக: சோடியம் ஐதரொட்சைட்டு, நாகம், அலுமினியம், வெள்ளியம், சிலிக்கன், குளோரின், கந்தகம், பொசுபரசு ஆகியவற்றுடன் தாக்கமுறுகிறது.

$2NaOH + Zn \rightarrow Na_2ZnO_2 + H_2$

$2NaOH + 2Al + 2H_2O \rightarrow 2NaAlO_2 + 3H_2$

$2NaOH + Sn + 2H_2O \rightarrow Na_2SnO_2 + 3H_2$

சோடியம் தானேற்று

$2NaOH _ Si H_2O \rightarrow Na_2SiO_3 + 2H_2$

$6NaOH + 3Cl_2 \rightarrow NaClO_3 + 5NaCl + 3H_2O$

சூடான செறிந்தது

5) காரங்கள் அரிக்குமியல்பு உடையவை. இவை தோலிலும் தசையிலும் உள்ள புரதங்களுடன் தாக்கமுற்று அவற்றைப் பிரிக்கும்.

இவ்வியல்புகள் இலிதியம் ஐதரொட்சைட்டு, சோடியம் ஐதரொட்சைட்டு, பொற்றாசியம் ஐதரொட்சைட்டு என்ற ஒழுங்கில் அதிகரிக்கும்.

II ஆம் தொகுதியுடன் ஒப்பிடும்போது I ஆம் தொகுதி மூலகங்களின் ஐதரொட்சைட்டுகள் காரவியல்பு கூடியவை. II ஆம் தொகுதி மூலகங்களின் ஐதரொட்சைட்டுகளில் காரத் தன்மையும் மேல் இருந்து கீழ்வரும் ஒழுங்கில் அதிகரிக்கும்.

### சுவாலைப் பரிசோதனை

S தொகுப்பு மூலகங்களில் பெரும்பாலானவை சுவாலைப் பரிசோதனையின் போது நிறச் சுவாலைகளைத் தரும்.

சுவாலைப் பரிசோதனை பின்வருமாறு செய்யப்படுகிறது. தரப்பட்ட உலோக உப்பு சிறிதளவு செறிந்த HCl அமிலத்தினால் நனைக்கப்பட்டு, ஒரு பிளாற்றினம் கம்பியில் அல்லது பென்சிற் கூரில் அல்லது கன்னார்த்துண்டில் எடுக்கப்பட்டு பன்சன் சுவாலையொன்றின் ஓரத்தில், பிடித்தால் அது பின்வரும் சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நிறமுள்ளதாக மாறும்.

| உலோகம் | சுவாலையின்நிறம் | உலோகம் | சுவாலையின் நிறம் |
|---|---|---|---|
| 1. இலிதியம் | சிவப்பு | 6. கல்சியம் | செங்கட்டிச் சிவப்பு |
| 2. சோடியம் | பொன் மஞ்சள் | 7. பேரியம் | அப்பிள் பச்சை |
| 3. பொற்றாசியம் | நாவல் | 8. துரந்தியம் | கரும் சிவப்பு |
| 4. உருபீடியம் | கடும் சிவப்பு | 9. றேடியம் | கரும் சிவப்பு |
| 5. சீசியம் | நீலம் | 10. பெரிலியம் | இல்லை |
| | | 11. மக்னீசியம் | இல்லை |

S தொகுப்பு மூலகங்களில் உள்ள இலத்திரன்கள் சுவாலையினால் இலகுவில் கிளர்வூட்டப்படக் கூடியனவாய் இருப்பதால் உயர்ந்த சக்தி மட்டங்களுக்கு உயர்த்தப்படலாம். மீண்டும் இலத்திரன்கள் பழைய நிலைகளுக்குத் திரும்பும்போது சிறிதளவு சக்தி கதிர்க்கப்படுகிறது. இது புலனாகக்கூடிய ஒளி நிறங்களாகத் தெரிகிறது.

S தொகுப்பு மூலகங்களின் உப்புக்களின் கரைதிறன்

முதலாம் தொகுதி

இலிதியத்தின் உப்புக்கள் அநேகமாக எல்லாம் நீரில் கரையக்கூடியவை. இலிதியம், புளோரைட்டு, இலிதியம், பொசுபேற்று, இதிலியம் காபனேற்று ஆகியவை நீரில் கரைவதில்லை.

சோடியம், பொற்றாசியம் உப்புக்கள் அநேகமாக எல்லாம் நீரில் கரைபவையாகும்.

உருபீடியம், சீசியம் ஆகிய மூலகங்களின் உப்புக்களும் அநேகமாக நீரில் கரையக்கூடியவை. ஆனால் பொற்றாசியம் உருபீடியம், சீசியம் ஆகிய மூலகங்களின் பெரிய எதிர் அயன்களைக் கொண்ட உப்புக்களின் கரைதிறன் குறைவானதாகும்.

### இரண்டாம் தொகுதி

இத்தொகுதி மூலகங்களின் உப்புக்களின் கரைதிறன் முதலாம் தொகுதி உப்புக்களின் கரைதிறன்களிலும் குறைந்தவையாகும். அநேகமான தனி ஏற்றமுள்ள எதிர் அயன்களை உடைய சேர்வைகள் கரையும் இயல்புடையவையாக இருக்கும்.

உதாரணம் :- மக்னீசியம் நைத்திரேற்று கல்சியம் குளோரைட்டு ஆனால் இரட்டை எதிர் ஏற்றம் அல்லது மூன்று எதிர் ஏற்றங்களை உடைய எதிர் அயன்களை உடைய உப்புக்கள் இலகுவில் நீரில் கரைவதில்லை.

**உதாரணம் :- காபனேற்றுக்கள்** $CO_3^{2-}$, சல்பேற்றுக்கள் $SO_4^{2-}$ பொசுப்பேற்றுக்கள் $PO_4^{3-}$

S தொகுப்பு மூலகங்களின் கரைதிறன் பற்றி பொதுக் கோட்பாடுகள் சொல்வது கடினம். பின்வரும் தன்மைகளை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

1) உயர் ஏற்றமும், குறைந்த அயனாரையும் கரையாத் தன்மையை ஏற்படுத்துகின்றன.

உதாரணம் : இலிதியம், பெரிலியம், மக்னீசியம் குறிப்பாக (இரட்டை ஏற்றமுள்ள அயன்களுடன் இணைந்தவை)

2) தாழ்ந்த ஏற்றமும், கூடிய அயனாரையும் உடைய மூலகங்களின் உப்புக்கள் கரையாத் தன்மையை அடைகின்றன.

உதாரணம்: பொற்றாசியம் நால்பீனைல்போறேற்று $KB(C_6H_5)_4$

முதலாம் இரண்டாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுக்கள்

முதலாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுகள் வெண்மையான திண்மங்களாகும். நீரில் நன்றாகக் கரையக்கூடியவை. இவற்றில் இலிதியத்தைத் தவிர்ந்த மற்றைய காபனேற்றுக்களை வெப்பத்தினால் பிரிகையுறச் செய்யமுடியாது. இலிதியம் காபனேற்று மட்டும் வெப்பம் ஏற்றும்போது பிரிந்து இலிதியம் ஒட்சைட்டையும் காபனீர் ஒட்சைட்டையும் தரும்.

$Li_2CO_3 \rightarrow Li_2O + CO_2$

இரண்ாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுக்களும் வெண்மையான திண்மங்களாகும். இவை நீரில் கரையாதவை, வெப்பத்தினால் பிரிகையுறக்கூடியவை

உதாரணம்: $MgCO_3 \rightarrow LiO + CO_2$

இரண்டாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுக்களும் வெண்மையான திண்மங்களாகும். இவை நீரில் கரையாதவை. வெப்பத்தினால் பிரிகையுறக்கூடியவை.

உதாரணம் : $MgCO_3 \rightarrow MgO + CO_2$

ஆனால் இவை பிரிகையுறக்கூடிய வெப்பநிலை Be தொடக்கம் Ba வரை ஒழுங்காக உயர்ந்து கொண்டு செல்கின்றது. இரு தொகுதிகளிலும் காபனேற்றுக்களின் உறுதிப்பாடு அதிகரிக்கின்றது.

இரு பிரதானமான காபனேற்றுக்கள் சோடியம் காபனேற்றும், கல்சியம் காபனேற்றும் ஆகும். சோடியம் காபனேற்று கண்ணாடி, சவர்க்காரம், கடதாசி ஆகியவற்றிலும் வன்னீரை மென்னீராக மாற்றுவதற்கும் உபயோகிக்கப்படும். கல்சியம் காபனேற்று சீமெந்து தயாரிப்பதிலும் கண்ணாடி தயாரிப்பதிலும் உபயோகப்படுகிறது.

### முதலாம் இரண்டாம் தொகுதி மூலகங்களின் ஐதரசன் காபனேற்றுக்கள

முதலாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுக்களின் கரைசல்களுக்கூடாக அல்லது இரண்டாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுக்களின் நீர் தொங்கல்களுக்கூடாக காபனீரொட்சைட்டு மிகையாகச் செலுத்தப்பட்டால் கரைசலில் இருகாபனேற்று அயன்கள் உண்டாகும்.

$NaCO_3 + CO_2 + H_2O = 2NaHCO_3$

$CO_3^{2-} + H_2O + CO_2 = 2HCO^-$

இம்மூலகங்களின் ஐதரொட்சைட்டுக் கரைசல்களூடாக காபனீரொட்சைட்டைச் செலுத்தினால் முதலில் காபனேற்றுக்களும், மேலதிகமாக காபனீரொட்சைட்டைச் செலுத்தினால் ஐதரசன் காபனேற்றுக்களும் உண்டாகும்.

உதாரணம் : $Ca(OH)_2 + CO_2 \rightarrow CaCO_3 \downarrow + H_2O$

சுண்ணாம்பு நீர் — பால்நிறம்

$CaCO_3 + CO_2 + H_2O \rightarrow Ca(HCO_3)_2$

நிறமற்ற கரைசல்

ஐதரசன் காபனேற்றுகள் அதிகமாக உலோகங்களின் கரைசல் நிலையில் தான் கிடைக்கும். ஆனால் கார உலோகங்களின் ஐதரசன் காபனேற்றுக்கள் திண்ம நிலையிலும் கிடைக்கக்கூடியவை. ஆனால் இவை கூட இலகுவில் பிரிகையுறும். சிறிதளவு வெப்பமேற்றினால் போதும்.

உதாரணம்: $2KHCO_3^- \rightarrow K_2CO_3 + H_2O + CO_2$
$2K+HCO_3 \rightarrow (K^+)_2CO_3^{2-} + H_2O + CO_2\uparrow$

**நீரின் வன்மை:** கல்சியம் காபனேற்று, மக்னீசியம் காபனேற்று, நிலத்தில் அதிகளவில் காணப்படும் இடங்களில் இவை நீருடனும் காபனீரொட்சைட்டுடனும் தாக்கமுறுவதால் இவற்றின் இரு காபனேற்றுக்கள் நீரில் கரைந்து காணப்படும். இது நீரில் வன்மையை ஏற்படுத்துகிறது.

உதாரணம் : $MgCO_3 + CO_2 + H_2O = Mg(HCO_3)_2$
ஆனால் இந்நீரை கொதிக்கவைத்தால் இத்தாக்கம் நேர்மாறாக நடப்பதால் வன்மை நீக்கப்படுகிறது.

$Mg(HCO_3)_2 \rightarrow MgCO_3\downarrow + H_2O + CO_2$

இத்தகைய வன்மை நிலையில் வன்மை எனப்படும். வன்மையுள்ள நீர் சவர்க்காரத்துடன் இலகுவில் நுரைத்தலை உண்டாக்காது. கொதிக்க வைத்து நீக்கக்கூடிய வன்மை நிலையில் வன்மையாகும். வேறு கல்சியம் மக்னீசியம் ஆகியவற்றின் கரையக்கூடிய உப்புக்கள் நிலையான வன்மையை ஏற்படுத்துகின்றன.

நிலையான வன்மையை கொதிக்கவைத்து நீக்கமுடியாது. கணிக்கப்பட்ட அளவு சோடியம் காபனேற்று சேர்த்தால் நீரில் உள்ள $Ca^{2+}$, $Mg^2$ அயன்கள், காபனேற்றுக்களாக வீழ்படிவாகும். இவ்வாறு இவ்வன்மை நீக்கப்படலாம்.

**முதலாம் இரண்டாம் தொகுதி மூலகங்களின் நைத்திரேற்றுக்கள்**

மற்ற எல்லா உலோக நைத்திரேற்றுக்களைப் போல S தொகுப்பு மூலகங்களின் நைத்திரேற்றுக்களும் நீரில் கரையக்கூடியவையாகும். கார உலோகங்களைத் தவிர மற்ற எல்லா உலோகங்களின் நைத்திரேற்றுக்களும் வெப்பமேற்றப்பட்டால் அவ்வுலோகங்களின் ஒட்சைட்டுக்களாகவும், கபிலநிறமான நைதரசன் ஈரொட்சைட்டாகவும், ஒட்சிசனாகவும் பிரியும்.

உதாரணம் : $2Ca(NO_3)_2 \rightarrow 2CaO + 4NO_2\uparrow + O_2\uparrow$
$2Mg(NO_3)_2 \rightarrow 2Mgo + 4NO_2\uparrow + O_2\uparrow$

கார உலோகங்களின் நைத்திரேற்றுக்கள் மட்டும் வெப்பமேற்றும்போது முதலில் உருகி பின்பு உயர் வெப்பநிலையில் பிரிகையுற்று ஒட்சிசனையும் அவ்வுலோகங்களின் நைத்திரேற்றுக்களையும் தரும்.

$2NaNO_3 \rightarrow 2NaNO_2 + O_2$
$2KNO_3 \rightarrow 2KNO_2 + O_2$

இத்தொகுதியிலும் இலிதியம் நைத்திரேற்று ஒரு விதிவிலக்காகும். இலிதியம் நைத்திரேற்று வெப்பமேற்றும்போது பிரிந்து இலிதியம் ஒட்சைட்டையும், நைதரசன் ஈரொட்சைட்டையும், ஒட்சிசனையும் தரும்.

$2Li(NO_3)_2 \rightarrow 2LiO + 4NO_2\uparrow + O_2\uparrow$

பொதுவாக இத் தொகுதிகளின் வழியே நைத்திரேற்றுக்களின் வெப்ப உறுதிப்பாடு அதிகரிக்கின்றது.

ஆய்வுகூடத்தில் நைத்திரேற்றுக்களை பெற்றுக்கொள்ள அவ்வுலோகங்களை, அவற்றின் ஒட்சைட்டுக்களை, ஐதரொட்சைட்டுகளை அல்லது காபனேற்றுக்களை நைத்திரிக்கமிலத்தில் கரைத்து, விளைவு கரைசலை செறிவுபடுத்திப் பளிங்காக மாற்றுவர்.

உதாரணம் : $MgO + 2HNO_3 \rightarrow Mg(NO_3)_2 + H_2O$

**S தொகுப்பு மூலகங்களின் ஏலைட்டுகள்**

முதலாம் தொகுதி மூலகங்கள் அலசன்களுடன் நேரடியாக தாக்கங்களில் ஈடுபட்டு ஏலைட்டுக்களை உருவாக்கும். இவை புறவெப்பத் தாக்கங்களாகும். இச்சேர்வைகள் எல்லாம் அயன் சேர்வைகளாகக் கருதப்படலாம், சீசியத்தின் சேர்வையைத் தவிர மற்ற ஏலைட்டுக்கள் எல்லாம் கறியுப்புப்பளிங்கின் சாலக அமைப்பை உடையவையாகும். இம்மூலக்கூறுகளில் நேர் அயன்களும், எதிர் அயன்களும் இணைப்பெண் (Coordination number) ஆறு உடையவை. இவ் ஏலைட்டுக்கள் எல்லாம் (இலிதியம் புளோறைட்டைத் தவிர) நீரில் கரையக்கூடியவை. இவற்றின் உருகுநிலை கொதி நிலை உயர்ந்தவையாகும்.

இரண்டாம் தொகுதி மூலகங்களும் அலசன்களுடன் நேரடியாக தாக்கமும் பெரிலியத்தின் உயர் அயனாக்கற் சக்தி காரணமாக இதன் ஏலைட்டுகள் பங்கீட்டு வலுச்சேர்வைகளாகும். ($BeF_2$ விதி விலக்காகும்). இத் தொகுதி உலோகங்களின் புளோரைட்டுகள் நீரில் கரையாது. $BeF_2$ கரையும். மற்ற ஏலைட்டுக்கள் நீரில் கரையும். கரைதிறன் Mg தொடக்கம் Ba வரை அதிகரிக்கும். பெரிலியத்தின் குளோரைட்டு புரோமைட்டு அயடைட்டு ஆகியவை சேதனக் கரைப்பான்களில் கரையும் (சேதனக் கரைப்பான்கள் அற்ககோல், ஈதர் அசற்றோன் ஆகும்) தொகுதியின் வழியே சேதனக் கரைப்பான்களில் கரையும் கரைதிறன் குறையும்.

**ஐதரைட்டுகள்**

பெரிலியத்தை தவிர்ந்த மற்ற எல்லாத் தொகுதி I, தொகுதி II மூலகங்களும் ஐதரசனுடன் நேரடியாகச் சேர்ந்து ஐதரொட்டைட்டுக்களைத் தரும்.

உதாரணம் : இலிதியத்தை ஐதரசன் ஒட்டத்தில் செஞ்சூடாக்கினால் இலிதியம் ஐதரைட்டு உண்டாகின்றது.

$$2Li + H_2 \underset{\triangle}{=} 2LiH$$

இதேபோல் சோடியம் ஐதரசன் ஒட்டத்திலே வெப்பமேற்றப்பட்டால் சோடியம் ஐதரைட்டு உண்டாகிறது.

$$2Na + H_2 \xrightarrow[\triangle]{360} 2NaH$$

எல்லா ஐதரைட்டுகளும் உலர்ந்தவளியில் உறுதியானவை. ஆனால் நீருடன் வீறாகத் தாக்கம் புரிந்து ஐதரசனை விடுவிக்கும்.

$MH + H_2O \rightarrow MOH + H_2\uparrow$
$MH2 + 2H_2O \rightarrow M(OH)_2 + 2H_2\uparrow$

உருகிய ஐதரைட்டுகள் மின்பகுக்கப்படும்போது ஐதரசன் அனோட்டில் விடுவிக்கப்படுவது அவதானிக்கப்படவேண்டியதாகும். உலோகம் கதோட்டில் விடுவிக்கப்படும். இச்சேர்வைகள் அயன் சேர்வைகள் என் இது எடுத்துக்காட்டுகிறது. ஐதரைட்டுகளில் உறுதிப்பாடு தொகுதியின் வழியே அதிகரிக்கும்.

**சல்பேற்றுகள்**

சல்பேற்றுகள் தயாரிப்பதற்கு ஐதான சல்பூரிக்கமிலத்தை காரங்களின் ஐதான கரைசல்களுடன் நடுநிலையாக்கப்படும்.

உதாரணம் : $2NaOH + H_2SO_4 \rightarrow Na_2SO_4 + 2H_2O$

இக்கரைசல் பளிங்காகவிடப்படும்போது சோடியம் சல்பேற்று $Na_2SO_4\ 10H_2O$ பளிங்குகளாக மாறுகிறது. பொற்றாசியம் சல்பேற்று நீரற்ற பளிங்குகளாகக் காணப்படும்.

காரமண் உலோகங்கள் அல்லது அவற்றின் ஒட்சைட்டுகள், ஐதரொட்சைட்டுக்கள் ஆகியவற்றை ஐதான சல்பூரிக்கமிலத்தில் கரைத்து இவற்றின் சல்பேற்றுக்களைத் தயாரிக்கலாம்.

உதாரணம்: $MgO + H_2SO_4 \rightarrow MgSO_4 + H_2O$

மக்னீசியம் சல்பேற்று நீரில் கரையும். கல்சியம் சல்பேற்று நீரில் மிகச் சிறியளவில் மட்டும் கரையும். துரந்தியம், பேரியம், சல்பேற்றுக்கள் மேலும் கரைதிறன் குறைந்தவை. கல்சியம் துரந்தியம், பேரியம் ஆகிய அயன்கள் உள்ள கரைசல்களுள் சல்பேற்று அயன்கள் உள்ள சேர்வைகள் சேர்க்கப்பட்டால் வெண்நிற வீழ்படிவுகள் தோன்றும்.

உதாரணம் : 1. $CaCl_2 + Na_2SO_4 \rightarrow CaSO_4\downarrow + 2NaCl$

2. $BaCl_2 + H_2SO_4 \rightarrow BaSO_4\downarrow + 2HCl$

3. $Sr(NO_3)_2 + K_2SO_4 \rightarrow SrSO_4\downarrow + 2KNO_3$

**ஐதரசன் சல்பேற்றுக்கள்**

மேலே சல்பேற்றுக்களைத் தயாரிக்க நிகழ்த்திய நடுநிலையாக்கலில் பெற்ற கரைசலுக்கு இப் பரிசோதனையில் உபயோகித்த அதே கனவளவு அதே வலுவுள்ள $H_2SO_4$ சேர்க்கப்பட்டால் இரு சல்பேற்றுக் கரைசல்கள் உண்டாகும்.

$Na_2SO_4 + H_2SO_4 \rightarrow 2NaHSO_4$

அல்லது வெப்பமான செறிந்த சல்பூரிக்கமிலத்தில் சல்பேற்றைக் கரைத்து ஆவியாக விட்டால் ஐதரசன் சல்பேற்றுகள் பளிங்காகக்

கிடைக்கும். ஐதரசன் சல்பேற்றுகளின் நீர்க்கரைசல்கள் மற்ற ஐதரசன் உப்புக்களைப் போல அமிலவியல்புடையவை. ஏனெனில் ஐதரசன் சல்பேற்றயன்கள் பிரிகையடைந்து ஐதரசன் அயன்களைத் தருவதனால் ஆகும்.

$$HSO_4^- \rightleftharpoons H^+ + SO_4^{2-}$$

**பொசுபேற்றுக்கள்**

இலிதியம் பொசுப்பேற்று நீரில் கரையாது. சோடியம், பொற்றாசியம் ஆகியவற்றின் பொசுப்பேற்றுக்கள் நீரில் நன்றாகக் கரையும். இரண்டாம் தொகுதி மூலகங்களின் பொசுப்பேற்றுகள் நீரில் கரையாது. இரண்டாம் தொகுதி அயன்கள் உள்ள கரைசல்களுக்குள் பொசுபேற்று அயன்கள் உள்ள கரைசல் சேர்க்கப்பட்டால் இவற்றின் வீழ்படிவுகள் கிடைக்கும்.

உதாரணம்: $Mg(NO_3)_2 + Na_2HPO_4 \rightarrow MgHPO_4 \downarrow + 2NaNO_3$

குறிப்பு:- பண்பறிபகுப்பில் மக்னீசியத்தை இனங்காண $NH_4Cl$, $HN_4OH$, $Na_2HPO_4$ கரைசல்கள் சேர்க்கப்படும். $MgNH_4, PO_4, 6H_2O$ வெண்ணிற வீழ்படிவாகக் கிடைக்கும்.

**ஒட்சலேற்றுகள்**

கார உலோகங்களின் ஒட்சலேற்றுக்கள் தவிர மற்றைய உலோகங்களின் ஒட்சலேற்றுகள் நீரில் கரையாதவையாகும். ஆகவே 2 ஆம் தொகுதி ஒட்சலேற்று அயன்கள் உள்ள கரைசல்களை 2 ஆம் தொகுதி மூலகங்களின் அயன்கள் உள்ள கரைசல்களுக்குள் சேர்க்கப்பட்டால் அவற்றின் ஒட்சலேற்றுகள் வீழ்படிவுகளாகக் கிடைக்கும்.

உதாரணம் : $CaCl_2 + Na_2C_2O_4 \rightarrow CaC_2O_4 \rightarrow +2\,NaCl$

சோடியம் ஒட்சலேற்று வெள்ளை

$BaCl2 + Na_2C_2O_4 \rightarrow BaC_2O_4 \downarrow +2\,NaCl$

வெள்ளை

இவ் ஒட்சலேற்றுகள் நீரில் கரையாவிட்டாலும் ஐதான கனிப்பொருள் அமிலங்களில் கரையும். அசற்றிக்கமிலத்தில் கரையாது.

**குறோமேற்றுக்கள்**

கார உலோகங்களின் குறோமேற்றுக்கள் நீரில் கரையும். இவை மஞ்சள் நிறமான உப்புக்களாகும். காரமண் உலோகங்களின் குறோமேற்றுக்கள் நீரில் கரையாது. ஆகவே குறோமேற் அயன்கள் உள்ள கரைசல்களுக்குள் இவ்வயன்களைச் சேர்த்தால் மஞ்சள் நிறமான வீழ்படிவு கிடைக்கும்.

$BaCl_2 + Na_2CrO_4 \rightarrow BaCrO_4 + 2\,NaCl$

மஞ்சள்

**நீர்ப்பகுப்புத் தாக்கங்கள்**

கார உலோகங்களின் ஏலைட்டுக்கள், நைத்திரேற்றுக்கள், சல்பேற்றுக்கள் ஆகியவை நீர்க்கரைசல்களில் நடுநிலையானவை. ஆனால் காபனேற்றுக்கள், ஐதரசன் காபனேற்றுக்கள், சயனைட்டுகள், சல்பைட்டுகள் ஆகியவற்றின் கரைசல்கள் காரத் தன்மையை காட்டு கின்றன. இவ் உப்புக்கள் நீர்ப்பகுப்புத் தாக்கங்களில் ஈடுபடுவதால் வன்காரம் ஒன்று உருவாகின்றது. இதனால் கரைசல் காரவியல்பானது என்பது நாம் அறிந்து கொண்ட விளக்கமாக இருக்கக்கூடும்.

உதாரணம்: $Na_2CO_3 + 2H_2O \rightleftharpoons H_2CO_3 \downarrow + 2\,NaOH$

மென்னமிலம் வன்காரம்

மேலே தரப்பட்ட அமில மூலகங்கள் வலுவான மூலகங்களாத் தொழிற்பட்டு நீர் மூலக் கூறுகளில் இருந்து ஒரு புரோத்தனை தம்பால் ஈர்த்துக்கொள்வதால் ஐதரொட்சைட்டு அயன்கள் உண்டாகின்றன. இவை காரவியல்புக்கு காரணமாகும்.

$$Co_3^{2-} + H_2O \rightleftharpoons HCO_3^- + OH^-$$
$$HCO_3^- + H_2O \rightleftharpoons H_2CO_3 + OH^-$$
$$CN^- + H_2O \rightleftharpoons HCN + OH^-$$
$$S^{2-} + H_2O \rightleftharpoons HS^- + OH^-$$
$$HS^- + H_2O \rightleftharpoons H_2S + OH^-$$

**மூலைவிட்டத் தொடர்பு**

பொதுவாக ஒரு தொகுதியில் முதலாவது மூலகத்திற்கும் இரண்டாவது மூலகத்திற்கும் உள்ள வேற்றுமைகள் இரண்டாவதற்கும் மூன்றாவதற்கும் உள்ள வேற்றுமைகளிலும் பரந்தவையாகும் இது இலிதியத்திற்கும் பொருந்த மானதாகும். இலிதியம் இரண்டாம் தொகுதியில் உள்ள மக்னீசியத்துடன் ஓரளவு ஒற்றுமை உடையதாகக் காணப்படுகிறது. இவ்வாறு ஒரு தொகுதியின் முதலாவது மூலகம், அடுத்த தொகுதியின் இரண்டாவது மூலகத்துடன் ஒற்றுமையைக் காட்டுதல் மூலைவிட்டத் தொடர்பு எனப்படுகிறது.

**இலிதியம் மக்னீசியத்துடன் காட்டும் ஒற்றுமைகளாவன**

1) ஓர் ஒட்சைட்டை மட்டும் உருவாக்குதல் $Li_2O$, $MgO$

2) காபனேற்றுகள் பிரிந்து ஒட்சைட்டையும் காபனீர் ஒட்சைட்டையும் தருதல்.

3) நைத்திரேற்றுக்கள் பிரிகையுற்று நைதரசன் ஈரொட்சைட்டையும், ஒட்சிசனையும் தருதல்.

4) காபனேற்றுகள், பொசுப்பேற்றுகள், புளோறைட்டுகள் ஒட்சலேற்றுகள் நீரில் கரையாமல் இருத்தல்.

5) காபைட்டு, நைத்திரைட்டு ஆகியவை மூலகங்களுடன் நேரடிச் சேர்க்கையால் உண்டாதல்.

6) இலிதிய அயன்கள் மற்ற கார உலோக அயன்களிலும் பார்க்க கூடியளவில் நீரேற்றப்படத்தக்கவை. மக்னீசியம் அயன்களும் இதேபோன்றே.

7) இவற்றின் ஏலைட்டுகள் சேதனச் சேர்வைகளில் கரைதல், இவை ஓரளவு பங்கீட்டுவலுத்தன்மை உடைய சேர்வைகள் என்பதைக் காட்டுகின்றன.

8) இலித்தியம் ஒட்சைட்டு நீரில் அவ்வளவாகக் கரைவதில்லை. மக்னீசியம் ஒட்சைட்டும் கரைதிறன் குறைந்ததாகும்.

9) இவற்றின் இரு காபனேற்றுகள் காபனேற்றுக்களிலும் கரைதிறன் கூடியவை.

இதற்கான விளக்கம் யாதெனில் இவ்விரு மூலகங்களின் மின் நேர்மையும் ஒத்தவை என்பதாகும். ஒரு தொகுதியில் மேல் இருந்து கீழ்வர மின்னேர்மை அதிகரிக்கும். ஆனால் ஒரு ஆவர்த்தனத்தில் இடமிருந்து வலமாக மின்னேர்மை குறைகிறது. மக்னீசியம் தொகுதியில் இலிதியத்திலும், இரு இடம் கீழாகவும், ஒரு இடம் வலமாகவும் காணப்படுவதால் அதன் மின்னேர்மை இலிதியத்துடன் ஒப்பிடக்கூடியதாக விருக்கிறது. (ஏறத்தாள சமனாயுள்ளது)

**முதலாம்தொகுதி மூலகங்களின் பொது இயல்புகள்**

**பௌதிக இயல்புகளில் ஒற்றுமைகள்**

1) இவற்றின் அணுக்களினதும் அயன்களினதும் பருமன் அதே ஆவர்த்தனத்தில் உள்ள சடத்துவ வாயு தவிர்ந்த ஏனைய மூலகங்களிலும் பெரிதாகும். இம் மூலகங்களின் அடர்த்தி குறைவாக இருக்கும். மேலே இருந்து கீழ் வர அதிகரிக்கும்.

2) அயனாக்கற்சக்திப் பெறுமானங்கள் தாழ்ந்தவை. மேலே இருந்து கீழே வரக் குறைந்துகொண்டுபோகும்.

3) சுவாலைப் பரிசோதனையில் நிறங்களைத் தரும்.

4) மின் எதிர்த்தன்மை அல்லது இலத்திரன் நாட்டப்பெறுமானங்கள் குறைந்தவை. இது இலிதியத்தில் இருந்து கீழே வரக் குறைந்து கொண்டு போகும்.

5) இவற்றின் உருகுநிலை, கொதி நிலை மற்றைய உலோகங்களுடன் ஒப்பிடும்போது குறைவானது.

6) இவை எல்லாம் உலோகங்களுக்குரிய பளபளப்பை உடைய வெள்ளிபோன்ற வெண்ணிறமான மென்மையான உலோகங்கள் ஆகும். கத்தியினால் வெட்டப்படக்கூடியவை.

7) எளிதில் மின், வெப்பம் ஆகியவற்றைக் கடத்தக்கூடியவை.

8) இவற்றின் அயன்கள் நிறமற்றவை.

**இரசாயன இயல்புகளில் ஒற்றுமைகள்**

1) இவை அயன் சேர்வைகளை உருவாக்கும். இம் மூலகங்களின் இலத்திரன் நாட்டம் குறைவாக இருப்பதால், பங்கீட்டுச் சேர்வைகளை உருவாக்க முடிவதில்லை.

2) இவை ஒரு வலுவுள்ள நேர் அயன்களைத் தரும்.

3) இம் மூலகங்கள் ஒட்சிசனில் அதிக நாட்டம் உடையவை. வளியில் வைத்தால் மங்கி விடுகின்றதற்குக் காரணம் இவை ஒட்சிசனுடன் சேர்ந்து முதலில் $M_2O$ என்ற பொதுச் சூத்திரம் உடைய ஒட்சைட்டு உண்டாவதாகும். நீராவியுடனும், காபனீர் ஒட்சைட்டுடனும் தொடர்ந்து தாக்கங்கள் நிகழலாம்.

4) இம்மூலகங்கள் ஐதரசனுடன் சேர்ந்து ஐதரைட்டுக்களை உருவாக்கும். இதன் பொதுச் சூத்திரம் MH.

(தொடரும்...)

# தனித் தெலுங்கானா போராட்டம்; 100 நாள் பகிஸ்கரிப்பிற்கு முடிவு





தனி தெலுங்கானா போராட்டம் மேலும் வலுப்பெற்றுள்ள நிலையில் மேலும் 100 நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட அரச ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர்.

ஆந்திராவை பிரித்து தெலுங்கானா மாநிலம் விரைவில் உருவாகும் எனக் கூறப்படுகிறது. தெலுங்கானா குறித்து முடிவு எடுத்து 28ஆம் திகதி அறிவிக்கப்படும் என மத்திய உள்துறை மந்திரி சுசில்குமார் ஷிண்டே அறிவித்து உள்ளார்.


28ஆம் திகதிக்குள் தெலுங்கானா அறிவிக்கப்படா விட்டால் மாபெரும் போராட்டத்தை நடத்த தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி தலைவர் சந்தி ரசேகர ராவ் எச்சரிக்கை விடுத்து உள்ளார். இதேபோல் தெலுங்கானா பகுதி அரசு ஊழியர்களும் போராட்டத்தில் குதிக்க முடிவு செய்து உள்ளனர்.

இதுகுறித்து தெலுங்கானா அரச ஊழியர் சங்க தலைவர் தேவி பிரசாத் கூறியதாவது;

ஆந்திராவின் நான்கரை கோடி மக்கள் தெலுங்கானாவுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். இதற்காக எந்த தியாகமும் செய்ய தயாராக உள்ளோம். ஆந்திராவுடன் இணைந்து இருப்பதற்கு எதிராக தெலுங்கானா அரச ஊழியர்கள் 50 ஆண்டுகளாக போராடி வருகிறார்கள். 28ஆம்திகதிக்குள் தெலுங்கானா அறிவிக்காவிட் டால் 100 நாள் தொடர் வேலை நிறுத்தத்தில் அரச ஊழியர்கள் ஈடுபடுவார்கள் என்றார். தெலுங்கானா கோரிக்கைக்காக அரச ஊழியர்கள் கடந்த முறை 42 நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் அரச நிர்வாகம் முற்றிலும் முடங்கியது குறிப்பிடத்தக்கது.




# இந்திய விஞ்ஞானிகளை வரவழைக்கத் திட்டம்



(டில்லி)


வெளிநாடுகளில் ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ளும் இந்திய விஞ்ஞானிகளை மீண்டும் தாயகத்துக்கு பணியாற்ற அழைப்பதற்காக சில சலுகை திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்த உள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த ஏராளமான விஞ்ஞானிகள் வெளிநாடுகளில் பல்வேறு துறைகளில் சிறப்பாக சேவையாற்றி வருகின்றனர். இவர்களின் சேவையால், அந்த நாடுகளுக்கு ஏராளமான பயன்கள் கிடைக்கின்றன. இதுபோன்று சிறந்த இந்திய விஞ்ஞானிகளை மீண்டும் தாய்நாட்டுக்கு திரும்ப வைக்கும் வகையில் அவர்களுக்கு பல்வேறு சலுகை திட்டங்களை மத்திய அரசு அறிவிக்கவுள்ளது.

இதன்படி, வெளிநாடுகளில் பணியாற்றும் இந்திய விஞ்ஞானிகள் குறிப்பிட்ட துறையில் சர்வதேச அளவில் நிபுணத்துவம் பெற்றிருந்தால், அவர்களை நாட்டின் நலனுக்கு பயன்படும் ஆராய்ச்சிக்கு பயன்படுத்த முடிவு செய்துள்ளது.

குறைந்தபட்சம் ஒரு ஆண்டிலிருந்து அதிகபட்சம் மூன்று ஆண்டுகள் வரை, இந்த ஆராய்ச்சி நடக்கும். இதற்கு தேர்வு செய்யப்பட்ட விஞ்ஞானிகளுக்கு ஆண்டுக்கு 55 இலட்சம ரூபாய் உதவித் தொகை அளிககப்படும். இதுதவிர, அனைத்து வசதிகளுடன் கூடிய வீடு மற்றும் இதர செலவுகள் அளிக்கப்படும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இந்தியாவின் சட்டமுறை மிகவும் சோம்பேறித்தனமானது



(பெங்களூர்)

இந்தியாவின் சட்டமுறை சோம்பேறித்தனமானது என ராஜ்யசபா எதிர்க்கட்சித் தலைவரும் நாட்டின் தலைசிறந்த வழக்கறிஞர்களுள் ஒருவருமான அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் வழக்கறிஞர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அருண் ஜெட்லி, சட்ட முறையில் திருத்தம் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து பேசிய போது, இந்தியாவின் சட்டமுறை சோம்பலாக உள்ளதாக குற்றம் சாட்டினார்.

நாட்டின் நடைமுறைக்கு ஏற்றது நிலையானதுமான சட்டங்கள் கொண்டு வர வேண்டும் எனவும், நாட்டில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையை பெருமளவில் அதிகரிக்க வேண்டும் எனவும் அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் நீதிபதிகளின் எண்ணிக்கையை 20 சதவீதம் அதிகரித்தால் அடுத்த 5 ஆண்டுகளில் நீதிகளின் எண்ணிக்கை இரு மடங்காக வாய்ப்பு உள்ளதாகவும் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

சிறந்த நீதிபதிகளை நியமிப்பது மிகப் பெரிய சவாலாக உள்ளது என அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

சுப்ரீம் கோர்ட் மற்றும் ஐகோர்ட் நீதிபதிகளை நியமிப்பதில் அரசின் முடிவே இறுதியானது என்பதும், மற்ற நீதிபதிகளை ஐகோர்ட் நீதிபதிகள் நியமிப்பது என்பதும் முற்றிலும் தவறானது என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இது வெற்றிகரமான சட்டமுறையை ஏற்படுத்தாது எனவும் அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

நீதிபதிகளை நியமிப்பதற்கு தேசிய நீதி கழகத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும், அதன் மூலம் நீதிபதிகள் நியமனம் நடைபெற வேண்டும் எனவும், நீதிபதிகள் நியமனம் மற்றும் அவர்களின் ஒழுக்கம் குறித்த நிலைப்பாடுகளையும் கண்காணிக்க வேண்டும் எனவும் அருண் ஜெட்லி பரிந்துரை செய்துள்ளார்.

இந்தியச் செய்திகள்

# அணுமின் நிலையத்தை மூடக்கோரி மீனவர்கள் உண்ணாவிரதம்

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடக்கோரி தேசிய மீனவர் பேரவை அமைப்பு சார்பில் இந்தியா முழுவதும் கடற்கரை கிராமங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதற்கு ஆதரவு தெரிவித்து கூடங்குளம் அணுமின்நிலைய போராட்டக்குழு சார்பில் இடிந்தகரையில் நேற்று உண்ணாவிரதம் நடைபெற்றது. இதில் போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் உட்பட இடிந்தகரை, கூத்தங்குளி, உவரி, பெருமணல் போன்ற மீனவக் கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர். இதையொட்டி நேற்று அந்த பகுதியை சேர்ந்த மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை.

உண்ணாவிரதத்தின் போது உதயகுமார் நிருபர்களிடம் கூறுகையில், கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடவேண்டும், நாடாளுமன்ற சட்டமன்றத்தில் மீனவர்களுக்கு தனி இட ஒதுக்கீடு வேண்டும், மத்திய அமைச்சரவையில் மீனவர்களுக்கு என்று தனி அமைச்சகம் வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய மீனவர் பேரவை அமைப்பு சார்பில் இந்தியா முழுவதும் கடற்கரை கிராமங்களில் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடக்கிறது.

இதற்கு ஆதரவு தெரிவித்து இடிந்தகரையில் நாங்கள் ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என்றார்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

## விடுதலைப்புலிகளை...

ஆனால் ஜவான் இதற்கு நான் எதுவும் செய்யமுடியாது எமது நிறுவனத்தின் பிரதம ஆசிரியர் தவபாலன் (இறைவன்) அவர்களிடம் நீங்கள் தெரியப்படுத்துங்கள் எனக் குறிப்பிடுவார். இறைவனிடம் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள் சென்று கதைத்தால் இறைவன் எல்லாவற்றிற்கும் ஓம் என்று தலையாட்டுவார். ஆனால் நடைமுறையில் தான் நினைத்ததை மட்டும் செய்து கொண்டிருப்பார். இறைவனை கட்டுப்படுத்த தமிழ்ச்செல்வனாலும் முடியாது ஜவானாலும் முடியாது. ஏனெனில் இறைவனே புலிகளின் குரல் நிறுவனத்தின் முக்கிய தூணாக விளங்கினார்.

பெயரளவில் ஜவான் பொறுப்பாளராக இருந்தபோதிலும் நடைமுறையில் இறைவன் எனப்படுகின்ற தவபாலனே இதன் முக்கிய பொறுப்பாளராக விளங்கினார். ஆரம்பத்தில் இவர் இந்த நிறு வனத்தில் 3000ரூபா சம்பளத்திற்கு பணியாளராக உள்வாங்கப்பட்டு பின்னர் 5000ரூபா சம்பளம் பெற்று அதன்பின்னர் 20000ரூபா வரை சம்பளம் பெற்று வந்தார். ஆனால் ஒரு கட்டத்தில் தன்னை முழுமையான போராளியாக இணைத் துக்கொண்டு தவபாலன் என்ற பெயரை இயக்க நடைமுறைகளுக்கு அமைவாக மாற்றி இறைவன் என்ற நாமத்தை சூடிக்கொண்டார். இறைவன் மக்களை காக்கும் பணியில் ஈடுபட்டாரா? அல்லது ஆக்கப் பணியில் ஈடுபட்டாரா அல்லது அழித்தல் பணியில் ஈடுபட்டாரா? என்பதை தொடர்ந்து பார்ப்போம். (தொடரும்)

# சென்காடு தீவைத் தாக்க தயாராகி வருகிறது சீனா



ஜப்பான் தீவைத் தாக்க சீனா தயாராகி வருகின்றது. ஜப்பான் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் கிழக்கு சீன கடலில் சென்காடு தீவுகள் உள்ளன.

எனினும் இந்த தீவுகளுக்கு சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இதனால் சீனா- ஜப்பான் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

இரு நாடுகளும் சென்காடு தீவுகள் அருகே தங்கள் நாட்டு போர்க்கப்பல்களை நிறுத்தி வைத துள்ளன.

மேலும், ஜப்பானிய இராணுவ ஹெலிகொப்டர்கள் போர் பயிற்சியில் ஈடுபட்டன. அதைத் தொடர்ந்து சீனாவும் தனது ஹெலிகொப்டர் பிரிவை உஷார்படுத்தியுள்ளது.

சரக்கு போக்குவரத்தில் கவனம் செலுத்துவதை விட தாக்குதல் நடவடிக்கைக்கு தயாராக இருக்கும்படி சீன இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

இந்த தகவலை சீன இராணுவத்தின் அதிகாரப்பூர்வ நாளிதழான பி.எல்.ஏ. டெய்லி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே சென்காடு தீவுகள் பிரச்சினையில் ஜப்பானுக்கு ஆதரவாக அமெரிக்கா கருத்து தெரிவித்துள்ளது.

தீவுகளில் ஜப்பானின் நிர்வாகத்தை தடுக்கும் எந்த நடவடிக்கையையும் அமெரிக்கா ஏற்காது என்று சீனாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், அப்பகுதிக்கு அமெரிக்கா கண்காணிப்பு கப்பல்களை அனுப்பிவைத்தது. இதற்கு சீனா தனது எதிர்ப்பையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளது.

உலகச் செய்திகள்

# நெதர்லாந்தில் நகரும் தீவு



நெதர்லாந்தில் அமைந்துள்ள மிகச்சிறிய தீவு ஒன்று தனது இருப்பிடத்திலிருந்து நகர்ந்து கொண்டே இருக்கிறது.

புவியின் கண்டங்களும் சிறியதொரு நகர்வைக் காட்டுகின்றன. ஆனால் இந்த தீவின் நகர்வானது ஒப்பீட்டளவில் வேகமாக இடம்பெறுகிறது. வருடத்திற்கு 2.6 மீற்றர்கள் நகரும் இத்தீவு கடந்த 760 ஆண்டுகளில் 2 கிலோ மீற்றர் தூரம் நகர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இது பல ஆச்சரியங்களை தோற்றுவித்தாலும் ஆய்வை மேற்கொண்டவர்கள் சில முடிவுகளை முன்வைத்தனர். உண்மையில் தீவு நகரவில்லை. ஒரு பக்க கரையோரம் நீரினால் சூழப்படும் நேரம் எதிர்க்கரையில் நீர்மட்டம் பின்னோக்கிச் செல்கிறது. இதனால் நிலப்பரப்பிற்கும் தீவுக்கும் இடையிலான தூரம் வெறும் பார்வைக்கு மட்டும் வேறுபடுவதாக சொல்லப்படுகிறது.

# கனடாவில் வேலைத்தளங்களில் சுகாதாரத்தரம் உயர்வு



வேலை வழங்குநர்களும் தொழிற்சங்கங்களும் கனடாவில் தொழில் புரியும் வேலைத்தளங்களின் சுகாதார நிலைமைகளை தரம் உயர்த்துவதற்கு விரும்புகின்றார்கள்.

இதன்மூலம் தொழிலாளர்களின் சுகாதார நிலைமையானது உயரும் எனக் கருதுகின்றனர். கடந்த புதன் கிழமையன்று ரொறன்ரோவில் மத்திய தொழில் அமைச்சர், கனடிய மனநல ஆணையம் என்பன வேறு சில நிறுவனங்களுடன் இணைந்து தொழிலாளர்களின் உளநலம், வேலை செய்யும் இடங்களில் இருக்கவேண்டிய சுகாதாரரீதியான பாதுகாப்பு என்பன சம்பந்தமாக சில முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அது சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையில், மனநல சுகாதார ஆணையத்தின் ஒரு அதிகாரியான லோயிஸ் பிறாட்லி என்பவர் இது ஒரு நல்ல தருணமாகவிருக்கின்றது. மனநலத்தையும் உடல் நலத்தையும் வேலைத்தளங்களில் நன்றாகப் பேணக்கூடியதாக இந்த நடைமுறைகள் இருக்குமெனக் கூறியிருக்கின்றார். வரையப்பட்ட வழிகாட்டல்களின் முக்கிய நோக்கமானது அந்தந்த தொழில் வழங்குனர்கள் கடைப்பிடிக்கவேண்டியவற்றை விளக்குகின்றது. சில முக்கிய பாதுகாப்பு விடயங்களை தொழில் வழங்குநர்கள் தொழிலாளர்களின் மனநலன் கருதி அவற்றால் விளையக்கூடிய அபாயங்களைப் பற்றி அக்கறை கொள்ளல், வேலை கொள்வோரின் கோரிக்கைகளால் ஏற்படும் அழுத்தங்கள், பணிபுரிவோர் தாம் மரியாதையாகவும், நேர்மையான முறையிலும் கணிக்கப்படுவதாக உணர்தல், அவர்களுக்கான வழங்கல்கள் என்பன சரியான நீதியான முறையில் அமைதல் போன்ற விடையங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு அவற்றை நடைமுறைப் படுத்தும் முறைகள் உள்ளடக்கப் பட்டதாக கூறப்படுகின்றது.

# தலையை வெட்டும் வீடியோவை வெளியிட்டவருக்கு சிறை



தலைகளை வெட்டி கொல்லும் வீடியோ காட்சியை பேஸ்புக்கில் வெளியிட்ட பிரிட்டனைச் சேர்ந்த நபருக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.பிரிட்டனின் பிரஸ்டோன் நகரை சேர்ந்தவர் கிரெய்க் ஆலன் ஸ்லீ (வயது-42) என்பார் பேஸ்புக்கில் தன் பெயரில் ஒரு கணக்கு தொடங்கியுள்ளார்.

பிணைக் கைதிகளின் தலையை தீவிரவாதிகள் துண்டிக்கும் காட்சிகள் அடங்கிய வீடியோவை கிரெய்க் தனது பேஸ்புக்கில் வெளியிட்டார்.தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸார், ஆன்லைனில் உள்ள வீடியோ, மெசேஜ்களை தொடர்ந்து ஆய்வு செய்த போது இதை கண்டுபிடித்தனர்.இதையடுத்து கடந்த 2011ஆம் ஆண்டு யூலை மாதம் கிரெய்க்கை கைது செய்து வழக்கு தொடர்ந்தனர்.தீவிரவாதத்தை ஊக்குவித்தது, தடை செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்தது உட்பட 4 பிரிவுகளின் கீழ் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.விசாரணையின் போது இவற்றை கிரெய்க் ஒப்புக் கொண்டார். இதையடுத்து 5 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# மியன்மாரில் யுத்த நிறுத்த மீறல்



மியன்மாரின் வடபிராந்தியத்திலுள்ள கெச்சின் ஆயுததாரிகளுடனான யுத்த நிறுத்தத்தை மீறும் வகையில் தாக்குதல் நடவடிக்கைகளை அந்த நாட்டு இராணுவத்தினர் மீண்டும் ஆரம்பித்துள்ளனர். கெச்சின் ஆயுததாரிகளுக்கு எதிரான தாக்குதல்கள் நிறுத்தப்படுவதாக அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில், அவர்கள் நிலைகொண்டுள்ள முக்கிய மலைப் பகுதியொன்றில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்களின் தலைமையகங்கள் அமைந்துள்ள சீன எல்லையிலுள்ள லைய்சா என்னும் பகுதியில் இருந்து சில கிலோமீற்றர் தொலைவில் எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென கெச்சின் கிளார்ச்சியாளர்கள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவனின் துப்பாக்கிச் சூட்டில் அமெரிக்காவில் ஐவர் பலி



அமெரிக்காவில் மீண்டும் - 15 வயதுச் சிறுவனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 3 குழந்தைகள் உள்ளிட்ட 5 பேர் பலியாகியுள்ளனர். அமெரிக்காவில் நியூ மெக்சிகோ நகரில் நேற்று முன்தினம் 3 குழந்தைகள் உட்பட 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் நன்கு அறியப்பட்ட மதகுருவாவார். ஏனையோர் அவரது உறவினர்கள். இவர்களைச் சுட்டுக்கொன்ற 15 வயதுச் சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளான். அவனிடமிருந்து பல துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் விசாரணை நடைபெற்று வருகிறது.

# துப்பாக்கி வைத்திருக்க அமெரிக்காவில் தடை

அமெரிக்காவில் துப்பாக்கி கட்டுப்பாடுச் சட்டம், நியூயோர்க் மாகாணத்தில் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது. அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் அப்பாவிகள் பலர் பலியாவது அதிகரித்து வருகிறது.

இது அமெரிக்க அரசுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், துப்பாக்கி கலாசாரத்தை தடுக்க, கடுமையான சட்டம் கொண்டு வர, நியூயோர்க் மாகாண சட்டசபை முடிவு செய்துள்ளது. இதன்படி, குறிப்பிட்ட சிலர் மட்டுமே துப்பாக்கியை வைத்துக்கொள்ளவும், மற்றவர்கள் துப்பாக்கியை கையாள்வதற்கு தடை விதிக்கும் மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. அமெரிக்கா முழுவதும் இதுபோன்ற சட்டத்தை அமுல்படுத்த, அதிபர் ஒபாமா சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து வருகிறார்.

# பணத்தால் எனக்கு பயன் எதுவும் இல்லை

## உலக முதல் பணக்காரர் பில்கேட்ஸ்

(லண்டன்)

பணத்தால் எனக்கு பயன் இல்லை என உலகின் பெரும் கோடீஸ்வரரான பில்கேட்ஸ் தெரிவித்து உள்ளார். உலகின் பெரும் பணக்காரர் பட்டியலில் முதலிடம் வகிக்கும் பில்கேட்ஸ் இது குறித்து கூறியதாவது;

உணவு, உடை போன்ற அத்தியாவசியத் தேவைகளைப் பொறுத்தவரையில், நான் தன்னிறைவுடன் வாழ்கிறேன். இந்த அளவுக்கு மேல் என்னிடம் பணம் இருந்து பயனேதுமில்லை. ஒரு அமைப்பை உருவாக்கி, அதில் என் பணத்தை எல்லாம் உலக ஏழை எளிய மக்களுக்காகச் செலவிட விரும்புகின்றேன்.போலியோவை ஒழித்ததுபோல், பல்வேறு நோய்களால் வாடும் ஏழை குழந்தைகளுக்கு, நோய்த்தடுப்பூசி மற்றும் சுகாதாரப் பணிகளில் தொண்டாற்றும் பெண்களுக்கும் என் பணத்தைச் செலவழிக்கத் தீர்மானித்து உள்ளேன். கடந்த 1990ஆம் ஆண்டில் ஐந்து வயதைத் தாண்டாத 1.20 கோடி குழந்தைகள் நோயால பலியாகி உள்ளனர். இந்த எண்ணிக்கை தற்போது பல்வேறு அதிரடி நடவடிக்கைகளால் 70 இலட்சமாகக் குறைந்து உள்ளது.

இதேபோல், குழந்தைகளை தாக்கும் கொடிய நோய்களில் இருந்து, அக்குழந்தைகளை பாதுகாக்கவும், நோய்களை அழிக்கவும், அறக்கட்டளை மூலமாக என் பணத்தைச் செலவிட முடிவு செய்துள்ளேன் என்றார்.

# மன்னார் நகர சபையில் வாக்குவாதம் உறுப்பினர்கள் பலர் வெளிநடப்பு



(மன்னார்)

மன்னார் நகர சபை செயலாளரின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை என தெரிவித்து நகர சபை உறுப்பினர்கள் சிலர் வெளிநடப்பு செய்தனர்.

மன்னார் நகர சபையின் 2013 ஆம் ஆண்டிற்றகான முதலாவது கூட்டம் நேற்று நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நகர சபையின் செயலாளரின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை எனத் தெரிவித்து நகர சபை உறுப்பினர்கள் சிலர் வெளிநடப்புச் .செய்தனர்.

சபையில் எடுக்கப்படுகின்ற எந்தத் தீர்மானங்களுக்கும் நகர சபை செயலாளர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என. நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் தினச் சந்தை வியாபாரிகளை வெளியேற்றி வாராந்த சந்தையாக மாற்றுதல் உட்பட பல வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த சபையின் செயலாளர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அமைச்சருக்கு அடிபணிந்து செயலாளர் செயற்படுவதாகவும் நகர சபைக்கு நீதியுடன் சேவை செய்வதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் சபையில் உரையாற்றிக் கொண்டிருந்த நகர சபை உறுப்பினர் இரட்ண சிங்கம் குமரேசிற்கும் அரச தரப்பு உறுப்பினர் நிலாமுதீன் நகுசீன் ஆகியோருக்கு இடையில் நீண்ட நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் நகர சபையின் ஆளும் தரப்பு உறுப்பினர் மெரினஸ் பெரேரா பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அனைத்துச் செயற்பாடுகளும் நடமுறைப்படுத்தப்பட்ட பின்பே சபைக்கு வருவதாக கூறி சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தார்.

இதனைத் தொடர்ந்து ஆளும் தரப்பு உறுப்பினர்களான பலர் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். இதனால் சபைக்கூட்டம் இடை நடுவில் கைவிடப் பட்டது.

இது தொடர்பாக நகர சபையின் செயலாளர் எல்.ஜே.குரூஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

நான் அமைச்சருக்கு சார்பாக செயற்படுவதாக சபை உறுப்பினர்கள் என் மீது வீண் பழி சுமத்துகின்றனர். அவ்வாறு நான் ஒருபோதும் செயற்பட்டதில்லை.

நான் உள்ளூராட்சி சட்ட விதிகளுக்கு அமைவாகவே செயற்படுகின்றேன். நீண்ட காலமாக சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்காத அரச தரப்பு உறுப்பினர் என்.நகுசீன் இன்று கூட்டத்திற்கு வந்தமையினாலேயே இவர்கள் என் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். நான் ஒருபோதும் விரோதமான முறையில் செயற்பட்டதில்லை என்றார்.

# தொடரும் சீரற்ற காலநிலை உழுந்து செய்கைக்கு ஆப்பு

(வவுனியா)

வெள்ள அனர்த்தத்தால் பாதித்த வவுனியா மாவட்டத்தில் உழுந்துப் பயிர்ச்செய்கை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக உழுந்து பயிர்ச்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் உழுந்துப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு சில நாட்களிலேயே மழை தொடர்ச்சியாக பெய்ததினால் சிறுபயிராக இருந்த நிலையிலேயே பயிர்கள் வெள்ளத்தால் பாதிப்படைந்தது.

எனினும், அந்தப் பயிரை தாம் தொடர்ச்சியாக பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்ததனால் சில பிரதேசத்தில் பயிர் வளர்ந்த போதிலும் அது பூத்து காய்க்கும் நிலையில் மீண்டும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது.

இதனால் பூக்கள் கொட்டி விட்டன. பயிர்கள் வளர்ந்துள்ள போதிலும் அவற்றில் காய்களை காணமுடியவில்லை எனவும் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் விளைச்சல் சிறப்பாக இருந்த போதிலும் இவ்வருடம் இவ்வாறான நிலை ஏற்பட்டமையினால் தமது ஜீவனோபாயம் பாதிப்படைந்ததாகவும் தெரிவிக்கும் அவர்கள் இது தொடர்பில் விவசாய திணைக்களம் கவனமெடுத்து தமக்கான நட்டஈடுகளை வழங்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் தாம் உழுந்துப் பயிர்ச்செய்கையில் ஈடுபட உந்துதலாக இருக்கும் எனவும் தெரிவித்தனர்.

# துணுக்காய் நோக்கிய பேருந்து சேவை; பொதுமக்களுக்கு சாபக்கேடு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்திற்கான அரச மற்றும் தனியார் பேருந்து சேவைகள் எவையும் இல்லாமையால் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

முன்னர் கிளிநொச்சியிலிருந்து இ.போ.ச பேருந்து சேவை துணுக்காய் பிரதேச தென்னியம் குளம் வரை இருவழிசேவை இடம்பெற்று வந்தது.

எனினும் அண்மையில் இப்பேருந்து சேவை நிறுத்தப்பட்டது. இதனால் தனியார் பேருந்து சேவையும் நிறுத்தப்பட்டதால் இச்சேவை பெறும் மக்கள் பல்வேறு சிரமங்களை தற்போது எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக இச்சேவை இடம்பெறாததால் துணுக்காய், தென்னியம்குளம், கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராம மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதேபோன்று ஐயன்கன் குளம், புத்துவெட்டுவான்குளம் போன்ற பிரதேசங்களிற்கும் பேருந்து சேவைகள் இன்மையால் விவசாயிகள், மீனவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் வேறு வாகனங்களிலும் நடந்தும் தமது பயணங்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு மாங்குளம் வரும் அரச உத்தியோகத்தர்கள் துணுக்காய் பிரதேசத்திற்கான பேருந்து சேவை இன்மையால் பல மணிநேரம் காத்து நின்றே தமது கடமைக்கு செல்வதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே இக்கிராம மக்களின் போக்குவரத்து தேவையைக் கருத்திற்கொண்டு பேருந்து சேவையை மீள ஆரம்பிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (140)

## துப்பாக்கிச்...

மணியளவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமித்ரா (வயது - 33) என்ற வீராங்கனையே சம்பவத்தில் காயமடைந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர். (25)

## உள்நாட்டு...

இந்த அறிக்கையில் புறவயத்தன்மை காணப்படவில்லை. இது பக்கச்சார்பானது. தவறான விடயங்களைக் கொண்டுள்ளது. பயன்படுத்திய மொழிநடையும் பொருத்தமற்றதாக உள்ளது. இதை முழுதாக நிராகரிக்கிறோம்.

கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் ஐ.நா.வின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயத்தின் அலுவலகத்திலிருந்து இலங்கை வந்த ஹனி கொலியின் தவறான செயற்பாட்டை இது நினைவூட்டுகிறது.

பிரதம நீதியரசரை பதவி விலக்கும் செயன்முறையில் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் 1985 இல் ஏற்கப்பட்ட அடிப்படைத் தத்துவங்களை இலங்கை கடைப்பிடித்துள்ளது. இறைமையுள்ள நாடான இலங்கை, அரசியல் அமைப்பில் கூறப்பட்ட வழிவகைகளைக் கையாண்டுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளை நீங்கள் விளங்கிக்கொள்ளவில்லை என்பதை உங்கள் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. உங்களின் தகவலுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனவரி 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் பிரதியை அனுப்பி வைக்கின்றேன்.

இலங்கை நிர்வாகத்துறையின் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் நீண்ட வரலாறு உண்டு என்ற உங்கள் கூற்று, உங்களுக்கு வழங்கப்பட்ட பணி ஆணைக்கு அப்பாற்பட்டது. நீங்கள் சர்வதேச சிவில் சேவையாளர் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை நியமங்களை மீறிவிட்டீர்கள் எனவும் பதில் செயலாளர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## குண்டு...

குறித்த பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் புதைக்கப்பட்டிருந்த ஏ.பி. (அன்டி பேர்சனல்) ரக நிலக் கண்ணி வெடியொன்றே வெடித்துள்ளது. சம்பவத்தில் லலித் தாமர (வயது - 27) என்ற இராணுவ வீரரே காயமடைந்துள்ளதாக பலாலி இராணுவ தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கைதான...

புனர்வாழ்வு நிலையத்துக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு சுமார் இரண்டு மாதங்களாக புனர்வாழ்வளிக்கப்பட்ட நிலையில் அவர்களில் இருவர் இன்றைய தினம் விடுவிக்கப்படவுள்ளனர். இவர்களை அழைத்து வருவதற்காக பல்கலைக்கழக நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த இருவர் வெலிகந்தைக்கு பயணமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 48 மணி...

பிரசுரங்கள் விநியோகிக்கப் பட்டன.

இந்தச் சட்டம் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் முன்னிலை சோஷலிச கட்சியினரால் இந்தத் துண்டுப் பிரசுரங்கள் கொழும்பு, கோட்டை பகுதியில் வைத்து விநியோகிக்கப்பட்டன.

குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) இரண்டாம் மதிப்பீடே நாடாளுமன்றத்திற்கு இன்று கொண்டுவரப்படவுள்ளது. இந்தச் சட்டமூலம் 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொன்...

வைத்து கைதானார் என்றும், விமான நிலையத்தில் கைதானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் அவரது கைது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை.

கடந்த 13 ஆம் திகதியிலிருந்து அவருடன் எனக்குத் தொடர்பிருக்கவில்லை என்றார்.

கட்சி ஆதரவாளர் அ. வேழமாலிகிதன் கைது தொடர்பில் கூறியபோது, 14 நாட்களின் பின்னரே அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார். அதன்போதே நடவடிக்கை எடுக்கமுடியும்.

அத்துடன் கைதான வசந்தன் என்பவருக்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றார்.

இதேவேளை பொன்.காந்தன் வெளிநாடு ஒன்றிற்கு செல்வதற்காக கட்டுநாயக்க 'விமான நிலையம் சென்ற வேளை, அங்குவைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

## இலங்கை...

அமைக்கப்படுவதும் மீள் வழங்கப்படுவதும் இராணுவ முகாம்களுக்காகவே. தமிழர்கள் இவற்றால் நன்மையடைவதில்லை.

புலிகளோடு இருந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து விடுவித்த பின்னர் இப்போது மீண்டும் அவர்களை கைது செய்கின்றனர். எங்கு பார்த்தாலும் இராணுவ சோதனைச்சாவடிகள் காணப்படுகின்றன.

தமிழ் இளைஞர்களை அரசாங்கம் துரத்திவிட நினைக்கின்றது. தமிழர்கள் யாவரும் சந்தேக நபர்களாக்கப்பட்டுள்ளனர். இதை நாம் கூறினால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதையும் பெரிதுபடுத்துவதாக கூறுகின்றனர். வடமாகாணம் பலஸ்தீனம் போல ஆகிவிட்டது. அது எதிரிகளிடமிருந்து பிடிபட்ட இடமாகிவிட்டது.

தமிழ்த் தலைவர்களையும் இலங்கை அரசாங்கத்தையும் ஒன்றுபட வைக்கும் தென்னாபிரிக்காவின் முயற்சிக்கு இலங்கை ஆதரவளிப்பது போல காட்டி சர்வதேச சமூகத்துக்கு தாம் பிரச்சினையை தீர்க்க விரும்புவது போல காட்டுவதற்கு மட்டும் தான் என நாம் நம்புகின்றோம்.

இலங்கை அரசாங்கம் தமிழ் பிரதிநிதிகளுடன் மனப்பூர்வமாக பேசுவதில்லை என்பதே உண்மை. அவர்கள் எம்மோடு பேச விரும்பவில்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எமது பிரச்சினைகளை முன்வைக்கும்படி கூறுகின்றனர்.

ஆனால், இந்த குழு சிங்கள கட்சிகளின் ஆதிக்கத்தில் உள்ளது. அவர்கள் எமக்கு எதையும் தரப்போவதில்லை. நேரிடையாக கூறினால் இதய சுத்தியோடு அவர்கள் பேச விரும்புவதில்லை என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஷிராணிக்குச் சார்பான வழக்குகள் மொஹான் பீரிஸின் பரிசீலனைக்கு

## உயர் நீதிமன்றத்தில் தணல்தட்டும் விவகாரம்

(கொழும்பு)

பதவி நீக்கப்பட்ட தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான நாடாளுமன்றக் கண்டனத் தீர்மானத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நான்கு மனுக்கள் தொடர்பில் அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அவற்றை புதிய தலைமை நீதியரசரிடம் சமர்ப்பிப்பதற்கு உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கடந்த மாதம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த மனுக்கள் நேற்று நீதிமன்றத்துக்கு வந்தபோது கருத்து முன்வைத்த அரசதரப்பு சட்டத்தரணி, ஐந்து நீதியரசர்கள் அடங்கிய குழு முன்னால் மனுக்களை விசாரிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அது தொடர்பான தீர்மானமொன்றை எடுப்பதற்காக மனுக்களை புதிய தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸ் முன்னால் சமர்ப்பிக்குமாறு அரசதரப்பு சட்டத்தரணி கூறினார்.

ஆனால், அந்த கோரிக்கைக்கு ஆட்சேபணை தெரிவித்த மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணிகள், புதிய தலைமை நீதியரசரின் நியமனம் சட்டத்துக்கு புறம்பாக நடந்துள்ளது என்றும் குறித்த மனுக்களை விசாரிப்பதற்கு அவருக்கு அதிகாரங்கள் இல்லையென்றும் வாதிட்டனர்.

எனினும் அரசதரப்பு சட்டத்தரணியின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், மனுக்களை புதிய தலைமை நீதியரசரிடம் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானித்தனர்.

# அரசியலில் ஈடுபடும் திட்டம் இல்லை என்கிறார் சரத்



அரசியலில் ஈடுபடும் திட்டம் கிடையாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். ஓய்வுக் காலத்தை அமைதியான முறையில் கட்டான பிரதேசத்தில் அமைந்துள்ள தமது தோட்டத்தில் கழிக்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலில் ஈடுபடவோ அல்லது அரசாங்கத்தின் பதவிகளைப் பெற்றுக்கொள்ளவோ விரும்பியதில்லை. எனினும், சட்ட ஆலோசனை பெற்றுக் கொள்ள விரும்புவோருக்கு உதவிகளை வழங்கத் தயார்.

சில ஊடகங்கள் தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் தகவல்களை வெளியிட்டுள்ளன. அத்துடன் அரசாங்கத்தின் எந்தவொரு பதவியையும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை எனவும் அவர் அறிவித்துள்ளார்.

# சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல் கண்டித்து கையெழுத்து வேட்டை



(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு ஆதரவாகச் செயற்பட்ட சட்டத்தரணிகளுக்கு இனந்தெரியாத நபர்களினால் விடுக்கப்பட்ட கொலை அசசுறுத்தலை எதிர்த்தும் தமது கண்டனத்தை தெரிவித்தும் இதற்குக் காரணமானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தக்கோரியும் நேற்றையதினம் சட்டத்தரணிகளினால் கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்த கையெழுத்து வேட்டை புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்கு எதிரில் இடம்பெற்றது. இதன்போது சட்டத்தரணிகள் குறித்த அச்சுறுத்தல் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தமது கையெழுத்துக்களை இட்டனர்.

இதேவேளை புதிய தலைமை நீதியரசரின் வரவேற்பு விழாவில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கலந்துகொள்ளாது என மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

## பிரதித் தலைவர் யார்? ஐ.தே.க. கட்சிக்குள் சர்ச்சை

ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவராகவும் தேசிய அமைப்பாளராகவும் முறையே ஜோசப் மைக்கல் பெரேரா மற்றும் தயா கமகே ஆகியோர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் நேற்று திங்கட்கிழமை மாலை கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்றது. இதன்போதே இந்த பதவிகளுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

எனினும் பிரதி தலைவர் பதவிக்கு எவரும் இன்றைய செயற்குழுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

# புனர்வாழ்வு அளிக்கப்படாமல் 1200 புலிகள் தலைமறைவு வாழ்க்கை

ஆயிரத்திற்கும் மேற்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் தொடர்ந்தும் தலைமறைவாக வாழ்ந்து வருவதாக பாதுகாப்பு தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் சரணடையாத, படையினரால் கைது செய்யப்படாத விடுதலைப் புலி உறுப்பினர்களின் எண்ணிக்கை 1200 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு இன்னமும் புனர்வாழ்வு அளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் சுமார் 400 பேர் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.ஏனையவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. புனர்வாழ்வு அளிக்கப்படாத முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களை கைதுசெய்து அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க பாதுகாப்புத் தரப்பினர் முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

# குற்றவியல் பிரேரணை குறித்து அமெரிக்கா இரட்டைவேடம்

## பிரதி சபாநாயகர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அரசியல் குற்றவியல் பிரேரணை தொடர்பாக அமெரிக்கா இரட்டைவேடம் போட்டு செயற்படுவதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

காலி - ஹக்மீமன பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதிச் சபாநாயகர் சந்திம வீரகொடி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நாட்டில் உள்ள அனைவருக்கும் ஒரே சட்டமே உள்ளது. உயர் அதிகாரிக்கு ஒரு சட்டம், விவசாயிகளுக்கு ஒரு சட்டம் என்று இரண்டில்லை. இலங்கையில் பிரதம நீதியரசருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது அமெரிக்கா அதனை விமர்சித்திருந்தது.

1993 ஆம் ஆண்டு அமெரிக்காவிலும் இதுபோன்ற ஒரு சம்பவம் இடம்பெற்றது என்பதை அவர்கள் மறந்து விட்டார்களா என்றும் அவர் கேள்வி எழு[illegible]ள்ளார்.

# தொற்றா நோய்க் கட்டுப்பாடு சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

தொற்றாத நோய்களை கட்டுப்படுத்தும் நோக்கில் 2013 ஆம் ஆண்டை தொற்றாத நோய்களை கட்டுப்படுத்தும் ஆண்டாக பிரகடனப்படுத்த சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார். தொற்றாத நோய்களினால் நாடு தற்போது பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நாளொன்றுக்கு தொற்றாத நோய்களினால் 650 பேர் உயிரிழக்கின்றனர். போஷாக்கற்ற உணவுகளை உட்கொள்ளுதல் உடல்நலம் குறித்த உரிய முறையில் கவனத்திற் கொள்ளாமை மற்றும் புகையிலை பேதைப்பொருள் பயன்பாட்டினால் நாளொன்றுக்கு சுமார் 150 இதய நோயாளர்கள் உயிரிழக்கின்றனர். அத்துடன் மூச்சு திணறல் மற்றும் புற்றுநோய் ஆகியன வெகுவாக அதிகரித்துள்ளதென சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இளைஞன் மீது வாள்வெட்டு நெடுந்தீவில் சம்பவம்

நெடுந்தீவு பகுதியில் இனந்தெரியாத நபர்கள் வாள்வெட்டினை மேற்கொண்டதில் படுகாயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நெடுந்தீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமலேஸ்வரன் (வயது-30) என்ற இளைஞன் மீதே இனந்தெரியாத நபர்கள் வாள்வெட்டினை மேற்கொண்டுள்ளனர். நேற்றுமாலை 6.30 மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வாள்வெட்டில் படுகாயமடைந்த குறித்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

# மொழி அமுலாக்கலில் பிரச்சினையா? தாமதமின்றி முறையிட வாய்ப்பு

நாட்டில் எப்பாகத்திலும் மொழி சம்பந்தமாக பிரச்சினைகள் வருமிடத்து 1956 என்ற இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாட்டினைப் பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைக்கான அமைப்பின் கீழ் இயங்கும் மொழிச் சங்க உறுப்பினர்களுக்கான அனுபவப் பகிர்வு கடந்த 17 ஆம் 18 ஆம் திகதிகளில் திருகோணமலை - கந்தளாய் இளைஞர் மன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு விளக்கமளிக்கும் போதும் மாற்றுக் கொள்கைக்கான அமைப்பின் பணிப்பாளர் சட்டத்தரணி லயன்ல் குருகே தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த மொழிச்சங்க உறுப்பினர்களின் அனுபவப்பகிர்வும் கலந்துரையாடலும் இதன்போது இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கந்தளாய் பிரதேச சபை தவிசாளர், மற்றும் மாறுக்கொள்கைக்கான அமைப்பின் பணிப்பாளர் சட்டத்தரணி லயனல் குருகே, வடகிழக்கு மாகாண மொழிச்சங்க ஒருங்கிணைப்பாளர் சுரேஸ் மற்றும் மட்டக்களப்பு திருகோணமலை மற்றும் மாவட்டங்களைப் பிரதிநிதித்தவப்படுத்தும் மொழிச்சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# 7 தமிழ் அகதிகள் நாடு திரும்ப விருப்பம்

அவுஸ்திரேலியாவில் இருந்து மேலும் ஒரு தொகுதி இலங்கை அகதிகள் நாடு திரும்ப விருப்பம் வெளியிட்டுள்ளனர். அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை பேச்சாளர் ஒருவர் இதனை உறுதிசெய்துள்ளார்.

இவ்வாறு பேர்த் நகரில் இருந்து ஏழு தமிழ் அகதிகள் கொழும்பை நோக்கி பயணிக்க விருப்பதாக அவர் தெரிவித்தார். இவர்களுடன் சேர்த்து இதுவரையில் 942 அகதிகள் அவுஸ்ரேலியாவில் இருந்து இலங்கைக்கு நாடுதிரும்பியுள்ளனர்.

அவர்குளில் 231 பேர் சுயவிருப்பத்துடன் நாடு திரும்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்க இராஜதந்திரிகள் அதிக கவனம் செலுத்தியது எங்கே?

## நீதித்துறையில் அக்கறையில்லை

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூன்று உயர்மட்ட அதிகாரிகளின் வருகைக்கும், நீதித்துறை மாற்றங்கள் தொடர்பான அண்மைய நிகழ்வுகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று சிறீலங்காவின் வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்தவாரம் கொழும்பு வரவுள்ள அமெரிக்க உயர்மட்டக் குழுவின் பயணம் பல மாதங்களுக்கு முன்னரே, திட்டமிடப்பட்டது. இது ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலானது. என்று அவர் மேலும் கூறியுள்ளார். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், தெற்கு, மத்திய ஆசிய விவகாரப் பிரிவில் பிரதி உதவிச் செயலர் நிலையில் உள்ள விக்ரம் சிங், ஜேம்ஸ் மூர், ஜேன் சிம்மமன் ஆகியோர் வரும் 26 ஆம் நாள் தொடக்கம் பெப்ரவரி 1 ஆம நாள் வரை இலங்கை மற்றும் மாலைதீவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.